42401
MARAIMALAI ADIGAL LIBRARY

ஆதிபுங்கவன் துணை.

திருவள்ளுவர் அருளிச்செய்த

# திருக்குறள் அந்தாதி.

(மூலமும், உரையும்)

இஃது

சைனிக மித்திரன் பத்திராதிபர்,

இராசிபுரம் R. K. அரங்கசாமி அவர்களால்

அந்தாதித் தொடையும், உரை பகுதியும்

அமைக்கப்பட்டு,

இராசிபுரம் ஸ்ரீ முருகன் அச்சகத்தில்

பதிப்பிக்கப்பட்டது

15—3—1946.

பதிப்புரிமை அந்தாதி ஆசிரியருடையதே.

இதன் விலை அணா 0—10—0.

M. I. P. PROJECT
Microfilmed.

# உதிப்புரைகள்.

மகா மகோபாத்தியாய பண்டிதமணி

## மு. கதிரேசஞ் செட்டியாரவர்கள்

இராசிபுரம் திருவாளர். R K. அரங்கசாமி அவாகள் திருக்குறட் செய்யுட்களில் 151 செய்யுட்களை அந்தாதித் தொடரில் இயைபுதுப், அகர வரிசை முதலியவாகக் கோவை செய்துப், அவற்றிற்கு உரையெழுதியும், வெளியிட்டிருப்பதைப் பார்த்தேன். அந்தாதித் தொடரில் அமைக்கப்பட்டவை கற்பவர் மறவாமல் நினைவில் பதித்துக் கொள்வதற்கு உதவியாகும். அங்ஙனமே மற்றைய பகுதிகளும் மாணவர்களுக்கு பயன்படும் முறையில் அமைந்துள்ளன. இதன் வெளியீட்டாளர்க்குத திருக்குறளில் வரம்பிகந்த அன்பு உள்ளதென அறிந்து மகிழ்கின்றேன், திருக்குறளில் தாம்பெற்ற இன்பத்தை மற்றைய அன்பரும் பெறவேண்டும் என்னும் நன்னோக்கமே இதன் வெளியீட்டுக்குக் காரணமாகும். இவ்வாசிரியர் இன்னும் இத்தகைய கலைப்பணியால் தமிழ் மக்களுக்கு நல்லுதவி புரிந்து நீடு வாழ்க எனத் திருவருளை முன்னிட்டு வாழ்த்துகின்றேன்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
1—4—46.

மு. கதிரேசன்.

சென்னை பல்கலைக் கழகத் (யூனிவர்சிடி) தமிழ்ப் பேராசிரியர்
ராவ்சாகேப் உயர்திரு.

## S. வையாபுரிப் பிள்ளை B. A., B. L.

அவர்கள்

திருவள்ளுவரது தெய்வத் திருக்குறளின் பெருமை உலகறிந்தது. சிறுவர், சிறுமிகள் முதல் வயது முதிர்ந்தவர்கள் வரை இதனைக் கற்றல் பெரிதும் அவசியம். பலவகைப்பட்ட ஒழுக்க நெறிகட்கும் இப்பெரு நூல் பயன்படுவதாகும். குறட் பாக்களிற் சிலவற்றை அந்தாதியாகத் தொகுத்து இச் சிறு நூலை திரு. R K அரங்கசாமியார் வெளியிட்டுள்ளார். நினைவிலே இருத்தற்கு அந்தாதி முறை மிகவும் ஏற்றது.

இவ் வந்தாதி முறையில் மட்டுமின்றி, அகராதி வரிசையிலும் சில குறட் பாக்களை தொகுத்திருக்கிறார். மேலும் சில ஒழுக்க நெறிகள் பற்றிய சில குறள்களைத் தேர்ந்து தந்திருக்கிறார்.

இங்ஙனம் பலபடியாகத் தொகுக்கப்பட்ட குறள்களுக்கு ஒரு சிற்றுரையும் இந்நூற் பதிப்பாளர் வரைந்து உள்ளார். இவ்வுரை தெளிவாயும், சுருக்கமாயும் அமைந்திருக்கிறது. எனவே எல்லோருக்கும் மிகவும் பயன்படத்தக்கது. இச்சிறு வெளியீட்டினைத் தமிழ் மக்கள் ஆதரிப்பார்களென நம்புகிறேன்.

சென்னைப் பல்கலைக் கழகம்,
20—3—46

**எஸ். வையாபுரிப் பிள்ளை.**
தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவர்.

## திருக்குறள் குமரேச வெண்பாவின் நூலாசிரியரும், புலவர் உலகம் தரும தீபிகை பத்திராதிபருமான உயர்திரு. *மதுரை கவிராஜ பண்டித*

# *ஜகவீரபாண்டியனார் அவர்கள்*

---

அன்புள்ள ஐயா, தாங்கள் அன்புகூர்ந்து அனுப்பிய "திருக்குறள் அந்தாதி உரை"யைப் படித்துப் பார்த்தேன். எளிய நடையில் தெளிவாக எழுதியிருக்கிறீர்கள். திருவள்ளுவப் பெருமான் அருள்மொழிகளை நம்நாட்டு மக்கள் எல்லாரும் நாளும் நன்கு சிந்தித்துப் புனிதவாழ்க்கை யுடையவராய் இனிது உயர வேண்டும் என்னும் குறிக்கோளோடு இத்தொகுப்பும் உரையும் அமைக்கப்பட்டுள்ளன. நீதி ஒழுக்கங்களைக் கடைபிடித்து நெறிமுறையே சமூகம் உன்னத வாழ்வு பெற நம் முன்னோர் ஓதிவைத்துள்ள உறுதி நலங்கள் பல. அவ்வுயர்வு நலங்களை மறந்து காலவேற்றுமையால் அவல நிலைகளில் தடுமாறி நிற்கும் சமுதாயத்துக்குத் தேவருடைய அமுத மொழிகளை எவ்வளவு எடுத்து ஊட்டினும் அவ்வளவும் அருள்நலம் கனிந்த சிறந்த கொடையாய் உயர்ந்து விளங்கும் தாங்கள் ஊக்கமுடன் முயன்று வெளியிட்டிருக்கும் இந்நூலும், உரையும் எங்கும் பரவி இனிது பயன்படும்படி திருவருளை சிந்தித்திருக்கின்றேன்.

*மதுரை,*
13—3—46.

*இங்ஙனம்,*
ஜகவீர பாண்டியனார்.

# The Provincial Hand-loom Weavers Co-operative Society, MADRAS.

It is a matter for appreciation that Mr R. K. ARANGASWAMY belonging to a weaving community, should come forward to publish the THIRUKKURAL ANTHATHI of the divine poet from weavers' community. This has been composed in this style to facilitate encouraging by young students and his notes in the end are written in a simple style. Such endeavours on his part and workers to revive the greatness of Tamil and Tamil Peryars deserve every encouragement at the hands of every and in general and Tamilians-particular.

நெசவாளர் வழித்தோன்றிய தெய்வப் புலவர் திருவள்ளுவர் அருளிய திருக்குறளினின்று அவ்வகை நெசவாளராகிய திரு. R. K. அரங்கசாமி திருக்குறள் அந்தாதி என்னும் நூலை தொகுத்தது பதிப்பிற்குரியதாகும். இளம் மாணாக்கர்கள் கற்க ஊக்கமும் சிபார்சும் செய்வதற்காகவும் இத்தகைய எளிய நடையில் வரையப்பட்டுள்ளது. தமிழுடைய பெருமையும், தமிழ் பெரியார்களுடைய பெருமையும் மறுமலர்ச்சி அடையுமாறு செய்யும் அவர் முயற்சிகள் தமிழர்களால் ஊக்கமும் ஆதரவும் அளிக்க தகுந்தவைகளாகும்.

J. Balasundara Mudaliar Avl

*Businss Manager,*

ஆசிரியர் புலவரேறு

# அ. வரதநஞ்சைய பிள்ளை அவர்கள்.

---

உலகப் பொதுமக்களின் இம்மை வாழ்க்கையை மிக உயர்நிலையில் நிறுவி, மறுமைப் பயன்களைப் பெற்றுச் சிறப்புற வழிகாட்டிப் பல்வேறு வகைப் பிளவுப்பிணங் கறுத்து இடந்தரும், சாதி சமய முரண்களை அகற்றி, மெய்ந்நெறியிற் செலுத்தி, எந்நிலையிலும் இன்பம் பெறும் வழிகள் கூறி, அறிஞர்கள் யாவரும் புகழ்ந்து போற்றித் துதிக்கும் இணையற்ற பெருஞ்சிறப்புற்று, தமிழ் மொழிக்கும், தமிழருக்கும், ஏற்றந்தருதற் கென்றே தோன்றிய ஒருபெருநூல் திருவள்ளுவர் திருக்குறளேயாம். இந் நூலைப்பாராட்டாதார் உலகில் எவருமிலர் இறைவனருளியதெனப்படும் வடமொழி மறையினும் சிறந்தது இதுதென்மொழித் திருமறை எனினும் ஒக்கும்.

இத்தகு சிறப்பிற்குரிய இந் நூலின் சொற்களையும், பொருள்களையும், எடுத்துத்தமது நூற்களில் வைத்துச் செய்யுள் செய்தாரும் பலரே, பல்வகை உரைகளைக் கருத்து வகையால் எடுத்துக் காட்டியோரும் பலரே, இந்நூலை ஆராய்ச்சி செய்து அறிதோறறியாமை கண்டு புதுப்புதுக் கருத்துக்கள் தோன்றக் காட்டுவோரும், காண்போரும் பலரே. இவ்வகையில் திரு R.K. அரங்கசாமி யென்னும் தமிழ்ப்புலவர் பெருமான் ஒவ்வோர் குறளின் ஈற்றடிச் சொல்லும் எழுத்தும் அந்தாதியாக வருவன வற்றை ஆராய்ந்தெடுத்துத் திருக்குறள் அந்தாதியென்னும்

போல் ஓர் நூல் வெளியிட்டு எம் பார்வைக்கு அனுப்பினர் இவ்வாராய்ச்சி நாம் எதிர்பாராத புதுமைகளுள் ஒன்றாகும். இங்ஙனம் அமைத்த 151-செய்யுட்களின் பின் நூல் என்று வருவனவும் அகர முதல் ஆய்தம் ஈறாக உள்ள எழுத்து வரிசையில் தொடங்குவனவும், உடலுயிர் உறுப்புக்களின் செயல் காட்டுவனவும், உலகென்னும் சொற்பயின்று வருவனவும், ஆகிய சில பல குறட்பாக்களையும், ஒழுங்குற எடுத்துக் காட்டியுள்ளார். இக் குறட்பாக்களுக்கு பொழிப்புரையும், சிலவிடங்களில் கருத்து விளங்க விரித்துரையும், காட்டிச் சுருங்கிய சொல்லால் நயம்பெற உரைக்கின்றார் பின்னர்,

இந் நூலின் பொருளடக்கம் என்னும் தலைப்பில் அவ்வவ்வதிகாரப்பொருண்மையைக் குறித்து உரைநடையில் விளக்கியுள்ளார். எம் உள்ளத்தைக் கவரும் இவ்வாராய்ச்சிமுறை சிலமுறை இந்நூலைத் திருப்பித் திருப்பிப் படிக்குமாறு எம்மைச் செலுத்தியது. தமது பழங்காலப் பெருமையையும், ஆடவர், மகளிரின் நன்மனப்பான்மையும வாழ்க்கையின் உயரியக் குறிக்கோள்களையும் உணராத தமிழர்களை உறக்கத்தினின்றும், எழுப்பும முரசொலிபோலும் இந் நூல் நடை எனக்கருதி மகிழ்கின்றோம். இந்நூலாசிரியர் இவ்வாறே திருக்குறளை பன்முகத்தானும், பல்வகையானும் ஆராய்ந்து இம்மை, மறுமை உறுதிப்பயன் பெற்றுத் தமிழ் நாடு உய்யும வண்ணம், பல நூல்கள் வெளியிட ஊக்கமுடையாராதல் வேண்டி எதிர் நோக்குகின்றனம்.

இவ்வாராய்ச்சியாற் பல நன்மைகள் வருங்காலத்தில் விளைந்துமக்களோடு மக்கள்பகையும், பிரிவும், வஞ்சகமும் பொறாமையும் கொண்டு கருத்து வகையால் பிளவுறாமல் 'யாதும் ஊரே யாவருப் கேளிர்' என உண்மைகள்* உணர்த்தியதொல்லோர்கருத்தின் வழியொழுகி அடிமைத் தளையை அறநீக்கி, அறநிலைவாழாது நல்லாற்றுற்பொருள் தேடிமறுமையின்பம் கிட்டுமெனற்கு அறிகுறியாக இம்மையிலின்பம் இழுக்காதடைந்து நல்வாழ்வு பெருகுவதாக, இந் நூலாசிரியர் திருக்குறளின் பலபாகங்களையும், துருவி முறைபடக்கோத்துப் பற்பல வெளியீடுகளை உதவி தாம் கற்ற தமிழாலாம் பயனைப்புகழோடு பெற்று நீண்டநாள் இன்ப வாழ்வு வாழ்வாராக என எம் பணயாந்த செபபலாம் முருகனை மனமொழி மெய்களாற் கருதி வாழ்த்தி வணங்குகின்றேம்.

தோரயங்கலம்,
ஜயங்கொண்டபுரம்,
29—3—46.

அ. வரதநஞ்சைய பிள்ளை.
ஆசிரியர், புலவரேறு.

# தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகப் புலவர் உயர்திரு

# இளவழகனார் அவர்கள் சென்னை.

திருக்குறள் உலகுக்கு ஒரு நூல்; பொது நூல்; தமிழ் நூல்; அற நூல். திருக்குறளுக்குத் தொண்டுசெய்வது உலகுக்குத் தொண்டு செய்வதே. திருக்குறளுக்கு எவ்வளவோ தொண்டுசெய்ய வழிகள் உள்ளன. தக்கோர் முன்னுஞ் செய்துள்ளனர், இன்னும் செய்கின்றனர்.

இராசிபுரம் திருவாளர் R K. அரங்கசாமியார் சிறந்த உணர்ச்சியாளர். புதுமை பேணியவர். திருக்குறளுக்குப் பற்பல தொண்டு செய்யும் நினைவினர். அந்நினைவின் முதலுருவமே இந்த "திருக்குறள் அந்தாதி" எனத் தெரிகிறது.

ஈதொரு புதுவகை அமைப்பு. சில திருக்குறள் மணிகளை எளிதில் நெட்டுருச் செய்துகொள்வதற்கு உதவும். இந்நூலின் பிற்பகுதியாக உள்ள பிற அமைப்புகளும், உரைகளும், தொகுப்பின் அமைவுகளும் பயன்படத் தக்கன, கற்போர்க்குத் தெளிவு உண்டாகும் வகையில் உரை விளக்கம் அமைந்துள்ளது.

தொகுப்பாளரின் ஊக்கமும் முயற்சியும் பாராட்டுதற்குரியன. நாடு இத்தகையோர்க்குமேன்மேல் ஊக்கமும் ஆக்கமும் பெருக்குதல் இன்றியமையாதது. அதனால் இந்நூல், மொழிநலம் கருத்துவளம் முதலிய பல்வகை அழகுகளிலும் மேன்மேற் பதிப்புகளிற் செம்மையுற்றோங்குதற்கும் இடமுண்டாகும்.

சென்னை,<br>25–3–46

இளவழகன்.

# யோகி சுத்தானந்த பாரதியார்

## அவர்கள்.

அன்பீர்!

திருக்குறள் அந்தாதி நன்றாகத் தொகுக்கப் பெற்றிருக்கிறது. இத்தொகுப்பு தமிழுக்குப் புதிது. உலகத் திருமறையாகிய திருக்குறளை எளிதாகப் பாடம்பண்ணி நினைப்பில் வைத்துக்கொள்ள இம்முறை பயனுறும்.

கரும்பை எத்தனை வகையாகச் சுவைத்தாலும் இனிமை தரும். கற்கண்டை எங்கே கடித்தாலும் தித்திக்கும். திருக்குறளை எவ்வகையில் நுகர்ந்தாலும் வாழ்விற்கு இன்பமுண்டு. தங்கள் முயற்சி பொலிக.

வள்ளுவர் செந்தமிழ் வேதம்—அது
மாந்தர்க் கெல்லாம் பொதுமறை யாகும்
உள்ளுற ஒன்றி யெல்லாரும்—இதை
ஓதி யொருகுல மாகநாம் வாழ்வோம்.

ஓம் சிவம்:

**சுத்தானந்த பாரதி.**

சென்னை பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் உயர்திரு

## ரா. பி. சேதுப்பிள்ளை B. A., B. L.,

அவர்கள்.

தமிழ் நாட்டாருக்கு ஒன்றுக நல்லது திருக்குறள் அந்நூலை அந்தாதி வகையிலும், அகர வரிசையிலும், பிற முறைகளிலும் தொகுத்து உரையோடு வெளியிட்டிருத்தல் இக்காலத்திற்கு மிகவும் பயனுடையதாகும்.

சென்னை யூனிவர்சிடி, 4—4—46. } ரா. பி. சேதுப்பிள்ளை.

சேலம் கல்லூரித் தலைவர் (பிரன்சிபால்) உயர்திரு.

## A. இராமசாமிக் கவுண்டர் M. A., L. T.,

அவர்கள்.

திரு R. K. அரங்கசாமி அவர்களால் வெளியிடப் பெற்ற **திருக்குறள் அந்தாதி** என்ற குறள் திரட்டு 195-குறட்பாக்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இதனுள் 151-குறட்பாக்கள் பெரும்பாலும் அந்தாதி முறையில் தரப்பட்டுள்ளன. இவற்றை மனப்பாடம் செய்து வரிசையாகப் பாராமல் சொல்லுவதற்கு இம்முறை பெரிதும் பயன்படும் என்பது வெளிப்படை.

எளிய நடையில் எழுதப் பெற்றுள்ளதால் இப்புத்துரை எல்லார்க்கும் பயன்படுமென நம்புகிறேன். அன்பர்கள் இதனை ஆதரிப்பார்களாக.

சேலம் கல்லூரி, 26—3—46. } இங்ஙனம், A. இராமசாமிக் கவுண்டர்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சென்னைப் பல்கலைக் கழகப் புலவர் உயர்திரு

# முத்து சு. மாணிக்கவாசகன்

அவர்கள்.

சேலத்து, இராசிபுரத் திருவாளர் அரங்கசாமி அவர்கள், எவரும் எண்ணாத தொன்றியறறிப் பழையதைப்புதியதாக்கிய புலவர்க்கும், அல்லார்க்கும் உணர்ச்சி விருந்தளித்தார் "திருக்குறளந்தாதி" என்னும் பெயரைக் கேட்போர் திருக்குறட்பாட்டொன்றனைக் கொண்ட புதுப்பாக்களையுடையதொரு நூலெனக் கருதலுங்கூடும். குறட்பொருளடங்கிய அந்தாதி நூல் எனினும நேரும். பார்த்தவரே அன்பர் கருத்தின சிறப்பையுணர்ந்து மகிழ்ந்து வியப்பர். திருக்குறள் எலலா வகையிலும் பல்லோர்க்கும் பயன்படுமாறு செய்தல தமிழறிஞர் கடமைக்குரித்து.

அன்பர் கருத்து இத்தகையபுதுவழிகளில் நுழைந்தது தமிழுக்குப் பெருநலம பயக்கும் என்று கருதுகிறேன்.

**திருக்குறள் வாழ்க!** **தமிழ்ப் புலவர் வாழ்க!!**

**தமிழகம் வாழ்க!!!**

ஆரணி,
17-3-46.

அனபுளள,

முத்து சு. மாணிக்கவாசகன்.

# சாற்றுக்கவிகள்

## இராசிபுரம் கலை வளர்ச்சிக் கழக ஆசிரியர்

## திருத்தகு: இராசைக்கவி S. மல்லிகார்ச்சுனன்

## அவர்கள்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

ஒள்ளிய அறிவின் மிக்கார் உலகெலாம் வணங்கும் நீதி
கொள்ளுமர் தமிழர் தங்கள் கொள்கையை விளக்கி மேன்மை
விள்ளுமெய்ஞ் ஞான மோங்கு வள்ளுவப் பெயர்கொள் வள்ளல்
தெள்ளிய தமிழில் செய்ய திருக்குறள் முதனூல் செய்தார்

அப்பெருப் நூலி னுண்மை யறிந்துமே தெளிந்து நாளும்
இப்புவி தனில்ந டக்க விராசைமா நகரில் வாழ்ந்தத்
தப்பிலா கிருஷ்ண சாமி தவப்பெரும் புதல்வ னெங்கள்
ஒப்பிலா மணியே யாகி யுவப்புறும் அரங்க சாமி

யாவரும் பாவி யாண்டும் இசைபெறுங் குறளை யாய்ந்தே
பாவலர் புகழந் தாதி பண்புற வுடலு ரைப்பு
காவலர் அரசு நீதி கடிமணம் கொடைநல் வாழ்க்கை
நாவலர் விரும்பு மாறு நயம்பட வகுத்துக் காட்டி

குறையிலா வகையில் யாரும் குறைவிலா தாரா வேண்டி
முறைமுறை குறளை வைத்தம் முறையையா வுரையுங் கண்டான்
பொறைமிகு புலவர் போற்றும் பொன்முடி பொன்னு சாமி
மறைமுறை தெரிந்த வண்ணால் மாணவன் மதிவல் லோனே.

ஆசிரியர்:
கலை வளர்ச்சிக்
கழகம், இராசிபுரம்.

இங்ஙனம், இராசைக்கவி
S. மல்லிகார்ச்சுனன்.

ஸ்ரீ முருகன் பிரஸ், இராசிபுரம்.-S 13 C 500. 9-4-46.

நாமக்கல் தேசியகவி உயர்திரு:

## வெ. இராமலிங்கம் பிள்ளை, அவர்கள்,

உலகுக் கெல்லாம் ஒருநூல் இதுவென
பலமொழி பயின்றுள பலநாட் டறிஞரும்
ஏற்றுப் புகழ்ந்து எல்லா மொழியிலும்
மாற்றிப் படித்து மகிழ்த்திட நிற்பதாய்
தமிழ்மொழிக் கழியாத் தனிச்சிறப் பீந்து
அமிழ்தின் நலமுற அறம்பொருள் இன்பம்
முப்பால் அறங்களை முறையுடன் வகுத்து
எப்பா லவர்க்கும் எளிதே உரித்தென
தருக்கவுந் தகுந்த தமிழ்மறை யாகிய
திருக்குறள் என்னும் தெய்விகப் பனுவலை
ஆயிரம் இரண்டுள ஆண்டுக ளாகப்
பாயிரம் புகழ்ந்தோர் பலகோடி அறிஞர்கள்
எத்துணை விதங்களில் எப்படிப் புகழினும்
அத்துணைச் சிறப்பும் அதற்குப் பொருந்தும்
ஆதலின் ஆர். கே. அரங்க சாமியாம்
ஒரு புலவன் இராசீ புரத்தவர்
தாய்மொழிப் பணியே தவமெனத் தாங்கி
வாய்மையின் ஒப்பிலா வள்ளுவன் குறளை
அந்தாதிக் கவிதைபோல் அணிபெற அடுக்கி
முந்தாரும் என்னுத புதியதோர் முறையில்
கற்றவர் உவக்கக் கல்லா தவர்களும்
முற்றிலும் பயன்பெறச் செய்துள முயற்சிகள்
குறைவிலா தோங்கி குறிக்கோள் எய்திட
இறைவனை வணங்கி இன்புற வாழ்த்துவோம்.

அன்புள்ள,

வெ. இராமலிங்கன்.

**இராசீபுரம் திருவேங்கட விலாஸ் பாடசாலைத் தலைவரும்,**
**ஸ்ரீ அரவிந்த கோஷ் நூலாசிரியருமான,**
**திரு. ஆ. இராமசாமி அய்யா அவர்களின்,**

# முகவுரை.

உலகத்திற் சிறந்து விளங்கும் நூல்களில் தலைமை வாய்ந்தது திருக்குறள் என்று அறிஞர் பலரும் பாராட்டுகின்றனர். எந்நாட்டிலும் எக்காலத்திலும் தோன்றியிராததும் தனிச் சிறப்பு வாய்ந்ததுமான திருக்குறள் நம் தமிழ் நாட்டில் தமிழ் மொழியில் தோன்றியது தமிழ் மக்களின் தவப்பயனேயாம் எனின் அது மிகையாகாது.

இவ்விதத் தனிச்சிறப்பு வாய்ந்த திருக்குறளுக்குப் பதின்மர் உரை வரைந்தாராயினும் அவற்றுள் இரண்டு உரைகளே தற்போது யாவருக்குங் காணக் கிடைப்பனவாயுள்ளன. அவ்விருவகை யுரைகளும், ஐயந்திரிபறக் கற்ற பண்டிதர்க்குப் பயன்படுவனவே யன்றி ஏனையோரால் இலகுவில் கற்றுப்பொருளறிய இயலாதனவாயிருக்கின்றன.

இவ்விருவகை யுரைகளைக் குறித்தும் நம் தமிழ்ப் புலவர்களுக்குள் நிலவியெழும் கொள்கை வேற்றுமைகள் பல. பரிமேலழகருரையே சிறந்ததென்பாரும், மணக்குடவருரைதான் தூயதென்பாரும் இவ்விருவகை யுரைகளின்பாற் குற்றங் காண்பாரும் பலருளர். குறட்பாக்களையுன்னிப் பார்க்குந்தோறும் புதுப்புது கருத்துக்களும்

விளக்கங்களும் வெளிப்பட்டுக் கொண்டிருப்பதே இவ் வேற்றுமைக்குக் காரணமெனக் கூறவேண்டியிருக்கிறது. ஆகவே அறிஞர்களின் கொள்கைக்கும், நுண்ணறிவுக்கும ஆராய்ச்சிக்கும் ஏற்ப குறட்பாக்கள் பொருள் தருவன வாயுள்ளன. இத்தகைய தூய, விழுமிய, அரிய, அளப் பரிய சக்திவாய்ந்த குறட்பாக்களை நாட்டிற சிறந்த தமிழ் மக்களனைவரும் நன்கு பயின்று பயனடைய வேண்டு மென்ற பேராவாவுடன் எனது நண்பா திரு R. K. அரங் கசாமி முயன்றிருக்கிறார்.

திரு அரங்கசாமியவர்கள் இராசை நாற்கவி நாவலர் பொன்முடி பொன்னுசாமி செட்டியாரவர்களின் பாண வர், சம்புகாசலத்து வேதாந்தமடாலயத தலைவரும பிரம்ம நிஷ்ட பண்டிதருமாகிய ஸ்ரீலஸ்ரீ சிதபபர சுவாமிகளின் நன்மதிப்புக்கும், மகிழ்ச்சிககும, ஆசிக்கும் உரிததானவ ராயிருக்கிறார். ஆதலால் இவரது முயற்சியால் வெளி வந்த இந்நூல்பலராலும போற்றபபடும் என்பதிலையமில்லை

பண்டிதருலகில் மட்டும் பயன்பட்டுவந்ததிருக்குறள் பல்லோர்க்கும் பயன்பட வேண்டுமெனககருதிஒவ்வொரு குறட்பாவையும் ஊன்றி ஆய்ந்தார், உட்பொருள கண்டு வியந்தார், தமிழர் நிலையைப்பார்ததார், அந்தோ! நந் தமிழர் இதனையறியாது வீணே கதைகளிலும், களியாட்-டங்களிலும், காலங் கழிக்கின்றனரே யென்று கவன்றார பின்னர் எவ்வாராயினும், இதனை யாவரும் எளிதில் படித்துணரச்செய்ய வேண்டுமெனத் துணிந்தார். மக்கள் மனப்பாடம் பண்ணுதற்கு உரிய வழி எது? எனச் சிந்தித்தார். அம் முறையில் அந்தாதி வடிவமாகப்

பாக்களைத் தொகுத்தார். பண்டைத் தமிழ் நூல்களின் விளக்கமெனச் சிலவற்றைச் சேர்த்தார். அகர வரிசைக் குறள்களாகச் சிலவற்றை அமைத்தார். உடனுறைப்புக் குறள்களின் செயல்விளக்கமெனச்சிலவற்றைக்குறித்தார்.

இவ்வாறு பல தலைப்புகளின் கீழ் குறட்பாக்களைப் பொறுக்கிச் சேர்த்து எவ்வித தலைப்புகளின கீழுள்ளவை எவ்வெவர்க்கு விருப்பமோ அவ்வத்தலைப்புகளின் கீழுள்-ளவற்றை அவரவர்கள் கற்றுப் பயனடைவதற்கு வழி கோலினர். பொதுவாகக் கூறுமிடத்து திருக்குறளை ஆராய்ந்து, இதன் பயனை யாவரும அடையத்தகுந்த குறட்பாக்களைப்பகுத்துத்தொகுத்து அள்ளி வீசியுள்ளார என்று கூறலாம்.

குறட்பாக்களுக்கு ஏற்ற உரையும, தமது சொந்த கருத்தின்படி வரைந்துள்ளார இதனையாதாரமாய்க் கொண்டு அறிஞர்கள தமதம் அறிவு நிலைக்கேற்ப இன்னும் எவ்வித பொருள்களையும், குறட்பாக்களின்று காணலாம் என்பது தெளிவாகின்றது.

"கண்டது கற்கப் பண்டிதராவான்" என்பது நம் நாட்டுப்பழமொழி. "சதஸ்லோகே பண்டித:" என்பது வடசொற் பழமொழி. அதாவது; நூறு செய்யுட்களை ஐயமறக்கற்பவன் பண்டிதனாகிறானென்பது பொருள். ஆகவே தமிழன் புலவன் ஆகவேண்டுமாயின் பல்வேறு நூல்களைக்கற்று அவதிப்பட வேண்டா. திருக்குறட் பாக்களில் பலவற்றை ஐயமறக்கற்றுத்தெளிந்தால், அவன் மன்னு தமிழ்ப்புலவனாய் விற்றிருக்கலாம். என்னும்

கருத்தைக் கொண்டே திரு அரங்கசாமி இத் திருக்குற-ளந்தாதியைத் தொகுத்தார்.

எனவே நான் தமிழன் என மார்தட்டுவோரும், தமிழே தலையாயமொழி எனநிமிர்ந்து நிற்போரும் வீணே பிதற்றித் தம் வாழ்நாளை வீணாளாக்காமல், இச் சிறு புத்தகத்திற் பொருத்துள்ள குறட்பாக்களை மனப்பாடம் பண்ணி மகிழ்வடைந் தொழுகுவாராயின் அதுவே திரு. அரங்கசாமியவர்களின் முயற்சிக்குச்செய்த கைமாறாகும். அவரே தமிழர் என்னும் பெயர்க்குரியராவர்.

இந்நூல் எழுதப்படிக்கத் தெரிந்த சிறார்க்கும், பாடமாக வைக்கத் தகும். அந்தாதி முறை இளைஞர் மனப்பாடம் செய்தற்கேற்றது. குறள் தெரிந்த சிறுவர், புலவர் குழுவிலும் புகுதற்கு உரியராவார்.

புத்தகம் பெரிதெனக்கண்டு எவரும் அஞ்சாமலும், உரை புரியவில்லையே யென எவரும் ஏங்காமலும், யாவரும் எளிதில் படித்தறிந்து பயன் தெரிந்து பண்டிதராய் மிளிர்வதற்கு வழி கோலிய திரு. அரங்கசாமியவர்களின் ஊக்கத்திற்கேற்ற ஆக்கந்தந்தருளுமாறு ஆண்டவனை வேண்டுகிறேன்

இராசை, 25—3—46. }

ஆ. இராமசாமி அய்யா.

# முன்னுரை

பரந்த இயங்கு திணை—நிலத்திணையாகியவைகளை படைத்த இறைவன் ஒன்றேயென்ற கொள்கையை முடிவு செய்திருப்பதேபோல் பல்வித வளங்களும், பல்வேறு வகைப்பொருள்களும் இயற்கை வடிவாய் நிறைந்துத் ததும்பும் நம் நாட்டிற்கு மக்களின் வாழ்க்கை வழிகாட்டியாக முதல் நூல் ஒன்றை தேர்ந்தெடுத்திருக்க வேண்டும்.

அப்படிப்பட்ட நாட்டுப்பொது நூலாக அமைந்திருப்பது **திருவள்ளுவரின் திருக்குறளேயாகும்.**

திருக்குறள் நம் நாட்டிற்கு மட்டுமல்ல, உலகத்திற்கே பொதுநூல் என்பதை அந்தந்த நாட்டினர்களே ஒப்புக்கொண்டுவிட்டார்கள். ஆனால் நாம் மாத்திரம் பல நூலுள் ஒன்றாகவே வைத்திருக்கிறோம்.

மக்கள் வாழ்க்கை முறைகளைத்தெறிந்துக்கொள்ளவும், ஒழுக்க வழிகளையறிந்து நடக்கவும், நாட்டுக்குச்சொந்தமான பொதுநூல் திருக்குறள் என்று முடிவு கட்டியிருந்தால் ஒவ்வொருவரும் குழந்தைப்பருவத்திலிருந்தே நன்கு தெரிந்து உணர்ச்சியோடு இரத்தத்திலும் நன்கு ஊறியிருந்திருக்கும்.

நம் நாட்டு மக்கள் கட்டாயம் இன்னநூலைக் கற்றிருக்கவேண்டும் என்ற திட்டத்தை கைவிட்டதால் நம்மில் ஒருவரை உங்கள் பொது நூல் எது? என்றால் அவர் சொல்லமுடியாத நிலை எற்பட்டு விட்டது.

இந்து மதம் என்பார்கள் இந்து மதத்திற்கு பொது நூல் எது என்றால் பதிலே வராது.

நான்கு வேதங்கள் உண்டு என்பார் சிலர், ஆனால் அவ்வேதங்கள் எல்லாருக்கும் பொதுமுறை நூலல்ல ஒரு சாரார்க்கு மட்டிலுமே சொந்தம் என்று பண்டையப் புலவர் வெள்ளி வீதியார் கூறின

செய்யா மொழிக்கும் திருவள்ளுவர் மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே—செய்யா
அதற்குரியார் அந்தணரே யாராயி னேனை
இதற்குரியார் அல்லாதார் இல்

என்ற வெண்பாவில் விளங்கும்.

திருக்குறளில் மக்கள வாழ்க்கைக்குரிய எல்லா முறைகளும் ஒருங்கே அமையப்பட்டுள்ளதோடு தெளிந்த நடையில் பொருள் நிறைந்து மனப்பாடத்திற்கேற்ற முறையில் சட்ட நூலே போல் அழகு பொருந்தி இருக்கின்றன.

திருக்குறளிலுள்ள வாழ்க்கை நீதிகளே தான் மற்றைய எல்லா நூல்களிலும் பிறமத நூல்களிலும் நிறையப் பட்டுள்ளன

திருக்குறளின் பொது அறிவு பல மதங்களையும், பிரிவுகளையும் சமப்படுத்தி ஒற்றுமையுடன் வாழச்செய்யும் பேரறிவை ஊட்டவல்லது.

திருக்குறளை பொது நூலாக்கி திருக்குறள் நீதியை ஏற்று திருக்குறள் அரசியலாட்சியை நடத்தினால் எல்லா நாட்டு மதங்களும் அதனுள் அடங்குவதில் ஐயமில்லை.

திருக்குறள் தமிழில் தானே பிறந்தது? அது தமிழ் நாட்டிற்கு மட்டிலும் தானே சொந்தம் என்று எண்ணு வதும், திருக்குறள் வடமொழியில் பிறக்காமல்போயிற்றே

வடமொழியில் இருந்தால் தானே நாட்டுப்பொது நூலா கும் என்று எண்ணுவதும் கூடாது. (வடமொழியிற் பிறந்ததெனை இந் நூலை அறியாதார் கூறுவர்.)

இன்று திருக்குறள் எல்லா மொழிகளிலும் இருக் கின்றன. அந்தந்த பகுதியார் அந்தந்த மொழியிலுள்ள குறள்களைப்படித்து அந்நீதியை வாழ்க்கையில் நடத்தினல் பலனை இப்போதே அடையலாம்.

நம் நாட்டிற்கு ஒரு பொது நூல் இல்லாததால் தான் நமக்குள் பல மதங்கள் தோன்றின பல பிளவுகள் உண்டாயின ஒரே நீதியை ஏற்று நடந்து வந்திருந்தால் குணப்பிளவுகள் தோன்றுமல் நாட்டு முன்னேற்ற உரிமைப்போராட்டங்களின் விளைவால் நாடு உயர்ந்த நிலையை அடைந்திருக்கும்.

இளமைப்பருவத்திலிருந்தே திருக்குறள் மக்கள் இரத்தத்தில் ஊறி இருந்திருக்குமாகுல், தான், தான் என்ற இருமாப்புத்தன்மையான பொருமைக் குணம் முதலியன தலை விரித்துத் தாண்டவமாட முடியாது

திருக்குறள் முக்காலத்திற்கு மொத்த வழி முறையை யுடையது. எல்லோரும் வேறுபாடின்றி தொழும் இறைவனைத்தலைமையாகக்கொண்டது உலகமே ஒன்று பட்டுவாழும் எக்காலத்திற்கும் அழியாமல் நின்று நீதியை புகட்டவல்லது.

ஆகையால் நம் நாட்டார் ஒவ்வொருவரும் கட்டாயம் ஒருதிருக்குறள் புத்தகத்தை வாங்கிப்படித்தும், படித்தோர் சொல்லக்கேட்டும், ஒவ்வொருவரை காணுந்தோறும் திருக்குறள் உமயிடம் இருக்கிறதா, படித்து வருகிறீரா, வீட்டுப்பெண்களுக்கும், குழந்தைகளுக்கும், விளக்கி வருகிறீரா.

என்று கேட்கும் செயலைக்கடமையாகக்கொள்ளுங்கள்.

அறஞ் செய்யும் நாள்களில் திருக்குறள் புத்தகங்களை தங்களாலான அளவு படிப்போர்க்கு வாங்கி இனாமாக கொடுங்கள். எல்லோரும் எளிதில் திருக்குறளின் பொருளை அறியவேண்டி பகுதி பகுதிகளாகப்பிரித்தும் அந்தாதி என்னும் பொருள் இனத்தொடர் முதலியவைகளில் திருக்குறளை வெளியிடக்கருதி முன்வந்துள்ள திருக்குறள் பதிப்பகத்தார் ஊக்கத்திற்கு ஆக்கமளியுங்கள்

திருக்குறள்களிலிருந்து பொறுக்கி அந்தாதியாகக் கோத்த வகையிலும், அதற்கு உரை எழுதி தலைப்புமிட்ட வகையிலும் குற்றங்கள் திருத்தங்கள் உளவாயின் உடனே எனக்கறிவித்து மறு பதிப்பில் தூய்மை பதிப்பாக்கும் நற்பணியை பேரறிஞர்கள் ஏற்றுக்கொள்வதோடு "நூலுரை போதகாசிரியர் மூவரும் முக்குணவசத்தால் முறைமயங்கினரே" என்றபடி பிழை ஏற்பட்டிருப்பின் அறிஞர் பொறுத்தருள்க.

என்னை இந்நிலைக்குக்கொண்டுவந்து இப்படிப்பட்ட தொண்டு புரிய அருப்பாடுபட்ட வேதாந்த ஆசிரியர் **கப்பால் பாய் சாமியார்** அவர்களுக்கும், தமிழாசிரியர் நற்கவி நாவலர் பொன்முடி **S. பொன்னுசாமி செட்டியார்** அவர்களுக்குப், பொது அறிவு ஆசிரியர் முப்மொழிப் புலவர் **மு. மாரையாச்சாரியார்** அவர்களுக்கும் என்றும் என் வாழ்த்துப், வணக்கமும் உரித்தாகுக நலம்.

இராசிபுரம்,
25—2—46.

இங்ஙனம்,
**R. K. அரங்கசாமி.**

உ

ஆதிபகவன் துணை.

திருவள்ளுவர் அருளிச்செய்த

# திருக்குறள் அந்தாதி.

1 அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

2 உலகந் தழீஇய தொட்ப மலர்தலுங்
கூம்பலு மில்ல தறிவு

3 அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர்

4 கல்லா தவரிற் கடையென்ப கற்றறிந்து
நல்லா ரவை யஞ்சுவார்

5 அஞ்சு மறியா னமைவில னீகலான்
றஞ்ச மெளியன் பகைக்கு

6 பகைபாவ மச்சம் பழியென நான்கு
மிகவாவா மில்லிறப்பான் கண்

7 கண்ணின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல்

8 சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை யறிந்து

9 அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்குஞ் செய்யா விடல்

10 விடுமாற்றம் வேந்தர்க் குரைப்பான் வடுமாற்றம்
வாய்சோரா வன்கண வன்

11 வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு

12 அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும்

13 கெடுவாக வையா துலக நடுவாக
நன்றிக்கட் டங்கியான் தாழ்வு

14 தாளாண்மை யென்னும் தகைமைக்கட் டங்கிற்றே
வேளாண்மை யென்னும் செருக்கு

15 செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து

16 நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு

17 ஒழுக்காறுக் கொள்க வொருவன்றன் னெஞ்சத்
தழுக்கா றிலாத வியல்பு

18 இயல்பினால் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாரு ளெல்லாம் தலை

19 தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையி னிழிந்தக் கடை

20 கடைகொட்கச் செய்தக்க தாண்மை
னெற்றா விழுமந் தரும் [யிடைக்கொட்கி

21 தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்

22 பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்

23 பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற

24 பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா
பிற்பகற் றாமே வரும்

25 வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை
வைத்தூறு போலக் கெடும் [யெரிமுன்னர்

26 கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை யடுங்காலை
யுள்ளினு முள்ளஞ் சுடும்

27 சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோக்கிற் பவர்க்கு

28 குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்தல் அரிது

29 அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்

30 கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி
நிலைக்கெளிதா நீர தரண் [யகர்த்தார்

31 அரம்பொருத பொன்போலத் தேயும்
உட்பகை யுற்ற குடி [உரம்பொருது

32 குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு

33 உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லார் அறிவிலாதார்

34 அறிவுடையார் எல்லா முடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்

35 இலனென்று தீயவை செய்யற்க செய்யின்
இலனாகு மற்றும் பெயர்த்து

36 பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டுபவர்

37 வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில

38 இலக்க முடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக்
கையாறாக் கொள்ளாதா மேல்

39 மேலிருந்து மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர்

40 அவாவில்லார்க் கில்லாகும் துன்பம்
தவாஅது மென்மேல் வரும் [அஃதுண்டேல்

41 வருகமற் கொண்கன் ஒருநாட் பருகுவன்
பைதனோய் எல்லாங் கெட

42 கெடுவல்யா னென்ப தறிகதன் னெஞ்ச
நடுவொரீஇ யல்ல செயின்

43 செயற்கை யறிந்தக் கடைத்து முலகத்
தியற்கை யறிந்து செயல்

44 செயற்பால தோரு மறனே யொருவற்
குயற்பால தோரும் பழி

45 பழிமலைந் தெய்திய வாக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை

46 தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றையவர்

47 மற்றும் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்
லுற்றார்க் குடம்பு மிகை [பறுக்க

48 மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந்
தகுதியான் வென்று விடல்

49 விடாஅது சென்றாரைக் கண்ணினாற் காணப்
படாஅதி வாழி மதி

50 மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன் னிற்பவை

51 நில்லா தவற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை

52 கடுஞ்சொல்லன் கண்ணில னாயி னெடுஞ்
நீடின்றி யாங்கே கெடும் [செல்வ

53 கெட்டார்க்கு நட்டாரில் லென்பதோ நெஞ்சேநீ
பெட்டாங் கவர்பின் செலல்

54 செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத்தவர்க் கு

55 குணநலஞ் சான்றோர் நலனே பிறநல
மென்நலத் துள்ளதூஉ மன்று

56 மன்னுயி ரோம்பி யருளாள்வார்க் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை

57 வினைக்குரிமை நாடிய பின்றை யவனை
அதற்குரிய னாகச் செயல்

58 செயற்கரிய செய்வர் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்

59 தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
போர்தாங்கும் தன்மை யறிந்து

60 அறிந்தாற்றிச் செய்கிற்பாற் கல்லால் வினைதான்
சிறந்தானென் றேவற்பாற் றன்று

61 அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை

62 துணைநலம் ஆக்கந் தரூஉம் வினைநலம்
வேண்டிய வெல்லாந் தரும்

63 எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு

64 விளக்கற்றம் பார்க்கு மிருள்போற் கொண்கன்
முயக்கற்றம் பார்க்கும் பசப்பு

65 பசந்தா ளிவளென்ப தல்லால் இவளைத்
துறந்தார் அவரென்பார் இல்

66 இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை

67 கடலோடா கால்வ நெடுந்தேர் கடலோடு
நாவாயு மோடா நிலத்து

68 நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு

69 அறிவுநூ வாராய்ந்த கல்வியிம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு

70 வினைத்திட்ப மென்ப தொருவன் மனத்திட்பம்
மற்றைய வெல்லாம் பிற

71 பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்
செம்பொருள் காண்ப தறிவு [பென்னும்

72 அறிவின்மை யின்மையு ளின்மை பிறிதின்மை
இன்மையா வையா துலகு

73 உலைவிடத் தூறஞ்சா வன்கண் டொலைவிடத்துத்
தொல்படைக் கல்லால் அரிது

74 அரியவென் றாகாத வில்லைபொச் சாவாக்
கருவியாற் போற்றிச் செயின்

75 செயிரிற் றலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்
உயிரிற் றலைப்பிரிந்த வூன்

76 ஊனைக் குறித்த உயிரெல்லாம் நாணென்னும்
நன்மை குறித்தது சால்பு

77 சால்பிற்குக் கட்டளை யாதெனிற் றோல்வி
துலையல்லார் கண்ணும் கொளல்

78 கொளப்பட்டே மென்றெண்ணிக் கொள்ளாத
துளக்கற்ற காட்சியவர் [செய்யார்

79 காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேல்
மீக்கூறு மன்ன னிலம்

80 நிலைமக்கள் சால வுடைத்தெனினும் தானை
தலைமக்கள் இல்வழி இல்

81 இல்லாரை யெல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு

82 சிறப்பறிய வொற்றின்கட் செய்யற்க செய்யிற்
புறப்படுத்தா னாகு மறை

83 மறைந்தவை கேட்கவற் றாகி யறிந்தவை
யையப்பா டில்லதே யொற்று

84 ஒற்று முரைசான்ற நூலு மிவையிரண்டுந்
தெற்றென்க மன்னவன் கண்

85 கண்ணிற் கணிகலம் கண்ணோட்டம் அஃதின்றேல்
புண்ணென் றுணரப் படும்

86 படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணுபவர்

87 நாணகத் தில்லார் இயக்கம் மரப்பாவை
நாணா லுயிர்மருட்டி யற்று

88 அற்ருரைத் தேருத லோம்புக மற்றவர்
பற்றிலர் நாணார் பழி

89 பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்

90 இல்லாளை யஞ்சுவான் அஞ்சுமற் றெஞ்ஞான்றும்
நல்லார்க்கு நல்ல செயல்

91 செயற்பால செய்யா திவறியான் செல்வம்
உயற்பால தன்றிக் கெடும்

92 கெடாஅ வழிவந்த கேண்மையாந் கேண்மை
விடாஅர் விழையு முலகு

93 உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்து
அலகையா வைக்கப் படும்

94 படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றூக்கா
உடல்சுவை யுண்டார் மனம் [தொன்றன்

95 மனந்தூய்மை செய்வினைத் தூய்மை இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும்

96 வருவிருந்து வைகலு மோம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று

97 இன்றும் வருவது கொல்லோ நெருநலுங்
கொன்றது போலு நிரப்பு

98 நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு

99 நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனிற் கொட்பின்றி
யொல்லும்வா யூன்று நிலை

100 நிலையிற் றிரியா தடங்கியான் தோற்றம்
மலையினு மாணப் பெரிது

101 பெரிதாற்றிப் பெட்பக் கலத்த லரிதாற்றி
யன்பின்மை சூழ்வ துடைத்து

102 உடைத்தம் வலியறியா ரூக்கத்தி னூக்கி
யிடைக்கண் முரிந்தார் பலர்

103 பலநல்ல கற்றக் கடைத்து மனநல்ல
ராகுதன் மாணார்க் கரிது

104 அரிதாற்றி யல்லனோய் நீக்கிப் பிரிவாற்றிப்
பின்னிருந்து வாழ்வார் பலர்

105 பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்ல றேற்றா தவர்

106 அவர்தந்தா ரென்னுந் தகையா லிவர்தந்தென்
மேனிமே லூரும் பசப்பு

107 பசப்பெனப் பேர்பெறுத னன்றே நயப்பித்தார்
நல்காமை தூற்றா ரெனின்

108 எனைத்து நினைப்பினுங் காயா ரனைத்தன்றோ
காதலர் செய்யும் சிறப்பு

109 சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்க மெவனோ உயிர்க்கு

110 உயிருடம்பி னீக்கியா ரென்ப செயிருடம்பிற்
செல்லாத்தீ வாழ்க்கை யவர்

111 அவர்நெஞ் சவர்க்காதல் கண்டு மெவனெஞ்சே
நீயெமக் காகா தது

112 ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை

113 கடாஅ வுருவொடு கண்ணஞ்சா தியாண்டு
முகாஅமை வல்லதே யொற்று

114 ஒற்றினா னொற்றிப் பொருடெரியா மன்னவன்
கொற்றங் கொளக்கிடந்த தில்

115 இலமென் றசைஇ யிருப்பாரைக் காணி
னிலமென்னு நல்லாள் நகும்

116 நகுதற் பொருட்டன்று நட்டன் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு

117 பொருட் பெண்டிர் பொய்ம்மை முயக்க
லேதில் பிணந்தழீஇ யற்று [மிருட்டறையி

118 அற்ற மறைத்தலோ புல்லறிவு தம்வயிற்
குற்ற மறையா வழி

119 வழிநோக்கான் வாய்ப்பன செய்யான்
பண்பிலன் பற்றார்க் கினிது [பழிநோக்கான்

120 இனிய வுளவாக வின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று

121 அற்றவ ரென்பா ரவாவற்றார் மற்றையார்
அற்றாக வற்ற திலர்

122 இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள

123 உளபோன் முகத்தெவன் செய்யு மளவினாற்
கண்ணோட்ட மில்லாத கண்

124 கண்ணோட்டத் துள்ள துலகிய லஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை

125 பொறையொருங்கு மேல்வருங்காற் றாங்கி
கிறையொருங்கு நேர்வது நாடு [யிறைவற்

126 நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு

127 நாடொறு நாடி முறைசெய்யா மன்னவ
னாடொறு நாடு கெடும்

128 கெடல்வேண்டிற் கேளாது செய்க வடல்வேண்டி
னாற்று பவர்க ணிழுக்கு

129 இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல்

130 சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்

131 சொற்கோட்ட மில்லது செப்ப மொருதலையா
வுட்கோட்ட மின்மை பெறின்

132 பெறினென்னும் பெற்றக்கா லென்னு முறினென்னு
முள்ள முடைந்துக்கக் கால்

133 காலாழ் களரி னரியடுங் கண்ணஞ்சா
வேலாண் முகத்த களிறு

134 களித்தறியே னென்பது கைவிடுக நெஞ்சத்
தொளித்ததூஉ மாங்கே மிகும்

135 மிகன்மேவு மெய்ப்பொருள் காணா ரிகன்மேவு
மின்னா வறிவி னவர்

136 அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்

137 அவையறியார் சொல்லன்மேற் கொள்பவர்
வகையறியார் வல்லதூஉ மில் [சொல்லின்

138 இற்பிறந்தார் கண்ணல்ல தில்லை யியல்பாகச்
செப்பமு நாணும் ஒருங்கு

139 ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து

140 உடைமையு ளின்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு

141 உண்டார்க ணல்ல தடுநறாக் காமம்போல்
கண்டார் மகிழ்செய்த லின்று

142 இன்மையி னின்னா துடைமை முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின்

143 படலாற்றா பைத லுழக்குங் கடலாற்றாக்
காமநோய் செய்தவென் கண்

144 கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின்
ளென்ன பயனு மில [வாய்ச்சொற்க

145 இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர்

146 அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்ற
னுயிர்செகுத் துண்ணாமை நன்று

147 நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று

148 நன்றென்ற வற்றுள்ளு நன்றே முதுவருண்
மூந்து இளவாச் செறிவு

149 செறிவறிந்து சீர்மை பயக்கு மறிவறிந்
தாற்றி னடங்கப் பெறின்

150 பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல்

151 கற்றறிந்தார் கல்வி விளங்குங் கசடறச்
சொற்றெரிதல் வல்லார் அகத்து —(அகர)

திருக்குறள் அந்தாதி முற்றிற்று.

## நம் நாட்டுப் பண்டையத் தமிழ் நூல்களின் விளக்கம்.

1 பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாம் தலை

2 மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா வெண்ணிய மூன்று

3 ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு

4 மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை

5 உயர்வகலந் திண்மை யருமை இந்நான்கின்
அமைவரண் என்றுரைக்கும் நூல்

# அகர வரிசைக் குறள்கள்.

1 அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்
பூரியார் கண்ணு முள [செல்வம்

2 ஆக்கமுங் கேடு மதனால் வருதலாற்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு

3 இகழ்ச்சியிற் கெட்டாரை யுள்ளுக தாந்த
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து

4 ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு

5 உடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருட்
பாம்போ டுடனுறைந் தற்று

6 ஊதிய மென்ப தொருவற்குப் பேதையார்
கேண்மை யொரீஇ விடல்

7 எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்

8 ஏதிலா ராரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வ முற்றக் கடை

9 ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு

10 ஒழுக்க முடைமை குடிமை யிழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்

11 ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப்
பேதையிற் பேதையா ரில்

12 அவ்விய நெஞ்சத்தா னாக்கமுஞ் செவ்வியான்
கேடு நினைக்கப் படும்

13 அஃகி யகன்ற வறிவென்னும் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்

---

# உடலுயிர் உறுப்புகளின் செயல் விளக்கம்.

---

1 மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்

2 கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி

3 குறிப்பிற் குறிப்புணரா வாயின் உறுப்பினுள்
என்ன பயத்தவோ கண்

4 யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு

5 மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து

6 நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
வாயின ராதல் அரிது

7 அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டு முகம்

8 கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை

9 நிறைநெஞ்ச மில்லவர் தோய்வர் பிறநெஞ்சிற்
பேணிப் புணர்பவர் தோள்

10 உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
இடுக்கண் களைவதா நட்பு

11 கழாக்கால் பள்ளியுள் வைத்தற்றாற் சான்றோர்
குழாத்துப் பேதை புகல்

12 தீயவை செய்தார் கெடுத னிழறன்னை
வீயா தடியுறைந் தற்று

13 இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ
குற்ற மறைப்பா னுடம்பு [குடும்பத்தைக்

14 மாறுபா டில்லாத வுண்டி மறுத்துண்ணின்
ஊறுபா டில்லை யுயிர்க்கு

15 மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற

16 தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்

# நம் நாட்டு உலகத் திட்டம்.

1 நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு

2 உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லா முளன்

3 நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்பு பாராட்டு முலகு

4 வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றானமிழ்த மென்றுணரற் பாற்று

5 பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்
குறைபதி யென்னு முலகு

6 எள்ளாத வெண்ணிச் செயல்வேண்டும் தம்மொடு
கொள்ளாத கொள்ளா துலகு

7 குடிதழீஇ கோலோச்சு மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கு முலகு.

8 கெடா வழிவந்த கேண்மையார் கேண்மை
விடா விழையு முலகு

9 பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை [யாளன்
தகைமைக்கட் டங்கிற் றுலகு

10 உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லார் அறிவிலா தார்.

# திருக்குறள் அந்தாதி உரை.

## உலகத்திற்கு முதற் காரணம் இறைவன்.

1 அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

(கருத்துரை) எழுத்துக்களாலாகிய மொழிகளுக்கெல்லாம் அகர ஓசையே முதற் காரணமாவது போல் இவ்வுலக நிகழ்ச்சியின் செயலுக்கு ஆதிபகவனே முதற்காரணமாகும்.

## விருப்பு வெறுப்பற்ற நிலையே அறிவுடமை.

2 உலகத் தழீஇய தொட்ப மலர்தலும்
கூம்பலு மில்ல தறிவு

உலகமக்களை ஒன்றுபட நோக்கி எல்லோரிடத்தும் இன்புடன் கூடி வாழும இன்ப நிலையே ஒட்பம். தனக்கு விருப்பம் வந்த போது பிறரைக் கண்டு மகிழ்தலும் வெறுப்பு வந்த போது மற்றவர்களைக் காய்தலும் இல்லாத குணமே அறிவாகும்.

## அறிவுடையார் மக்களுக்கு பயன்படத்தக்க செயலைசெய்வர்

3 அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர்

மக்கள் வாழ்க்கைக்கு ஆவதை அறியவல்லவர்கள் அறிவுடையார் ஆவார்கள். வாழ்க்கை முறைக்குத் தகுதியையுணராமல் கண்டனவற்றையெல்லாம் கற்பித்து திரிபவர்கள் அறிவைக் கல்லாதவர் ஆவார்கள்.

## கற்றுங் கல்லாதவர் ஆதல்.

4 கல்லா தவரிற் கடையென்ப கற்றறிந்து
நல்லா ரவையஞ்சு வார்

கற்க வேண்டியனவற்றைக் கற்றிருந்தும் அறிய வேண்டியனவற்றையறிந்திருந்தும் நல்லோர்கள் கூடியுள்ள சபையிற் கலந்துபேச அஞ்சுவாராயின் அக்கற்ரோர் ஒன்றையும் கல்லாதவரினும் கடைப்பட்டோராவர்.

## பகைவரை வெல்ல விடாத குணங்கள்.

5 அஞ்சு மறியா னமைவிலன் ஈகலான்
றஞ்ச மெளியன் பகைக்கு

அஞ்சவேண்டாதவற்றிற்கு அஞ்சுதலும், அறிய வேண்டியனவற்றை அறியாதிருத்தலும் பிறரோடு பொருந்தி வாழும் அமைதியான நட்பு இல்லாதிருத்தலும் எல்லோரிடத்தும் நம்பிக்கையற்ற எண்ணம் பிறத்தலும் உடைய ஒருவனை பகைவர்கள் மிகஎளிதாக வெல்வார்கள்.

## பிறர் மனையாளைக் கெடுக்காதே.

6 பகைபாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவாம் இல்லிறப்பான் கண்

பிறர்மனையாளைக் கெடுக்கும் ஒருவனிடத்து ஒருவரை யொருவர் பிரித்துவைக்கும் பகையும், பிறரைத் துன்புறுத்தும் பாவமும் கண்டவற்றிற்கெல்லாம் பயமும், ஏழேழு தலை முறைவரைத் தீராத பழியும் நிலையாய் குடி கொண்டிருக்கும்.

## தூற்றித் திரியேல்.

7 கண்ணின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல்

ஒருவரைப்பற்றி ஏதாவது சொல்ல வேண்டுமானால் அவர் எதிரில் உள்ளபோது எதைப்பற்றி எப்படி வேண்டுமானாலும் சொல்லலாம் ஆனால் அவர் இல்லாத போது அவரைப்பற்றி யாரிடத்தும் எதையும் எங்கும் எப்படியும் சொல்லாதே.

## ஒன்றைச் சொல்லுவதின் முறை.

8 சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ லச்சொல்லை
வெல்லுஞ்சொ லின்மை யறிந்து

நீ யாரிடத்திலும் தாராளமாக நீதிகளை எடுத்துச்சொல் ஆனால் மற்றொருவர் நம் நீதியை வெல்லும் வழியில்லாத முறையை அடிப்படையாக வைத்துச் சொல்லுவதில் தவறாதே.

## அறிஞரின் தலைவர்கள் செயல்.

9 அறிவினுள் எல்லாம் தலையென்ப தீய
செறுவார்க்குஞ் செய்யா விடல்

தனக்குத்துன்பத்தையே செய்துக் கொண்டிருக்கும் தீயவர்களுக்குங் கூட யாதொரு தீமையும் செய்யாமல் நல்லனவே செய்யும் அறிஞர்களே சாலச் சிறந்த அறிவுடைத் தலைவராவார்கள்.

## தூது போவதின் முறை

10 விடுமாற்றம் வேந்தர்க் குரைப்பான் வடுமாற்றம்
வாய்சோரா வன்க ணவன்

*தலைவர்கள் சொல்லும் கருத்துக்களை மற்றைத் தலைவரிடத்து விளக்கும் தூதுவன் வாய் தவறியும் குற்றங் குறைகள் நிறைந்த சொற்களைக் கூறாத சொல்லாற்றல் படைத்தோனாயிருத்தல் வேண்டும்.*

## மந்திரிகள் இருக்க வேண்டிய அமைப்பு.

11 வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு

*அமைச்சர்கள் அஞ்சுதற்றன்மை இல்லாமலும், குடிகளை வாழ்விக்கும் ஆர்வம் நிறைந்தும், கற்க வேண்டியனவற்றை சோம்பலின்றி கற்றும், அறியத்தக்கனவற்றை முயற்சி குன்றாமல் அறிந்தும், விடாப்பிடியாய் சாதிக்கும் வீரத்தன்மை பொருந்தியும் இவ்வைந்தையும் ஏற்ற காலம், இடம் பொருந்த செயலாற்றும் பொது ஆற்றல் நிறைந்தவர்களாயிருத்தல் வேண்டும்.*

## பெருமை பேசி காலம் கடத்தாதே.

12 அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும்

*ஒரு செயலை ஏற்று நடத்தத்தக்க அமைப்புக்கிடைத்த போது அச் செயலை நடத்தும் தன்மையில் நடவாமலும் அதன் வலிமையைக் காலம், இடம் முதலிய வாற்றால் உணராமலும் தன் பெருமையை பேசி காலம் கழிக்கு மொருவன் விரைந்து செயலோடு கெடுவான்.*

## வறுமையால் அறிஞர் தாழ்வாகமாட்டார்.

13 கேடுவாக வையா துலக நடுவாக
நன்றிக்கட் டங்கியான் றாழ்வு

*நடு நிலைமையோடு பிறர் மீது இரக்கங் கொண்டு வாழும் அறிவுடையார்களின் வறுமை முதலிய தாழ்வைக் கொண்டு உலகத்தார்கள் அறிஞர்களைக் கேடுசெய்யும் தீங்கினராகக் கருதப்படமாட்டார்கள்.*

## அறத்திலுயர்ந்தது பொதுத்தொண்டேயாம்.

14 தாளாண்மை யென்னுந் தகைமைக்கட் டங்கிற்றே
வேளாண்மை யென்னுஞ் செருக்கு

*பிறவுயிர்களுக்கு உதவி செய்தல் என்ற உயர்ந்த பேப்பாடான நிலையானது முயற்சி நிறைந்த பொதுச் செயலாளர்களின் பெருந் தன்மையினிடத்துத் தங்கி இருக்கின்றன.*

## செல்வம் சீருடன் வாழும் முறை.

15 செருக்குஞ் சினமுஞ் சிறுமையு மில்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து

*மற்றையவரினும் நாமே உயர்ந்தவரெனும் இறுமாப்பும், பிறரைக் காணுந்தொறும் சீறிப் பேசும் முன் கோபமும், உலகத்தார் பழிக்கும் இழிகுணமும் அமையப் படாதவர்களின் செல்வம் உயர்ந்த மேம்பாடுடன் நிலைத்து வாழும்.*

## ஒழுக்கம் தண்ணீரால் உயரும்.

16 நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு

நீரில்லாமல் இம் மண்ணுலகம் தோன்றவில்லையாகையால் அந்நீரே மழையாகி இம் மண்ணுலக மக்கள் ஒவ்வொருவருக்கும் ஒழுக்கத்தை வளர்க்கிறது. (நீர் உலகத்தையும் அமைத்து உலகத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் ஒழுக்கத்தையும் வளர்க்கிறது என்பதாம்)

குறிப்பு:—விண்ணிலிருந்து காற்றும் காற்றிலிருந்து நெருப்பும் நெருப்பிலிருந்து நீரும் நீரிலிருந்து மண்ணும் தோன்றியதை உலக உற்பத்தி நூலிற் காண்க

## நெஞ்சத்தில் கெட்ட எண்ணம் தங்கவிடாதே.

17 ஒழுக்காறாக் கொள்க வொருவன்தன் னெஞ்சத்து
அழுக்கா றிலாத வியல்பு

தன் நெஞ்சத்தில் பொறாமை முதலிய கெட்ட எண்ணங்கள் தங்கி வாழ்க்கையை கெடுக்காதபடி தடுப்பதற்காக ஒழுக்க வழிகளைப்பின்பற்றி நடப்பாராக.

## இல்வாழ்க்கை எவ்வாழ்க்கையினும் சிறந்தது.

18 இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாரு ளெல்லாம் தலை

உலக இயல்பினின்றும் வழுவாமல் மனையறங்காத்து வாழ்க்கைத்துணைவியுடன் இல்வாழ்க்கை வாழ்பவன், மனையறத்திற்கு மாறான யோகம் முதலிய முயற்சியினால் அடையும் பலனை விட சீரிய நற்பலனை அடைகிறான்.

## மானம் கெட்டவன் மயிரினும் தாழ்ந்தோன்.

19 தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையி னிழிந்தக் கடை

மானத்தோடு அடிமையின்றி வாழுமக்கள் தங்கள் உயர்ந்த நிலையிலிருந்து வழுவித்தாழ்ந்து விழாதபடி வாழ்வாராக அப்படித்தாழ்ந்து விட்டால் தலையில் உள்ளபோது பல சிறப்பும் அடைந்து தலையிலிருந்து கீழே விழுந்தவுடன் தூர விலக்கப்படும் மயிர் போல தங்களையும் விலக்கப் படுவார்கள்.

## காரியம் முடியும்முன் வீரியம் பேசாதே.

20 கடைக்கோட்கச் செய்தக்க தாண்மை யிடைக்
ஏற்று விழுமம் தரும் [கோட்கின்

ஓர் தொழிலை ஆரம்பிக்கு மொருவர் அத்தொழில் நடைபெறும் அளவு அதை நடத்திக்கொண்டிருக்க வேண்டுமே தவிர இடையில் அவைகளைப்பற்றிப் பெருமை பேசி காலம் கடத்தினல் பிறரால் அத்தொழிலியக்கம் கெட்டு இடையில் முறிவு பட்டு துன்பத்தைக் கொடுக்கும் ஆகவால் தொழில் முடிவில் தான் அதன் பெருமையைப் பேசவேண்டும.

## பெண்ணின் பெருந்தன்மை.

21 தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்

மனைக்குத்தக்க மாண்புடைப் பெண்ணனவள் தன்னைப் பாதுகாத்துக்கொண்டு தன் கணவனையுங் காப்பாற்றி வசை முதலிய சொற்கள் வராமல் காத்து புகழோடு முயற்சி குன்றாமல் வாழ்க்கை நடத்துவாள்.

## கற்புடைப் பெண்ணின் சிறப்பு.

22 பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்

தன் மனையாள் பிறரின் சூழ்ச்சிக்குக்கலங்கா நிலை பெற்று கற்புத் தன்மையிலிருந்து வழுவாமல் வாழ்வாளாயின் அப்பெண்ணை விட இவ்வுலகில் சிறந்தது வேறு என்ன தான் இருக்க முடியும்.

## அறிவுடைய மக்களே அருஞ்செல்வம்.

23 பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற

வாழ்க்கையில் அடைதற்கரிய பெரும் பேறு ஒன்று உண்டென்றால் அது அறிவறிந்து புகழோடு கூடி வாழும் நன்மக்களைப்பெறுதல் தானாகும் மற்ற பொருள்கள் நன் மக்கட்கு இணையாகாது.

## முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.

24 பிறர்க்கின்னா முற்பகற் செய்யின் தமக்கின்னா
பிற்பகற் றாமே வரும்

முதல் நாள் பிறரைத் துன்பந்தரத்தக்க தீச்செயல்கள் வாயிலாக வஞ்சித்திருப்போமாயின் மறுநாளே நம்மை பிறர் வஞ்சித்துத் துன்பமடையச் செய்யும் சந்திப்பு தானே வரும்.

## எதிர்காலமுணர்ந்து ஆவனசெய்.

25 வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்

*வாழ்க்கையின் தன்மைக்கேற்ற செயல்களை முன்னே அறிந்து ஆவனவற்றை அமைத்துக்கொள்ள வேண்டும் அப்படி வருமுன்னர் காவாதான் வாழ்க்கை நெருப் பிலிட்ட வைக்கோல் விரைந்து அழிவது போன்று கெட்டு விடும்.*

## ஆபத்தில் உதவி செய்யாதவனை நினைக்காதே.

26 கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை
உள்ளினும் உள்ளஞ் சுடும்

*ஓர் குடும்பம் தொழில் முதலிய குறைகளால் கெடும் தருணம் அமைந்தால் அக் குடும்பதத்தைச் சூழ்ந்துள்ள பிற குடும்பத்தாரால் காக்கப்படல் வேண்டும் அப்படி யின்றி கெடும குடும்பத்தைப்பார்த்துக்கொண்டே இருந்து யாதொரு உதவியும் செய்யாதிருந்த கயவர்களை அவர் உயிர் பிரியும் தருணத்து அவரை நாம் நினைக்கினும் நம் உள்ளத்தைச்சுடுவதாகும்.*

## புடத்தால் தங்கமும் இடரால் அறிவும் ஒளிபெறும்.

27 சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோக்கிற் பவர்க்கு

*தங்கம் புடம் வைக்குந்தோறும் ஒளி அதிகரிப்பதைப் போல தவத்தினால் தன்னிலையடைந்த பேரறிஞர்களுக்கு துன்பம் வருத்த வருத்த அவர்களின் ஆற்றல் தூய்மை யான ஒளியென்னும் புகழ் பரந்து விளங்கும்.*

## அறிஞர்களின் சினத்திற்கு ஆளாகாதே.

28 குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்தல் அரிது

நற்குணமென்னும் அறிவுக்குன்றின்மேல் ஏறிநின்ற அறிஞர்கள் மனம் புண்படும்படி நடக்கலாகாது அப்படி நடந்தால் அவர்கள் உள்ளத்தே எழும் சினத்தை நம்மால் தடுக்க முடியாதாகி அவதிப்பட நேரும். (அருள் குன்றின் மேல் நின்ற அறிஞர்களிடத்து சினம் தோன்றினும் கணத்தில் மறையும் என்றும் பாடம் உண்டு)

## பெரியோரைத் துணைகொள்.

29 அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்

உலகத்திலே அடையும் பொருள்களிலெல்லாம் அரிதிலும் அரிதானது முற்றுமறிந்து மக்களைக்காக்கும் வழியில் சலிப்பற்று உழைக்கும் பெரியோர்களைக்காத்து அவர்களைச் சுற்றமாகத் தமருள் சேர்த்துக்கொள்வதே யாகும். (பெரியோர்களின்நோக்கமிருக்கின் அந்நாட்டுக்கு எவ்வித குற்றங்களும் நேராது ஆதலால் பெரியோர்களின நட்புப் பெறுதல் அரிதாகும்)

## அரண்கள் அமைக்கும் முறை.

30 கொளற்கரிதாய்க் கொண்ட கூழ்த்தாகி யகத்தார்
நிலைக்கெளிதாய் நீர தரண்

நாட்டைக்காக்கும் அரண்களானது எதிரிகளால் விரைந்து நுழைந்துக்கொள்ள முடியாத படியும் போர் வீரர்கள்பலநாள் அரணுள் தங்க நேர்ந்தாலும் அவர்களுக்கு

குறையாதபடி உணவுப்பொருள்கள் நிறைந்தும் உள்ளிருந்தபடியே எதிரிகளை அழிக்கவல்ல வழிகள் அமைத்தும் திண்மையாகக்கட்டப்படுவதே நாட்டைப் பாதுகாக்கும் அரண்களாகும்.

## ஊருடன் பகைத்தால் வேருடன் கெடும்.

31 அரம்பொருத பொன்போலத் தேயும் உரம்பொருது
உட்பகை யுற்ற குடி

பிறரைக் கெடுக்கும் கெட்ட எண்ணத்தை நெஞ்சகத்தே இருத்திய உட்பகைவன் வாழ்க்கையானது அரத்தால் தேய்க்கப்பட்ட பொன் விரைந்து தேய்வதே போல் அழிந்து விடும்.

## பெருநில மன்னரின் சீர்முறை.

குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கு முலகு

நாட்டுக்குத் தலைமையாயினோர் அந்நாட்டு மக்கள் வாழ்க்கையைத் தழுவி தம் செவ்விய ஆட்சியை நடத்துவாராயின் அவ்வாட்சியில் மக்கள் எல்லோரும் கூட்டுறவால் பிணைந்து வறுமை நீங்கி வாழ்வார்களாதலால் அந் நாட்டைக்காணும் மற்றைய நாட்டாராகிய உலகத்தார்கள் யாவரும் அந் நாட்டைப் போற்றி நிற்பர்.

## சேர்ந்து வாழக்கற்கும் கல்வியே சிறந்த கல்வி.

33 உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லார் அறிவிலாதார்

பலவகையான நூற்களைமட்டிலும் கற்றுவிட்டு உலக மக்களுடன் கூடி வாழும் பொது அறிவைக் கல்லாமல்

விட்டவர்கள் அறிவற்றவர்களே ஆவர் (கற்பதென்பது தமக்கு மட்டிலுமே பயன் படலால் அப்படிக்கற்றதை பிறருக்கும் பயன்படச் செய்தற்கு மற்றையாரோடு கூடி வாழும் அன்பின் ஆர்வத்தையும் கற்றறிதல் வேண்டும் அப்படிக்கின்றி நூலைக்கற்றது மாத்திரமாயுள்ள அறிவு பயன்படாதழியு மாதலின் கற்றோரெனப் படுவோர் மற்றையாரோடு கூடி வாழ்வதையும் கற்பாராக)

## அறிவு கிடைத்தால் எல்லாம் கிடைக்கும்.

34 அறிவுடையார் எல்லா முடையார் அறிவிலார்
என்னுடைய ரேனு மிலர்

தாம் இன்புற்றதேபோல் பிறரும் இன்புற வேண்டு மென்ற எண்ணமுடன் ஈகைத்தன்மை மிகுந்த பேரறிவு படைத்தவர்களிடத்து எல்லாப் பொருளும் நிறைந்து விளங்கும் அப்படிப்பட்ட நல்லெண்ணமில்லாதாரிடத்தில் நிறையப் பொருள்கள் இருப்பதுபோல் காணினும் மற்றையோர்க்குப் பலன் கொடாமையால் இல்லாதன வேயாகியழியும்.

## கெட்ட வழியில் பொருள் தேடாதே.

35. இலனென்று தீயவை செய்யற்க செய்யின்
இலனாகு மற்றும் பெயர்த்து

வறுமையால் வாடும் மக்கள் தங்களின் தீராத வறுமையை நீக்க ஒரு தீங்கானச் செயலைச் செய்தாவது பொருளைச் சேர்த்துக் கொள்ளலாம் என எண்ணுவதும் செய்வதும் கூடாது அப்படி செய்யும் தீங்கான செயலால் அடையும் பொருள் அத்தீங்கை அடக்குவதற்குள் செலவாகி அழிந்துவிடும்.

## ஆசிரியரிடத்து அடங்கி நட.

36 பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்

எல்லோராலும் விரும்பத்தக்க ஒழுக்க வழிகளை அறிந்துக் கொள்ள விரும்புவோர் அவ்வழிகளைக் கூறும் ஆசிரியர் தலைவர்களின் நஞ்சொத்த குறைகளையும் பொறுத்திருந்தே அறியக்கடவர் (வெறுத்தால் அறியவேண்டியவைகளை நாம் அறிய முடியாது போய் அறியாமையுடையோராக இருக்க நேரும்—குற்றம் பார்க்கில் சுற்றமில்லை என்றபடி.)

## விருப்பு வெறுப்பற்ற நிலையே கடவுளின் நிலை.

37 வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில

தனக்கென்றே எல்லாவற்றையும் தேடும் விருப்பும் மற்றையோர் இனபுற்று வாழ்வதைக் காணுந் தோறும் வெறுப்பும் இல்லாத நடுநிலைமையுள்ளவர்களின் வழி நடப்போர்க்கு எப்பொழுதும் இன்பமே கிடைக்கும்.

## உயர்ந்தோர் பேராசைக்கு இணங்கார்.

38 இலக்க முடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக்
கையாறுக் கொள்ளாதா மேல்

இவ்வுடலானது இவ்வுலகில் துன்பங்களுக்கு இலக்காக நிற்றலால் இவ்வுடலை துன்பப்படுத்த அமைந்த காது கண், மூக்கு, நாக்கு, உணர்வு ஆகியவற்றின் ஆசையைப் பூர்த்திசெய்ய வேண்டுமென்ற கலக்கத்திற்கு அறிவுடை

யார் ஆளாகாதிருப்பாராக. (அடல் வேண்டும் ஐந்தின் புலத்தை என்றபடி ஆராயுங்கால், காது, கண், மூக்கு, நாக்கு, உணர்வு ஆகிய ஐந்தும் அறிவையும் உடலையும் பலவித அல்லலுக்காளாக்கி இழுக்கலிற் சிக்குண்டு துன்பப்படவும் செய்துவிடலால் பொதுமக்கள் மனக் கலக்கத்திற்கு இடம்தராமல் வாழ்க்கையை நேர்வழியில் நடத்திச்செல்வதே மேலாகும்.)

## பெரியோர், சிறியோர் என்பது குணநிலையாம்.

39 மேலல்லார் மேலிருந்தும் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர்

தாழ்ந்த சிற்றறிவு பொருந்தி பிறர்மீது இரக்கமற்றத் தன்மையுடையார் உயர்ந்து வாழ்வதுபோல் தோன்றினும் அத்தோற்றம் மேலானதல்லவாகும் அஃதேபோல் உயர்ந்த பேரறிஞர் எல்லோரிடத்தும் இன்புடன் கூடி வாழும் தன்மையோடு இருந்து வாழ்க்கையைச்சிறியதாக நடத்தினும் அதனால் தாழ்வாகமாட்டார். (அறிஞன் தன்வாழ்க்கையைச்சிறியது போல் நடத்தினும் பொதுச்செயலை விரிந்த அளவுநடத்திவரலால் அப்பவனின் புகழ் உலகமுள்ளளவும் நிலைத்து நிற்கும்).

## பேராசை பெருந்துன்பத்தைக் கொடுக்கும்.

40 அவாவில்லார்க் கில்லாகும் துன்பம் அஃதுண் டேல்
தவாஅது மேன்மேல் வரும்

தனக்கென்றே அளவற்ற பொருள்களைச் சேர்க்கும் பேராசை இல்லாதார்க்கு பிறரால் ஏற்படும் துன்பங்கள் இல்லையாகும் அவ்வாசை நிறைந்திருப்பின் நீங்காதத் துன்பங்கள் மேலும மேலும் வந்து இன்னலை கொடுத்துக் கொண்டிருக்கும்.

## காதலின் நட்பு கரை கடந்தது.

41 வருகமற் கோல்கன் ஒருநாட் பருதுவன்
பைதனோய் எல்லாம் கெட

பலநாள் பிரிந்திருந்த கணவன் வந்த நாளில் பிரிந்திருந்த பலநாள்களில் ஏற்பட்ட காதலின்பங்கள் யாவும் அன்றே நுகரும் நிறை ஆர்வத்துடன் இருவரும் சொல் நடை முதலிய யாவற்றினும் கலந்து விளங்குவர்.

## எண்ணப்படியே எல்லாம் நிகழும்.

42 கெடுவல்யா னென்ப தறிகதன் னெஞ்ச
நடுவொரீஇ யல்ல செயின்

நமது எண்ணம் நல்லெண்ணத்துடன் நடு நிலைமையில் நில்லாமல் பிறரைத்தீங்கு செய்து கெடுக்கவேண்டுமென்று எப்போது எண்ணுகிறதோ அந்தக் காலமே நாம் கெடுவதற்குரிய கால ஆரம்பமென்பதை அறிந்துக் கொள்வாயாக.

## இயற்கையுணர்வே பேரறிவு.

43 செயற்கை யறிந்தக் கடைத்து முலகத்
தியற்கை யறிந்து செயல்

உலகத்திலே செய்யப்படும் செயல்களின் முறைகளையெல்லாம் நன்கு தெரிந்திருந்தாலும் இயற்கையாக நிகழும் மண் நீர் நெருப்பு காற்று வெளி ஆகிய ஐந்தும் ஒன்றற்கொன்று கலத்தலால் ஏற்படும் உலகம், உயிர், உடல் ஆகியப்பொருள்களின் இயற்கைச் செய்கையின் தன்மையை யுணர்ந்து செய்வனவற்றைச் செய்யக்கடவர்.

## அறிவும், கல்வியும் அமைந்தோர் பெரியோர்.

50 மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை

இயல்பான அறிவுநுட்பம் அமைந்த ஒருவருக்கு செயற்கையான நூலறிவும் பொருந்திவிடுமாயின் அவ்வறிஞரை வேறு நுட்பங்களைக்கொண்டு வெல்லவல்லது மற்றொன்றில்லையாகும்.

## நிலையுள்ள செயல்களை செய்.

51 நில்லாத வற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை

உலகத்திலே தோன்றுகின்ற பொருள்களில் அழிவதும் அழியாததுமாயுள்ள உண்மை நிலையை உணராதவர்கள் அறியாமையிலும் தாழ்ந்தவராவார்கள். (அகப்–புறப், உடல்–உயிர் என்பதில் உடல் அழிவதும் உயிராகிய அறிவு அழியாததென்பதும் இதன் கூற்று.)

## யாவரையும் சினந்து பேசாதே.

52 கடுஞ்சொல்லன் கண்ணில னாயி னெடுஞ்செல்வ
நீடின்றி யாங்கே கெடும்

நிறைந்த செல்வத்தையுடையவன் பலரிடத்தும் கடிந்து பேசியும் பொருளின்மேல் கண்ணோட்டமில்லாமலும் இருப்பானாகில் அச்செல்வம் நிலைக்காமல் அடியோடு அழிந்துவிடும்.

## காதலி நெஞ்சொடு புலத்தல்.

53 கெட்டார்க்கு நட்டாரில் என்பதோ நெஞ்சேநீ
பெட்டாங் கவர்பின் செலல்

நெஞ்சே நம்மைப்பலகாலம் பிரிந்து வந்தவரிடத்து நீ வலியச் செல்கிறாயே நான் தனித்திருந்தபோது என்னை அவர் நினையாதிருந்ததையும் நீ எண்ணிப்பார்த்தாயில்லையே என்னிடத்தே நீ இருந்தும் என் துன்பத்தை தயறியாமலிருப்பதையாராயில் இவ்வுலகில் கெட்டவர்களுக்கு உதவி செய்பவர்கள் இல்லை என்பது. உண்மையாகிறது என்று காதலி தன் மனதைப்பார்த்து கூறுகிறாள்.

## விருந்து செய்வதின் முறை.

54 செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு

வந்த விருந்தினரை உண்பிக்கச் செய்து இனி வரும் விருந்தினரை தன்னுடனுண்ண எதிர்பாாதிருக்கும் ஈகையுடையோனை பேரறிஞர்கள் தங்களுக்குள் உயர்ந்தோராக மதிப்பார். (வானத்தவர்—உயர்ந்தோர்—அறிஞர் விண்ணவர் என்பது விரிந்த அறிவின் ஆற்றலுள்ளவர் என்பது பொருள்.)

## உயர்ந்தோர்கள் நற்குணத்தையே விரும்புவர்.

55 குண நலம் சான்றோர் நலனே பிறநலம்
எந்நலத் துள்ளதூஉ மன்று

பனம், புத்தி, சித்தம், சினம், உள்ளம் இவைகளின் உதவிக்கான சுவைத்தல், பார்த்தல், கேட்டல், உணர்தல், மூகர்தல் ஆகிய அறிவுக் குணங்களின் வளர்ச்சிக்கான நலன்களே பெரியோர்கள் விரும்பும் நல்லனவாகும் மற்றைய உடலாதி பொருள் நலன்களெல்லாம் உடலளவுக்கே நிற்றலால் அவைகளை சான்றோர்கள் எவ்வித நலன்களிலுமொன்றாகக் கருதப்படமாட்டார்கள்.

## பிறரை நாம் காத்தால் நம்மை பிறர் காப்பார்.

56 மன்னுயி ரோம்பி யருளாள்வார்க் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை

*பிற உயிர்களைக்காத்து அன்புடனும், அருளுடனும் நடந்துக்கொண்டால் நம்மை நாமே காத்துக்கொள்ள வேண்டுமென்ற பயம் நம்மை விட்டு நீங்குகிறது. (பிறரை வளர்க்க நினைக்கும் வளர்ப்பு எண்ணம் நெஞ்சகத்தில் வளர்வதால் தன்னுடலையும் அது வளர்க்கச் செய்கின்றன இதனை எண்ணிய எண்ணியாங்கெய்துப எனவும் பிரிதோரிடம கூறுகிறார்.)*

## ஆட்சிக்கு பயிற்சியே முதற் கடன்.

57 வினைக்குரிமை நாடிய பின்றை யவனை
அதற்குரிய னாகச் செயல்

*அரசாங்கத்தார் ஒவ்வொருவரையும் தொழிற்பழக்கத்தில் தேர்ச்சிப்படுத்திய பிறகே அவரை தேர்ச்சிப்பட்ட செயலிற் சேர்க்கப்படல் வேண்டும்.*

## பலரால் முடியாததை ஒரு பெரியார் செய்வர்

58 செயற்கரிய செய்வர் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்

*பெரியோர்கள் மற்றையவர்கள் பெரிதென மதிக்கத் தக்கதும் பலருக்கு பயன தரத்தக்கதுமான அரிய செயலைத்தான் செய்வார்கள் சிறியோர்கள் உயர்ந்த செயலை செய்ய மாட்டாமல் கீழ்மையையே அடைவார்கள்.*

## அணி வகுப்பின் அமைப்பு.

59 தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
போர்தாங்குந் தன்மை யறிந்து

தம் நாட்டை நாடி வரும் எதிரியின் படைவலிமையை அறிந்து அவ்வப்போது எதிரிகள் வகுக்கும் அணிவகுப்பின் முறைகளுக்குத்தக்க வீரப்படைகளை அனுப்பி வெற்றியடைவதே படை மாட்சி எனப்படும்.

## வெற்றி பெறும் செயலுக்கு தேர்ச்சி பெற்றோன் செல்க.

60 அறிந்தாற்றிச் செய்கிற்பாற் கல்லால் வினைதான்
சிறந்தானென் றேவற்பாற் றன்று

நடை பெற வேண்டிய நற்செயலுக்கு அச்செயலில் பன்முறை தேர்ச்சிப் பெற்றோனையே அனுப்பி செய்து முடித்துக் கொள்ள வேண்டும் அப்படியில்லாமல் முக நகத்திற்காகவும் சிறந்தானாக நடிப்பதற்காகவும் தள்ள முடியாதபடி செயல் முறையுணராதானை அனுப்பி வைத்தால் பயன் படாதாகி அழியும்.

## நாளை என்னாது இன்றே செய்க.

61 அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை

பிற்காலத்தில் செய்வோமென்று தாமதிக்காமல் பிறர் இன்புற்று வாழ உதவி புரிந்து அறப்பயனை அடைந்திருங்கள் அவ்வுதவியினாற்றல் மற்றைய சிற்றினமெல்லாம் அழியும்போதும் அவ்வறம் அழியாமல் நின்று துணைபுரியும்

## கைத்தொழில் எல்லாவற்றையும் தரும்.

62 துணைநலம் ஆக்கம் தரூஉம் வினைநலம்
வேண்டிய வெல்லாம் தரும்

ஒருவரைத் துணைகொண்டு அவரின் உதவியால் அடையும் நலன் செல்வப்பொருள் ஒன்றேயாகும் அப்படியின்றி தொழில் முறைகளின் கூட்டுறவு நன்மை ஒருவருக்கு அமைந்தால் அவருக்கு வேண்டிய எல்லாப்பலனையும் அது கொடுக்கும்.

## அறிவு விளக்கே அனைத்தையும் விளக்கும்.

63 எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்கு
பொய்யா விளக்கே விளக்கு

நாட்டில் நிறைந்து விளங்கும் விளக்குகளெல்லாம் அறிவை விளக்கும் விளக்குகளாகமாட்டாது பின்னை நல் விளக்கு எது வெனில் மற்றவரை கெடுக்க எண்ணி கூறும் பொய் முதலியவற்றை கூறுமல் நல்ல சொற்களால் விளக்கும் அறிவு விளக்கே பெரியோர்களுக்கு விளக்குகளாகும்.

## பெண்களின் பசப்பு குணம்.

64 விளக்கற்றம் பார்க்கு மிருளேபோற் கொண்கன்
முயக்கற்றம் பார்க்கும் பசப்பு

விளக்கின் சோர்வே இருள் நிறைந்து விளங்குதற்குக் காரணமாவதுபோல் கணவனைப் பலநாள் பிரிந்து நின்ற மனைவிபாற் காணும் பசப்பெனுமோர் சாயல்நிறம் தலைவன் வாழ்க்கையில் பிரிந்து நிற்பதைக் காட்டும்.

## இதுவுமது

65 பசந்தா ளிவளென்ப தல்லால் இவளைத்
துறந்தார் அவரென்பார் இல்

பசப்புள்ள மகளிரைப் பார்த்து மக்கள் பசந்தாளிவ ளென்கிறார்களே தவிர கணவன் பலநாள் பிரிந்ததின் பலன் இது என்று உணர்பவர்கள் இல்லை.

## இல்வாழ்க்கை பெண்களுக்கே உரியது

66 இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை

வாழ்க்கைத் துணைவியானவள் இல்லற ஒழுக்கத்திலி ருந்து தவறாமல் நடப்பாளாகில் அவ்வீட்டில் எல்லாப் பொருளும் நிறைந்து இருப்பனவேயாகும். அவ்வொழுக் கத்திலிருந்து மாறுபட்டு தாழ்ந்த முறையில் நடப்பாளா கில் அவ்வீட்டில் நிறைந்த செல்வம் இருப்பினும் இல்லா தனவாகி அழியும்.

## ஓடம் வண்டியிலே வண்டி ஓடத்திலே

67 கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடு
நாவாயு மோடா நிலத்து.

பூமியில் உருளும் தன்மையுள்ள சக்கரங்கள் அமைந்த தேர்கள் நீர்நிறைந்த கடலில் செல்லாது. அதேபோல் நீரில் சென்றுகொண்டுள்ள மரக்கலங்கள் பூமியின்மேல் ஓடாது. ஆதலால் இடனறிந்து அவ்வச் செயல்களைச் செய்யவேண்டும்.

## சேரிட மறிந்து சேர்

68 நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு

நிலத்தின் இயல்பான குணத்திற்கேற்ப நீரின் குணம் மாறுதலடைவதே போல மக்கட்கு தான்சேர்ந்த இனத்தின் குணமே தொடர்ந்து பற்றும்.

## தூது செல்பவர்கள் அறிய வேண்டியவை

69 அறிவுரு வாராய்ந்த கல்வியிம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு

தூதுக்குச் செல்லுமொருவர் அறிவுடையராகவும், பார்த்தோர் மதிக்கும் உடலுருவமைந்தவராகவும், பல நூல்களை ஆராயும் திறனமைந்த கல்வியுடையோராகவும் இம்மூன்று செயலின் ஆற்றல் இயல்பாகப் பொருந்திய ஊக்கமுடையோரே தலைவர்களிடம் தூது போவதற்கு தகுதியுடையோர் ஆவார்கள்.

## பெருமையும் சிறுமையும் செயலால் வரும்

70 வினைத்திட்ப மென்ப தொருவன் மனத்திட்பம்
மற்றைய வெல்லாம் பிற

செயலில் திறமையுடையானென்று சொல்லப்படுவது அவனவனின் மன உறுதியும், திட்ப நுட்பத்தாலுமே யாகும். மற்றபடி பலவிதமாகக் கூறுவதெல்லாம் பொருந்தாதனவே யாகும்.

## பிறப்பின் மயக்கம் தெளிவதே ஞானமாகும்

71 பிறப்பென்னும் பேதைமை நீங்கச்சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு

இனியும் பிறப்போ மென்னும் மயக்கம் நீங்குதற்கு சிறப்புப்பொருந்திய வாலறிவின் செவ்விய தெளிவை அறிந்து தெளிவான அறிவோடு நிற்றல் வேண்டும். (தன்னை மறந்ததே பிறப்பெனு மயக்கம். தன்னை யறிவதே மயக்கமற்ற பேரின்பநிலை. இதனையே செம்பொருள் என்றார்.)

## அறிவு இல்லாதார்தான் இல்லாதார் ஆவார்

72 அறிவின்மை யின்மையு ளின்மை பிறிதின்மை
இன்மையா வையா துலகு

அறிவில்லாதவர்கள், இல்லாதவர்களென்று சொல்லுபவர்களைவிட தாழ்ந்தோராவார். அறிவுடையாரிடத்து பிறப்பொருள் இல்லாதிருப்பினும் அவரை இல்லாதாராக உலக மக்கள் கொள்வதில்லை.

## பழகின படைதான் போரில் முனையும்

73 உலைவிடத் தூறஞ்சா வன்கண் டொலைவிடத்துத்
தொல்படைக் கல்லால் அரிது.

பகைவரால் அழிவு வந்தவிடத்தும் அஞ்சாமல் உயிருள்ள வரைக்கும் தம்படையைக்கொண்டு எதிர்த்து நின்று போராடி வெற்றிகாணும் ஆற்றல் நெடுநாள் தங்கி உணர்ச்சிபெற்ற பழைய படைகளால்தான் முடியும். மற்றைய புதுப் படைகளுக்கு அவ்வித உணர்ச்சி வராது.

## மறதியற்றோர் திறமை பெற்றோர்

74 அரியவென் றகாத வில்லை பொச்சாவாக்
கருவியாற் போற்றிச் செயின்

*மறதி என்ற மயக்கத்திற்கு இடம்கொடாமல் உள்ளத்தே விளங்கும் அறிவை போற்றி வளர்த்து நடுநிலைமையோடு நற்செயல்களை செய்வாராயின் இச்செயல் அரிது. இது நடவாது என்ற செயல்கள் ஒன்றேனும் இல்லை.*

## ஊன் உண்பது உடலைத் தடிக்கவும் அறிவைக் கலைக்கவும் செய்யும்

75 செயிரிற் றலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்
உயிரிற் றலைப்பிரிந்த ஊன்

*குற்றங்களிலிருந்து நீங்கி நுட்ப அறிவைப் பெற்றயோரறிஞர்கள் ஓர் உயிரிடத்திலிருந்து பிரிந்த உடலாகிய ஊனை உண்ணவே மாட்டார்கள்.*

## நாணமில்லார்க்கு ஒழுக்கம் அமையாது

76 ஊனைக் குறித்த உயிரெல்லாம் நாணென்னும்
நன்மை குறித்தது சால்பு

*உயிர்கள் உடலைப்பற்றியல்லது எப்படி தனித்து நிற்காதோ அதே போல் நாணமென்னும் சால்பு குணம் ஒழுக்கத்தைப்பற்றியல்லது நிற்காது.*

## சால்பு என்பது பொறுமையின் உயர்வு.

77 சால்பிற்குக் கட்டளை யாதெனிற் றோல்வி
துலையல்லார் கண்ணும் கொளல்

சால்பு என்ற பதத்திற்குத் திட்டமான பொருள் என்னவெனில் நம்மில் உயர்ந்தோரிடத்து ஓர் தோல்வியை நாம் காணின் அதனை எப்படி தாழ்த்திக் கருதாமல் உயர்த்திக்கொள்ளுவோமோ அதேமாதிரி யாராயினும் அறிவிலோ, பொருளிலோ தாழ்ந்தோராயினும் அவரால் குற்றம் ஏற்படினும் பொறுத்து சமமாக ஏற்றுக்கொள்வதே சால்பு எனப்படும்.

## தலைவர் கையிலுள்ளாரென்று கண்டதை செய்யாதே

78 கோளப்பட்டே மெனநெண்ணிக் கோவுளாத
துளக்கற்ற காட்சி யவர் [செய்யார்

கசடறக்கற்ற அறிஞர்கள் தம் தலைவர் தன்னை நன்கு மதிப்பதாகக் கருதி தகுதியற்ற செயல்களைச் செய்ய மாட்டார்கள். (ஒரு சிலர் தமக்கு உயர்ந்தோர் நேசம் இருப்பதை ஆயுதமாகக்கொண்டு அஞ்சாமல் பல தீங்குகளைச் செய்வர். ஆனால் உயர்ந்தோர் செய்யார் என்பதாம்.)

## மன்னர்கள் ஒழுங்கு முறை

79 காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேல்
மீக்கூறு மன்ன னிலம்

பலகுடிகளுக்குத் தலைவரான மன்னர்கள் தங்களைக் காணவரும் எல்லோருக்கும் இடமளித்தும், அவர்களிடத்து சினந்து பேசாமல் மக்களின் கருத்தறிந்து அவர்களின் குறைகளை நீக்கும் தன்மை அமையப்பட்டால் அம்மன்னர்களை எந்நாட்டாரும் மேன்மையாக உயர்த்திக் கொண்டாடுவார்கள்.

## படைத் தலைவன் சீர்முறை

30 நிலைமக்கள் சால வுடைத்தெனினும் தானை
தலைமக்கள் இல்வழி இல்

*போரை ஆரம்பிக்கும்போது நமது படைகளில் எதிரிகளிடம் உள்ள அளவைவிட அதிகமாக போர்வீரர்கள் நிறைந்திருந்தாலும் அப்படைகளை நடத்திச் செல்லும சேனாதிபதி திறமையாளராக இருந்து படைகளை நடத்தவில்லையானால் எவ்வளவு மிகுதியான படையும் பயன் படாதழியும்.*

## அருட்செல்வமோ, பொருட்செல்வமோ, கல்விச்செல்வமோ இல்லாதாரை எல்லாரும் இகழ்வர்

31 இல்லாரை யெல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு

*அருள், கல்வி முதலிய அகப்பொருள்கள் நிறைந்தில்லாதாரை எல்லாரும் இகழ்ந்து பேசுவார்கள் எனினும் பொருட்செல்வமாவது ஈகையுடன் இருந்தால் அச்செல்வரை சிறப்பாகப் பேசுவதோடு உயர்வுப்படுத்துவார்கள்.*

## புலனறியும் ஒற்றர்கள் சீர்முறை

32 சிறப்பறிய வொற்றின்கட் செய்யற்க செய்யிற்
புறப்படுத்தா னாகு மறை.

*மறைந்துள்ள செயல்களை உணர்ந்து அரசர்க்கு விளக்கும் ஒற்றர்கள் தாம் பலவிதமான மாற்றுச் செயலாற்றியும் ஒன்றையறிந்திருக்கலாமாதலின் அம்மாற்றுச் செயல்களை யெல்லாம் சிறப்பாகக்கருதி தன்தலைவரிடத்து எல்லாவற்றையும் கூறக்கூடாது. அப்படி கூறுவதால்*

மறைந்தழிய வேண்டிய இடைச் செயல்களும் உயிர்த்தெழுந்து விடுவதுடன் ஒற்றர்மீது ஐயுரவும் தோன்றும்.

## இதுவுமது

83 மறைந்தவை கேட்கவற் றாகி யறிந்தவை
யையப்பா டில்லதே யொற்று

மறைந்திருந்து கேட்கும் செயல்களில் தங்களுக்கே ஐய்ப்படத்தக்க சொற்களையோ, செயல்களையோ கூட தலைவர்களிடத்து ஒற்றர்கள் சொல்லுதல் கூடாது.

## இதுவுமது

84 ஒற்று முரைசான்ற நூலு மிவையிரண்டுந்
தெற்றென்க மன்னவன் கண்

மன்னர்கள் தம்மிடத்துள்ள ஒழுக்கமான ஒற்றர்களையும், தம் நாட்டு நீதியை உணரத்தக்க நூல்களையும் தன் கண்களாகக் கருதக்கடவர்.

## கண்ணிற் கழுகு கருத்தையும் பார்த்தல்

85 கண்ணிற் கணிகலம் கண்ணோட்டம் அஃதின்றேல்
புண்ணென் றுணரப் படும்.

காண்பவைகளின் உட்பொருளான கண்ணோட்டக் குறிப்பை யுணரமாட்டாத கண்கள் கண்களல்ல. அவைகள் முகத்திலிருக்கும் புண்களென்றே சொல்லலாம்.

## நல்லவர்கள் பணத்திற்காக பழிச்செயல் செய்யார்

86 படுபயன் வெஃகிப் பழிபடுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர்

நடுவு நிலைமையிலிருந்து தவறுதற்கு நாணும் பேரறிஞர்கள் செல்வத்தையடைய ஆசைப்பட்டு உலகத்தார் பழிக்கும் தீச்செயல்களை ஒருபோதும் செய்யவே மாட்டார்கள்.

## மானமற்றவர் மரப் பொம்மையே யாவர்

87 நாணகத் தில்லார் இயக்கம் மரப்பாவை
நாணா லுயிர்மருட்டி யற்று

தீச்செயல்களுக்கு நாணுதல் என்னும் மானம் அற்ற உடலாதிகள் இங்கும் அங்கும் நடமாடுவது (அறிஞர்கள் கண்களுக்கு) மரத்தால் செய்த மனித பொம்மைகள் சூத்திரக்கயிற்றின் சக்தியால் உயிருள்ளவைகள்போல் நடித்து மயங்கவைப்பதை ஒத்திருக்கின்றன.

## நட்பில்லாது தனித்திருப்போனைத் திருத்தமுடியாது

88 அற்றாரைத் தேறுதலோம்புக மற்றவர்
பற்றிலர் நாணார் பழி

எவரிடத்தும் தொடர்பு கொள்ளாத ஒருவரைத் திருத்த முயலாதே. அவர் யாவரிடத்தும் பற்றில்லாத குறையால் எப்பழிக்கும் அஞ்சாது எத்தீச்செயல்களையும் செய்யத் துணிவர் ஆதலின் அவர் திருந்தார்.

## செல்வர்க் கழகு செழுங்கிளைத் தாங்குதல்

89 பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்

இல்வாழ்க்கை இன்புடன் நடத்துபவர் தம்மைச் சூழ்ந்துள்ளாரோடு கூடியுண்டு களித்திருப்பாராயின் பழியின்றி பல்காலம் சீரிய செல்வத்துடன் நிலைத்து வாழ்வார்கள். (சுற்றத்தாரோடு கூடிவாழக் கருதுமொருவர் பழிச் செயலுக்கு அஞ்சுவாராதலின் பகைமையின்றி இனிது வாழ்வார் என்பதாம்.)

## அறிவற்ற மனையாளுக் கடிமையாய் வாழாதே

90 இல்லாளை யஞ்சுவான் அஞ்சுமற் றெஞ்ஞான்றும்
நல்லார்க்கு நல்ல செயல்

ஒருவன் தன்னறிவை மறந்து மனையாள் வாய்க் கடங்கி வாழ்வானாயின் அவன் நல்லவர்களுக்கும் நல்ல செயல்களுக்கும் அஞ்சி வாழவேண்டிவரும். (ஆதலால் வீட்டளவுக்கு மனையாளைக் கலந்தும் பொதுச்செயலுக்கு தோழரைக் கலந்தும் நடக்கவேண்டும்.)

## பொருள் மாத்திரம் போதாது புகழும் வேண்டும்

91 செயற்பால செய்யா தியற்றியான் செல்வம்
உயற்பால தன்றிக் கெடும்

செல்வப்பொருளைப்பெற்றவன் அப்பொருளால்செய்ய வேண்டிய அறங்களைச் செய்து அடையவேண்டிய பெரும் புகழோடு இன்பநிலைகளை அடையாமல் மேலும் மேலும் செல்வத்தையே தேடித் திரிவானாகில் அச்செல்வம் நற்பலனைக் கொடாமலேயே நீங்கிவிடும்.

## தொடர்ந்த நட்பைக் கெடுத்துக் கொள்ளாதே

92 கேடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடார் விழையு முலகு

பலகாலம் கெடாமல் நல்வழியிலேயே தொடர்ந்து வந்து கொண்டுள்ள நண்பர்களின் நட்பை இடையில் ஏற்படும் சிறுசிறு குறைகளால் கெடுத்துக் கொள்ளாமல் நன்மை நிலைப்படுத்துவார்களானால் அந்நட்பை உலகத்தார் இன்பமாக வாழ்த்துவார்கள்.

## அறிஞர்கள் பொதுமொழிகளை மறுக்காதே

63 உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்து
அலகையா வைக்கப் படும்

உலக உண்மைகளை உணர்ந்த அறிஞர்கள் தங்கள் அனுபவத்தால் இவையிவைகள் உண்மையென மொழிந்தால் அவைகளை ஆய்ந்து பாராமல் இல்லை என வீண் வாதம் செய்யக்கூடாது. அப்படிச் செய்பவன் பிடிவாதக் குணம் நிறைந்த வெறித்தன்மை யுடையாரில் சேர்க்கப்படுவார்கள். (அலகை-பிசாசு-பேய் என்பன ஒரு பொருள் சொற்கள். பேய் சுரக்காய் என்பது குணமில்லாத கசப்புடையதாதலின் பேய் என்பது குணமற்றது என்பதும், பேய், நாய் என்பது வெறி நாயின் பெயராதலின்-பேய், பிசாசு அலகை எனப்படுவது வெறிகுணத்திற்கேயாம் என்பதை யறிக)

## ஊன் உணவு நட்பைக் கலைக்கும்

94 படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றூக்கா
உடல்சுவை யுண்டார் மனம் [தொன்றன்

ஆயுதங்களைக் கையிலேந்தியுள்ள ஒருவர் மனம் எப்படி பிற உயிர்களைக் கொல்லுவதிலேயே செல்லுமோ அதேபோதிரி ஓருயிரின் உடலிலுள்ள ஊனைத்தின்பவர்கள் மனமும் தடிப்பேறி நுட்ப ஆராய்ச்சியின்றி கூடிவாழும் குணமிழந்து குரூர குணத்தை அடைவார்கள். (ஊனையுண்ணும் புலி, சிங்கம், நரி, ஓநாய் முதலியமிருகம் சேர்ந்து வாழ்வதில்லை. ஊனையுண்ணாத யானை, பசு, ஆடு முதலியவைகள் சேர்ந்து வாழ்கின்றன) இதனால் ஊனின குணம் காண்க.

## உள்ளம் போலவே செயல் இருக்கும்

95 மனந்தூய்மை செய்வினைத் தூய்மை இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும்

மனம், புத்தி முதலியவற்றால் நினைக்கப்படுவதில் தூய்மையான சுத்தமும், உடலாதிகளால் செய்யப்படும் செயல்களில் பிறர்க்கு தீங்கு நேராதபடி தூய்மையான சுத்தமும் அமைவது அவரின் இனத்தவர்களாய் சேரும் நண்பர்களின் நற்சேர்க்கையில் தான் உள்ளன. நல்ல நண்பர்களின் நட்பு நன்மையை கொடுக்கும். அந்த நன்மை நிலைத்தும் நிற்கும்.

## உணவு கொடுத்தால் வாழ்க்கை கெடாது.

96 வருவிருந்து வைகலு மோம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று

தம் இல்லத்தை நோக்கி வரும் விருந்தினர்களை அன்போடு அழைத்து இன்ப உணவால் மகிழச்செய்யுமொருவன் வாழ்க்கையின் செல்வாக்கு வறுமையால் அழிந்துவிடுவதில்லை.

## வறுமையின் கொடுமை

97 இன்றும் வருவது கொல்லோ நெருநலும்
கொன்றது போலு நிரப்பு

நேற்றுமுதல் என்னைக் கொல்லத்தக்க துன்பத்தை செய்த வறுமையானது இன்றுமா வந்து எனக்கு இன்னலைக் கொடுக்க வேண்டும்.

## நல்ல எண்ணம் வளரும், கெட்ட எண்ணம் அழியும்.

98 நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு

தண்மையுடைய அறிஞர்களின் கூட்டுறவு வளர்பிறை மதியம்போல் நாளுக்கு நாள் வளர்ந்து நிறைவு நிலையை அடையும். அறிவற்ற பேதைகளின் கூட்டுறவானது முதலில் நிறைந்து விளங்குவதுபோல் தோன்றி நாளுக்கு நாள் குறைந்து தேய்பிறை நிலாபோல் அழிந்துவிடும்.

## இரக்கமுள்ள நெஞ்சே நட்பின் இருப்பிடம்

99 நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனில் கொட்பின்றி
யொல்லும்வா யூன்று நிலை.

நட்பு எனப்படும் வாய்மைக்குத் தகுதியான இருப்பிடம் எதுவென்றால் அந்நட்பிற்குரிய எல்லா ஒழுங்குகளும் பொருந்தியுள்ள உள்ளத்தையுடையாரிடத்து நிலையாகத் தங்கி இருக்கும். (மலரில் மணமாயும் பழத்தில் சுவையாயுமிருந்து மக்களை அவ்வின்பங்கள் நட்புப்படுத்துவனபோல் நட்பு ஒவ்வொரு நல்ல பொருள்களிடத்தும் நிறைந்திருக்கின்றன.)

## மாண்புடன் வாழ்பவன் மலையினும் பெரியோன்.

100 நிலையிற் றிரியா தடங்கியான் தோற்றம்
மலையினு மாணப் பெரிது

இல்வாழ்க்கை நெறியிலிருந்தும் பிழைபடாது வாழும் ஒருவரின் உயர்வான தோற்றமானது மலையைவிட உயர்ந்த நிலையுடையதாகும். (மலை எல்லாரும் எளிதில் காணுமளவு உயர்ந்தும் வரப்பினும் வளந்தரும் ஈகைப்புமுடையதாகலின் மலையை உயர்ந்தோர்க்கு உதாரணம் கூறினர்.)

## கற்புடைப் பெண்கள் தம் கணவரின் குற்றங்களைந்து குணத்தைக் கொள்வர்.

101 பெரிதாற்றிப் பெட்பக் கலத்த லரிதாற்றி
யன்பின்மை சூழ்வ துடைத்து

பிரிந்துபோன தமது காதலர் வரும்போது எம்மை மிகப்பெரிதாக உன்னி நம்முடன் இன்போடு கலந்திருப்பர் என்ற உயர்ந்த எண்ண முதிர்ச்சியால் அரிதான துன்பங்களை யெல்லாம் பொறுத்து தலைவரின் அன்பின்மையையும் மறந்து கற்புடைப் பெண்கள் தம்மைக்காத்துநிற்பர்.

## அளவுக்கு மிஞ்சினால் அமிழ்தும் நஞ்சாம்.

102 உடைத்தம் வலியறியா ரூக்கத்தி னூக்கி
யிடைக்கண் முரிந்தார் பலர்

தம்முடைய வலிமையை அறியாமல் தமது ஊக்கத்தின் முயற்சியால் தம் அளவுக்கு மேற்பட்ட செயல்களைத் தொடங்கி நிலைப்படுத்த மாட்டாமல் இடையில் முறிபட்டு கெட்டவர்கள் பலராவர்.

## படித்தபடி நடக்கப் படிப்பதே படிப்பாம்.

103 பலநல்ல கற்றக் கடைத்து மனநல்ல
ராகுதல் மாணார்க் கரிது

*உள்ளத்தில் இயல்பினாலேயே நற்குணங்கள் அமையாதவர்கள் அநேக நல்ல நல்ல நூல்களைக் கற்றிருப்பினும், அவர்களின் உள்ளந் திருந்துவது அரிதாகும்.*

## கற்புடைப் பெண்களின் ஆற்றல்.

104 அரிதாற்றி யல்லனோய் நீக்கிப் பிரிவாற்றிப்
பின்னிருந்து வாழ்வார் பலர்

*கணவனைப்பிரிந்துவாழும் உத்தம வாழ்க்கைத்துணைவி தனக்கு நேரும் அரிய நெருக்கடிகளில் தப்பியும் தன்னுள்ளத்தே காதல் நோய் பிறவாமல் காத்தும் பிரிந்து தனித்து இருப்பதால் நேரும் மனச்சோர்வைத் தணித்தும் தன் கணவன் வரும் வரைக்காத்திருப்பாள்.*

## சுருங்கச் சொல்லி விளங்கவை.

105 பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்ல றேற்றா தவர்

*குற்ற மற்ற சில சொற்களால் உண்மைகளை விளக்கி மனந்தெளிவடையச் செய்ய ஆற்றல் இல்லாதவர்கள் பலவித வீண் சொற்களைப்பேசி காலம் கழிக்க ஆவல் கொள்வர்.*

## காதலியின் உள்ளக் கிடக்கை.

106 அவர்தந்தா ரென்னுந் தகையா லிவர்தந்தென்
மேனிமே லூரும் பசப்பு

*நான் என் காதலனை உள்ளத்திருத்தியுள்ளேன் அவர் எண்ண முதிர்ச்சியே இப்பசப்பாகும் இப் பசப்பைக் கொடுத்தவர் அவரேயாதலால் விரமிக்க எனது உடலையும் அவர்வயமாக்கிக் கொண்டதை தோழிகளே அறிவீராக.*

## இதுவுமது.

107 பசப்பெனப் பேர்பெறுத லன்றே நயப்பித்தார்
நல்காமை தூற்றா ரெனின்

*அன்று நம் தலைவியின் உள்ளத்தைக்கவர்ந்துநின்றவர் மற்றும் நினையாமல் இருந்து நம் தலைவியை பசப்பாக்குதல் தகாச்செயலாதலால் ஆண்களின் இரக்கமற்ற தன்மையை என் சொல்வது. (தலைவனை தோழிகள் நிந்திக்கின்றார்)*

## இதுவுமது.

108 எனைத்து நினைப்பினுங் காயா ரனைத்தன்றே
காதலர் செய்யும் சிறப்பு

*எஃ னுள்ளத்தே தங்கியுள்ள காதலரை எவ்வளவு தான் நினைந்து உருகினாலும் அவர் என்னை சினந்துக் கொள்ளார் அவர் எனக்கு செய்யும் சிறப்புஇதுதானாகும்.*

## உதவி செய்வதே உத்தம நெறியாம்.

109 சிறப்பீனுஞ் செல்வமு மீனும் அறத்தினூஉங்
காக்க மெவனோ உயிர்க்கு

அறநெறிக்கடங்கி வாழ்க்கை நடத்தும் ஒருவருக்கு சிறப்பான பேரின்ப நிலையும், உலகத்திற்கான செல்வ நிலையும் பொருந்தியிருக்கும் ஆதலால் அறநெறியை விட உயர்ந்தது வேறு என்ன இருக்கமுடியும்.

## உயிர்களைக் கொல்லாதே.

110 உயிருடம்பி னீக்கியா ரென்ப செயிருடம்பிற்
செல்லாத்தீ வாழ்க்கை யவர்

உடம்போடு கூடிய உயிரைக் கொன்றவர்கள்தான் நோயோடு கூடிய உடலைப்பெற்று துன்பத்துள் தீங்கான வாழ்க்கை நடத்துவார். (உயிர்களைக்கொல்லுந் தொழிலைக்கொண்டவர்களின் குணமும் அழித்தல் தன்மையில் வளர்வதால் அத் தீங்குடைய குணம் தங்கும் உடலும் தீங்கான நோய்களுக்காளாகும் என்பதாம்.)

## காதலர்கள் எண்ணம்.

111 அவர்நெஞ் சவர்க்காதல் கண்டு மெவனெஞ்சே
நீயெமக் காகா தது

நெஞ்சே எனது காதலரின் நெஞ்சு என்னை நினையாமல் அவர்வழி நிற்றலையறிந்தும் நீ ஏன் அவரை நினையாமல் என் வழி நிற்கக்கூடாது. (தலைவி தன்னெஞ்சு காதலனையே நினைந்துருகுகிறபடியால் அதை மாற்ற சமாதானம் கூறுகிறாள்.)

## வரவுக்குத் தக்க செலவு செய்.

112 ஆகா றளவிட் டிதாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை

நமக்கு வரும் வருமானம் எவ்வளவு குறைவா யிருந்தாலும் அதனால் ஒரு குறையுமில்லை ஆனால் நமது சிலவு வருமானத்திற்கு குறைந்திருக்க வேண்டும். (இதனால் கடனின்றியும், பிறர்பால் இரந்துண்ணாதும் வாழவேண்டு மென்றதையும் அதிக வருமானம் வரும் போது ஈகையுடன் வாழலாம் என்பதையும் சுருக்கமாக கூறுகிறார்.)

## உளவு காணும் ஒற்றர்கள் நெறிமுறை.

113 கடாஅ வுருவொடு கண்ணஞ்சா தியாண்டு
உகாஅமை வல்லதே யொற்று

மறைந்துள்ளதையும் கண்டு தலைவர்களுக்கு அறிவிக்கும் ஒற்றர்கள் பிறர் ஐயப்படாத படியுள்ள வடிவுடன் மற்றவர்களின் நோக்கத்திற்கஞ்சாதபடி தன்னுள்ளக் கருத்தை எங்கும் வெளியிடாத தன்மையோடு ஒன்றை யறியவல்லதே ஒற்றெனப்படும்.

## இதுவுமது.

114 ஒற்றினா னொற்றிப் பொருடெரியா மன்னவன்
கொற்றங் கொளக்கிடந்த தில்

மன்னவன் பல ஒற்றர்களின் கருத்தை ஒருமித்து நோக்கி அக் கருத்துக்களிலிருந்து உண்மையை அறிய திடயுக்தியில்லையானால் அம் மன்னவன் எச் செயலிலும் வெற்றியோடு வாழமாட்டான்

## உழவுத் தொழிலுக்குப் பஞ்சமில்லை.

115 இலமென் றசைஇ யிருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்

வறுமை மிகுதியால் அவதிப்பட்டு எனக்கு ஒரு தொழிலுமில்லையே என ஏங்கி இருப்பவனைக் கண்டு நிலமாகிய தாய் என்னிடமுள்ள நிலத்தை உழுது பயிர் செய்து வாழ முடியாமல் எங்கும் அறிவினர்களும் இருக்கிறார்களே என்று சிரிப்பாள்.

## பிழைநீக்க உரிமை கொண்டதே நட்பாகும்.

116 நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு

ஒருவரோடொருவர் நட்பு கொண்டு நண்பர்களா யிருப்பதானது வீண் வார்த்தை பேசி விளையாடிக்காலங் கழிப்பதற்கல்ல அந் நட்பினர்களுக்குள் ஏற்படும் குறைகளை எடுத்துக்காட்டியும், இடித்துக்காட்டியும் குற்றங்களை நீக்கி இன்புடன் வாழ்வதற்கேயாம்.

## பெண்களால் கெடாதே, பெண்களைக் கெடுக்காதே.

117 பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்க மிருட்டறையில்
ஏதில் பிணந்தழீஇ யற்று

தனக்கென ஓர் கணவனை தேர்ந்தெடுத்துக்கொள்ளாது பொருளுக்காக பேராசைப்பட்டு பொருளளவுக்கு காதல் போல் நடிக்கும் பொருள் பெண்டிர்களின் சேர்க்கையானது இருட்டு வீட்டில் இறந்து கிடக்கும் பிணத்தை கட்டிப்பிடித்து முத்தமிட்டுக் காதலித்ததையொக்கும்.

## உள்ளும், புறமும் கள்ளமின்றி வாழ்.

118 அற்ற மறைத்தலோ புல்லறிவு தம்வயிற்
குற்ற மறையா வழி

*பிறர்க்குத் தீங்கு செய்யும் குற்றங்கள் நம்மிடம் குடிகொண்டிருப்பதை அகற்றுமல் நம் உடம்பில் உள்ள அவயவக்குறைகளை மாத்திரம் நல்ல துணிகளால் மறைத்துக் கொண்டு மற்றையவரினும் சிறந்தாராக நடிப்பது அறியாமையினும் அறியாமையாகும்.*

## வழியறிந்து வாழ்க்கை நடத்து.

119 வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்றார்க் கினிது

*நீதி நூல்களைக் கற்று நல்வழிகளை அறிந்து கொள்ளாமலும், அறநெறிகளுக்கடங்கி தொழில்களை செய்யாமலும் தன் நடத்தையால் வரும் பழியை உணராமலும், ஒழுக்க முறைகளை ஏற்றுக்கொள்ளாமலும் உள்ள ஒருவன் தன் பகைவரால் விரைந்து கெடுவான்.*

## எளிதில் கிடைக்கும் இன்பத்தையடையாமல் வலிய துன்பத்திற்கு ஆளாகாதே.

120 இனிய வுளவாக வின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று

*நம் தமிழில் இனிமைதரத்தக்க பல சொற்கள் நிறைந்திருந்தும் அச்சொற்களைப்பேசி அன்பான இன்பச்சுவையை அடையாமல் இனிமைதராத இன்னா சொற்களைப் பேசி அச் சொற்களின் பலனாகிய சினம், பகை முதலியதை ஏற்றுத் துன்படைதல் எப்படியிருக்கிறதென்றால் நல்ல*

பழங்கள் நமக்கென்றே நிறைந்திருப்பது தெரிந்திருந்தும் அதை உண்ணா மறுத்துவிட்டு பிடிவாதத்திற்காக காயைத் தெரியாமல் கவர்ந்து தின்பதை யொக்கும்.

## பேராசையற்ற நிலையே பற்றற்ற நிலையாம்.

121 அற்றவ ரென்பார் அவாவற்றார் மற்றையார்
அற்றாக வற்ற திலர்

உலகப்பற்றை அற்றவர்கள் என்று சொல்லும் ஞானிகள் யார் எனின் கண்டனவற்றையெலாம் தனக்கென்றே எண்ணும் அவா அற்றவர்களேயாகும், மற்றபடி வீணாக வார்த்தையால் பற்றற்றாராகப்பேசப்படுவோர்கள் எல்லாம் பற்றை நீக்கினவர்களல்ல.

## பெருங்குடிமக்கள் இல்லையென்று சொல்ல நாணுவர்.

122 இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள

நற்குடியிற் பிறந்த ஆன்றோர்கள் பிறர் துன்புறக் கண்டால் தம்மாலான உதவியைச் செய்யத்துணிவரே யன்றி என்னிடம் ஒன்றுமில்லை என்ற இழி சொல்லைச் சொல்ல நாணுவர்

## கண்ணுக்கழகு எண்ணிப் பார்த்தல்.

123 உளபோன் முகத்தெவன் செய்யு மளவினாற்
கண்ணோட்ட மில்லாத கண்

கண்கள் என்றால் தம் அளவிற்கு அறியப்பட வேண்டிய நோக்கத்தோடு மற்றைப் பொருள்களின் குறிப்பையு மறிய வேண்டும் அப்படியறிய மாட்டாத

கண்கள் முகத்திலிருப்பது கண்களிருப்பதாகப் பெயரே யொழிய அக்கண்களால் பயன் இல்லை.

## இதுவுமது.

124 கண்ணோட்டத் துள்ள துலகியல் அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை

காணப்படும் பொருட்களின் உண்மையை பகுத்தறியும் கண்ணோட்டமுள்ள அறிஞர்களிடத்துத்தான் உலகம் அடங்கியிருக்கிறது அப்படிப்பட்ட ஞானக்கண்ணில்லாதவர்கள் எல்லாம் பூமிக்கு பாரமானவர்களேயாம்.

## ஆட்சிக்கு அடங்கி நட.

125 பொறையொருங்கு மேல்வருங்காற் றங்கி யிறைவற்
கிறையொருங்கு நேர்வது நாடு

மற்றைய நாட்டவர்கள் நம் நாட்டில் தங்குதல் முதலியதால் ஏற்படும் அரசாங்க செலவையும் அரசர் விதிக்கும் சுங்கத்தையும் நாட்டின் சொந்தக்காரர் கொடுக்கக் கடமைப்பட்டவர்களாம்.

## மக்களின் குறைகளை நீக்கும் அமைப்புள்ளதே நாடாகும்.

126 நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு

மக்கள் தேடாமல் உணவும், தொழிலும் கிடைக்கத் தகுதியுடையதே நாடாகும் அப்படி இல்லாமல் தேடியலைந்து அழுதுவாடி கிடைத்ததையுண்ணும் நிலையிலிருப்பது நாடெனப்படமாட்டாது.

## குடிகளின் குறைகளை நீக்காத அரசன் வாழும் நாடு கெடும்.

127 நாடொறு நாடி முறைசெய்யா மன்னவ
னாடொறு நாடு கெடும்

*ஒவ்வொரு நாளும் தம் அரசாங்கத்தின் நிர்வாகத்தை முறைமையாக நடத்தாத மன்னரைத் தலைமையாகக் கொண்டநாடு நாளுக்குநாள் அழிந்துக்கொண்டேபோகும்.*

## பெரியாரைத் துணைக்கொள்.

128 கெடல்வேண்டிற் கேளாது செய்க அடல்வேண்டின்
ஆற்று பவர்க ணிழுக்கு

*பெரியோர்களின் சொல்லைக்கேளாது தம்நினைவுப்படி நடப்பாயாகில் நீ விரைந்து கெடுவாய் அன்றி ஆற்றலுடன நீதியை நிலைப்படுத்தும் அரும் பெரியோர்களுக்குதீங்கான இழுக்கைச்செய்வாயாகில் அடியோடு அழிந்தேபோவாய்.*

## பெரியோர்களின் சொல்படி நட.

129 இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல்

*நமது வாழ்க்கையில் ஏற்படும் இடுக்கான நெருக்கடியை சமாளித்துக்கொள்ள நம் அறமே போதாது அதற்காக உயர்ந்த பேரறிஞர்களின் ஒழுக்கச் சொற்களை கேட்டு அச் சொற்கள் உள்ளத்தில் ஊறி இருக்குமானல் அக் கேள்வியின் பலன் நம் நெருக்கடியை தீர்க்க வழுக்கலிற் சிக்கிய ஒருவனுக்குக் கிடைத்த ஊன்றுகோல் போல சமயத்தில் உதவி புரியும்.*

## பலனுடைய சொற்களைப் பரிந்து பேசு.

130 சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்

*நாம் பிறர்க்கு ஒன்றைசொல்லும்போது பலனில்லாத வீண் சொற்களை சொல்லக்கூடாது. நமது சொற்களால் நிறைந்த பலன் வாழ்க்கையில் கிடைக்கும்படியானமுறையில் விளக்கிப் பேசப்பட வேண்டும்.*

## பிறரைக் கெடுக்கும் பேச்சு பேசாதே.

131 சொற்கோட்ட மில்லது செப்ப மொருதலையா
வுட்கோட்ட மின்மை பெறின்

*மனதில் ஒருதலைப் பிளவு இன்றி நடுவுநிலையில் நின்று சொல்லும் சொற்களில் ஒருவர் கெடவும், ஒருவர் வாழவும் என்ற அழிவுக்கு இடமின்றி சொற்களை மொழிவதே செப்பமான வழிகளாகும்.*

## காதலரின் பிரிவாற்றுமை

132 பெறினென்னும் பெற்றக்கா லென்னும் உறினென்
உள்ள முடைந்துக்கக் கால் [னு

*காதலர் பிரிந்து சென்று பன்னுளாகியும் இன்னும் வராமையால் எனது உள்ளம் உடைந்து உயிர்போயின பின்னல் அவர் வந்தாலென்ன, அவரால் பல நன்மைகள் கிடைத்தால்தானென்ன. அவர் என்னையே மெய்யுறக் காதலித்துத்தானென்னும். (பிரிந்து நின்ற தலைவரின் எண்ணங்கள் இப்படியெல்லாம் இருக்குமென்று விளக்கப்பட்டது.)*

## இடமும், காலமும் எண்ணித் துணி.

133 காலாழ் களரில் நரியடுங் கண்ணாஞ்சா
வேலாள் முகத்த களிறு

அஞ்சுதலில்லாத வேல் போன்ற தந்தங்களை முகத்திலே உடைய யானையும் சேற்று நிலத்திலே கால்கள் அழுந்த நேர்ந்தால் அந்த யானையை சிறியதான நரி கூட கொன்றுவிடும். ஆதலால் இடமறியாமல் ஓர் செயலைச் செய்தால் வல்லாரும் புல்லாரால் அழிவர்.

## கள்ளின் குணம் புத்தியை மயக்கும்

134 களித்தறியே னென்பது கைவிடுக நெஞ்சத்
தொளித்ததூஉ மாங்கே மிகும்

கள்ளை உண்பவர்கள் தாம் உண்ணுதபோது தம்மை யாராவது சந்தித்தால் அவர்களிடம் கள்ளுண்பதில்லை என்று உண்பதை மறைத்துச்சொல்வதும் உண்டபோது நெஞ்சில் மறைத்து வைத்த உண்பதில்லை என்ற சொல்லையே பன்முறை வலியச் சொல்வதும், கள்ளின் மயக்கம் தெளிந்தவுடன் நாம் ஏன் இப்படிப் பேசினோம் என்று ஏங்குவதும் கள்ளுண்பவர்களின் தன்மையாகும்.

## தாழ்ந்த குணத்தோன் உயர்ந்து வாழான்

135 மிகைமேவு மெய்ப்பொருள் காணார் இகன்மேவு
மின்னு வறிவி னவர்

பகைமையில் மனங்கொண்ட தீங்கான அறிவைப் படைத்தவர்கள் மேன்மையடைவதற்குரிய மெய்ப்பொருள் நிறைந்த நீதிநூல்களையும், அறிஞர்களையும் கண்டு தெளிய மாட்டார்கள்.

## சொற்பொழிவின் சீர்முறை

136 அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்

சொல்லின் தொகையிலக்கணத்தை நன்கு உணர்ந்த அறிஞர்கள் ஓர் கூட்டத்தில் பேசும்போது அங்குள்ள மக்களின் உள்ளக்கருத்தை நன்கு தெரிந்து தாம் கற்ற நூல்களையும், அனுபவத்தையும் நன்கு ஆய்ந்து தக்கன சொல்வாராக.

### இதுவுமது.

137 அவையறியார் சொல்லன்மேற் கொள்பவர் சொல்லின்
வகையறியார் வல்லதூஉ மில்

கூட்டத்திற்கு வந்துள்ளவர்களின் சீரிய கொள்கைகளையும் அவர்களின் செயல்முறைகளையும் உணர்ந்து பேசும் ஆற்றல்பெருதவர்கள் பிறர்க்கு ஒன்றைச்சொல்ல முற்படுதல் அறிவுடைமையும், ஆற்றலுடைமையும் ஆகாததோடு தமிழில் உள்ள சொற்களின் சக்தியையும், வகைகளையும் அறிந்த ஆற்றலுமடையாதாராகிருர்கள்.

சொற்களின் வகைச் சுருக்கம்–ஒரு சொற்ருெடரில் எழுவாய் பயனிலை செயப்படுபொருள அறிதல் இறந்தகாலம், நிகழ்காலம் எதிர்காலமறிதல் தன்மை, முன்னிலை, படர்க்கை எதுவெனத்தெரிதல், அகப்பொருள், புறப்பொருள் (இயற்கை செயற்கை) அறிதல் போன்ற சொல்லிலக்கண முறைகளையும், சொற்களின்தொகை—ஒரு பெயர்ச்சொல்லுக்கு பல சொற்கள் வந்ததின் வழிகள் அதாவது மலை என்ற ஒன்றுக்கு கிரி அசலம், பொருப்பு

சயிலம், போன்ற பல பெயர்கள் இதேபோல் ஒவ்வொன்றினுக்கும் வந்த சொற்களின் பெயர் வழிகளை அறிதல்.

சொற்களின்நடை, கூட்டத்தில் பேசும்போதும், ஒரு நூலை எழுதும்போதும் எடுத்துக்கொண்ட முறைகளை ஆற்றொழுக்குமாதிரி அதையே சொல்லிப்போதல் அல்லது எடுத்த முறைகளை ஆங்காங்கே கூறி இடையிடையே பல நூல் உதாரணம் விளக்கல் எடுத்துக்கொண்ட அதிகாரத்தை பற்றொரு கதையால் நீட்டிச்சொல்லல். (ராமாயணப் பாரதத்தால் நீதியை கூறல் போல்) எடுத்த அதிகாரத்தை விளக்கிக்கொண்டே கால நிலைக்கேற்ற தங்களின் கருத்தை பருந்தின் வீழ்வுபோல பாய்ந்து கருத்தைக்கூறிவிட்டு முன் அதிகாரத்தை தொடரல் போன்ற முறைகளை நன்கு ஆய்ந்து பேசல் முதலியனவாம்.

## நாணமுடையோன் ஒழுக்க மடைவான்

138 இற்பிறந்தார் கண்ணல்ல தில்லை யியல்பாக
செப்பமும் நாணும் ஒருங்கு

நல்ல குடும்பத்தில் பிறந்தாரிடத்துத்தான் இயல்பாகவே செம்மையான உள்ளமும், நாணமும் பொருந்தியிருக்கின்றன. மற்றையோரிடத்து தூய்மையான குணமும் வெட்கமும் பொருந்தாமல் மானம் கெடத்தக்கனவான செயல்களைச் செய்து தாழ்வையே அடைகின்றனர். (ஒரு குடும்பம் ஒழுக்கமாக இருந்தால் அக்குடும்பத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு இயல்பாகவே ஒழுக்கம் அமையும் மற்றையோர் ஒருவரைப் பார்த்துப் பழகியோ நூலைப் படித்து திருந்தியோதான் ஒழுக்கத்தையடைவர் என்பதாம்.)

## கல்வி யறிவு கடைசிவரையிலும் காக்கும்.

139 ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து

நம் உடலில் ஏற்பட்ட ஏழுபருவங்களில் முதல் பருவமான இளமையில் கற்ற கல்வி மறறைய கிழவன், பெருகிழவன் வரையுள்ள ஏழு பருவங்களிலும் மறையாமல் உடனின்று அறிவுக்கு உதவிபுரியும.

## இருந்தும் இல்லாதவர்களாதல்

140 உடைமையு ளின்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு

ஒருவரிடதது பெருஞ் செல்வம் நிறையப்பெற்ருல் அவா அன்போடு பிறாகரும் இட்டு உண்டு இன்பத்தை யடையக் கடவர். அப்படியின்றி யாரையும் மதியாமல் ஈகையிற் சிறிதேனும் இடங் கொடாமல் இறக்கமற்று பொருளைத் தேடுவதிலேயே காலங் கழிப்பாராஞல் அவா பொருளால் அடையும் பலனை யிழந்த அறிவீனரே யாவர்.

## உண்டால் இனிக்கும் தேன் கண்டால் இனிக்கும் காதல்

141 உண்டார்க ணல்ல தடுநறாக் காமம்போல்
கண்டார் மகிழ்செய்த லின்று

ஒருவரையொருவா நேசிக்கும காதல்மிக்க ஆசையான நட்பு அவரைக கண்டவிடத்தே அளவற்ற மகிழ்ச்சியை ஊட்டும். தேன் அப்படியின்றி நாவினுல் உண்டுப் பார்த்தால்தான் அதன் சுவை மகிழ்ச்சியை ஊட்டும. (இந்து காதலா காதலி கூறறில் தேனைப்பழித்தல் கூறப் பட்டது.)

## கொடுங்கோல் மன்னனின் தாழ்ந்தமுறை

142 இன்மையி னின்னா துடைமை முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின்

நாட்டை ஆளும் மன்னவன் தம் ஆட்சி முறையை சீர்பட நடத்தாவிடில் அந்நாட்டில்உள்ள பெருஞ்செல்வா கள் அவர்களின் செல்வப் பலனை அற முதலியவற்றால் அடையாராகி இல்லாதவர்களைவிட தாழ்ந்த நிலையை அடைவர்.

## காதலர்களின் கடல் காட்சி

143 படலாற்றா பைதல் உழக்கும் கடலாற்றாக்
காமநோய் செய்தவென் கண்

அலைகள் ஒன்றோடொன்று மோதிப்புரண்டு விளையாடுங் கடலின் காட்சியை கண்ட காதலர்களின் கண்களுக்கு அக்கடலைவிட காதல் சிறப்புப் பெரிதாகததோன்றி காதலர்களின் உள்ளததை அலக்களிக்கின்றன.

## அறிவோடு பார்த்தால் அனைத்தையும் அறியலாம்

144 கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்
என்ன பயனு மில [சொற்கள்

ஒருவரை நாம் பார்க்கும்போது அவர் கண்களும் நம்மைப் பார்க்கும் சந்திப்புநேருமானால் அவரின் உள்ளக் கருத்துக்களை அவர் சொல்லாததற்கு முன்பே குறிப்பாக உணர்ந்துக் கொள்ளமுடியும்.

## அறிஞர்கள் வறுமைக்கு அஞ்சார்

145 இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர்

சுவைத்தல், பார்த்தல், உணர்தல், கேட்டல், முகர்தல் என்ற ஐந்து அறிவையும் தம் வயபபடுத்திக்கொண்ட அறிஞர்கள் தாம் இல்லாதாராக இருக்கிறேம். செல்வராக வேண்டுமென்பதற்காக பிறர் பொருளை சூதாக அடையக் கருதமாட்டார்கள். (கல்விச் செல்வம். செவிச் செல்வம், அருட் செல்வம், மக்கட் செல்வம், பொருட் செல்வம், போன்ற பல சீரியச் செல்வங்களையும் ஒருங்கே கொண்ட அறிவுச்செல்வத்தைப் பெற்றவர்களுக்கு பணம் பாதிரமாயுள்ள செல்வம் பெரிதாகத தோன்றுவதில்லை.)

## உயிரைக் கொல்வதும், ஊனையுண்பதும் நல்லோர்கள் செயலல்ல

146 அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணைமை நன்று

நெருப்பில் நெய்யைப்பொழிந்து உயிர்களைக்கொன்று செய்யுப யாகங்கள் ஆயிரக்கணக்காக செய்து அதனல் அடையும் பலனைவிட ஒருயிரைக் கொல்லாமலும், ஊனை உண்ணாமலும் இருப்பதனலேயே அந்த யாகப் பலனைவிட நற்பலனை அதிகமாக அடையலாம். (யாகம் என்பது நம் நாட்டு முறையல்லவாகையால் அதைக் கண்டிக்கிறார்— வேள்வி என்பது நம் நாட்டு வழக்கில் விருந்தோம்பல் என்பது பொருள். திருக்குறள் அதிகாரம் 9, குறள் 7, 8-ல காண்க

(இயற்கை வளம் மிக்க நம் நாட்டினர் தாவர உணவாலேயே ஆற்றல்மிக்க உடல்வலிமையைப் பெற்றுவாழலாம். ஆதலால் இயற்கை வளமற்ற நாட்டினரின் உணவான புலால் உணவு அன்பின் குணத்தை நீக்கி பகைமையை வளர்ப்பதால் அவ்வூனுணவை நீக்கியும், சகல உயிர்களும் சோலை முதலியவிடங்களில் கூடிப்பாடி விளையாடும் வளப்பத்தைக்கண்டு ஆனந்தங்கொண்டு அவைகளைக் கொல்லாமல் நேசித்தும் வந்துள்ளனர் என்பதாம்.)

## உதவி செய்தவர்களை உள்ளளவும் நினை

147 நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று

ஒருவர் நமக்குச்செய்த உதவியை மறவாதிருந்து அவருக்கு ஏதாவதிடுக்கண் நேர்ந்தபோது கேளாததன் செய்துவாழ்வதோடு ஒருவர் நமக்கு அறியாமல் செய்த தீங்குகளைப் பொருட்படுத்தாமல் மறந்துவிடுவதே நல்லவர்களின் செயல்களாகும்.

## பெரியோர்களின் பேச்சில் குறுக்கிடாதே

148 நன்றென்ற வற்றுள்ளு நன்றே முதுவருள்
முந்து கிளவாச் செறிவு

தம்மிலுயர்ந்த அறிஞர்கள் கூடி ஆராயும்சபையின் முடிவு இன்னதென உணராமல் திடீரென கண்டபடி பேசி அறிஞர்களுக்கு இன்னல் விளைவிக்காமல் இருப்பது நல்லதென்பதிலெல்லாம் நல்லதாகும.

## கற்றுணர்ந் தடங்கு

149 செறிவறிந்து சீர்மை பயக்கு மறிவறிந்
தாற்றி னடங்கப் பெறின்

*கல்வியறிவின் திறத்தையும் அடங்கியிருப்பதின் அறிவுடைமையையும் ஒழுக்கநெறிமுறையில் வழாதிருக்கும் நிலையையுமறிந்து அடக்கத்தைக் கைக்கொள்வாராகில் அவ்வடக்க நெறியை நல்லோர்களறிந்து உயர்ந்த அறிஞர்களின் நன்னிலைமைக்கு அழைத்துச் செல்வார்கள்.*

## பெருமையும், சிறுமையும் நடத்தையால் வளரும்

150 பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல்

*ஒருவர் உயர்ந்த புகழுடன் வாழ்வதற்கும், மற்றொருவர் பலரால் நிந்திக்கப்பட்டு வாழ்வதற்கும் காரணம் அவரவர்கள் செய்யும் செயலின் பலனேயாகும். நற்செயலின் பலனும், தீச்செயலின் பலனும் பொதுமக்கட்கு (செயல் வடிவான உரைகல்லின்மேல் பலனாகிய பொருளை உரைத்து) உணரும் ஆற்றல் உள்ளதால் அவர்கள் அறிந்து அவரவர் செயலுகளுக்குத்தக்க புகழோ, இகழ்வோ ஆகிய பட்டத்தைச் சூட்டுவார்கள்.*

## கற்றோரைக் கற்றோரே கண்டுணர்வார்

151 கற்றறிந்தார் கல்வி விளங்குங் கசடறச்
சொற்றெரிதல் வல்லார் அகத்து

*நாம் கற்ற கல்வியினாற்றலை நன்கு கற்றவர்கள் நிறைந்த சங்கங்களில் விளக்கமாக எடுத்துரைததால் அக்கற்றோரால் நம் கல்வி பலர்க்கும் நன்கு விளங்கும்.*

# நம் நாட்டுப் பண்டையத் தமிழ் நூல்களின் விளக்கம்.

## சமதர்ம நீதி நூல்களின் முறை.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை

நம் வாழ்க்கைக்காக சேர்த்த உணவுப்பொருள்களை பசியால் வாடும் உயிர்களுக்கும் கொடுத்து அவ்வுயிர் இன்பப்படக்கண்டு நம் உயிரையும் காப்பாற்றிவரும் இரக்கமுள்ள நெஞ்சுடன் வாழ வேண்டுமென்பதைத்தான் சரித்திர நூலாசிரியர்கள் எழுதிய பல நூல்களிலும் பகுத்துண்டு வாழும் அன்பையே தலைமையாகவைத்து எழுதியுள்ளார்கள்.

பகுப்பது என்ற சொல் பிரிப்பது—அதுவும் அளவாகப்பிரிப்பது என்ற பொருளைத்தரலால் உலகத்திலுள்ள பொருள்கள் யாரிடமிருந்தாலும், இல்லாதவனுக்குப் பங்குண்டு என்றுவதும், பசித்த உயிர்களுக்கு பங்கிட்டேக் கொடுக்க வேண்டுமல்லது அறஞ்செய்வதென்ற சாக்குக்காக பிச்சையிடுவது போன்ற தருமம் செய்யக்கூடாது என்பதை வற்புறுத்துகிறார்.

பிச்சை வாங்கிப் பிழைப்பதை ஒரு அதிகாரத்தால் கண்டித்திருப்பதும் பங்கீட்டு அறத்தை நிலைப்படுத்தவே

என்பது இக் குறளால் நன்கு புலனாகின்றன ஆகையால் தாமின்புறுவதுலகின்புறக்கண்டு காமுறுவர் கற்றறிந்தோர் என்றும் இன்னா செய்தார்க்கு மினியவேசெய் யென்றும் வலியுறுத்திக் கூறினமையின் அவர் உட்கருத்து நம்நாட்டு அன்புப்படி வினையும பொருள்களை நாமெல்லாரும் பகுத்து கூட்டுறவில் இன்பமாக வாழ வேண்டுமென்பதேயாம்.

நூலோர் தொகுத்தவற்றுளெல்லாம் தலை என்பதால் பல நூல்களை நன்கு ஆய்ந்துள்ளார் என்பதும் நம்நாட்டில் பலதமிழ்நூல்கள் நிறைந்திருந்தன வென்பதும் அந் நூல்கள் பல தற்போது அச்சில் வாரமலேயே அடியோடு அழிந்தோ, பிற நாட்டார் கவர்ந்தோ இருக்க வேண்டுமென்பதும் புலனாகிறது. அதோடு அந் நூல்கள் பலவும் பகுத்துண்டு வாழ்வதையே அடிப்படையாகக் கொண்டனவாக இருந்தன வென்பதும இவர் கூற்றால் நன்கு விளங்குகின்றன.

பல்லுயிர் ஓம்புதல் என்றதால் மக்களை மாத்திரம் காப்பது என்னாமல் உயிருள்ள எல்லாவற்றையும் குறிக் கப்படலால் இந்நாட்டில் மிருகங்கள், பறவைகள் முதலிய பிராணிகளையும் கொன்று தின்னாமல் அன்போடு அவைகளை வளர்த்து அதன் ஆடல், பாடல்களைக்கண்டு களிப்பெய்தி இயற்கை காட்சியின் பொலிவையை வாழ்ந்தாரென்பதை வலியுறுத்துகிறது நம் நாட்டு நூல்களின் உதாரணங் களிலும்கூட குயிலோசை, மயிலாட்டம், அன்ன நடை கிளிப்பேச்சு, மான் நோக்கம், போன்றவைகளையும், தாமரைக்கண், குவளைமூச்சு, பூங்கொடி சாயல் முல்லை யொத்த பல் போன்ற இயற்கைகளின் உதாரணங்

கள் நிறைந்திருப்பதே நம் நாட்டு அன்பு எல்லோருடனும் கூடிவாழும் பண்பை நிலைப்படுத்துகின்றன என்பதும் பொருந்தும்.

## மருத்துவ நூல்களின் முறை.

2 மிகினுங் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா வெண்ணிய மூன்று

மருத்துவ நூலாசிரியர்கள் தங்கள் நூல்களில் கூறுகின்ற வாய்வு, பித்தம், சீதளம், ஆகிய மூன்றும் நம் உடலில் தம் தம் அளவிற்கு மிகுந்தாலும், குறைந்தாலும் அந் நிலை நோயாக முடியும்.

வாய்வு 1-பங்கும், பித்தம் ½-பங்கும், சீதளம் ¼-பங்கும் இருக்க வேண்டியது உடல் தத்துவ மருத்துவ நூல் விதி வாய்வு அந்த அளவுக்குமேல் அதிகப்பட்டால் வாய்வு சம்மந்தமான நோய்கள் அவ்வுடலுக்கேறப வருகிறது. அதேமாதிரி பித்தமும் தம் அளவுக்குமேல் அதிகப்பட்டால் பித்த சம்மந்தமான நோய்கள் வருகின்றன. சீதளமும் அப்படியேதான். அளவை மீறி பித்தமோ, வாய்வோ, சீதளமோ எங்கிருந்து வருகின்றதென்ருல் உணவிலிருந்துதாளுகும். ஆகையால் உணவை குணமறிந்தும், காலமறிந்தும், உடலின் வலிமையளவறிந்தும் உண்பதே சிறந்த முறையாகும் என்பதற்காகவே ஓர் அதிகாரம் 10-குறளால் விளக்கியிருப்பதைக் காண்க.

நூலோர் என்பதால் ஈண்டு மருத்துவ நூல்களையே தாளுகும் அகத்தியர், புலத்தியர், தேரையர், புலிப்பாணி

போன்றார்களும், நம் நாட்டு சித்தர்கள் என்போர்கள் அனைவரும் மருத்துவத்தில் தலை சிறந்திருந்ததையும் இக்குறள் எடுத்துக் காட்டுவதோடு மருந்து என்பது இன்ன சரக்கை இப்படிச்சேர்ப்பது என்பதைக் கூறுபவையே இயற்கை நடைமுறையில் நோய் வாராமல் காக்கும் சித்த மருத்துவ முடிவை நமது வள்ளுவர்விளக்கியிருப்பதைக் காண்க.

தழை, கொடி, வேர், பூ, காய், பழம், விதை இவைகளைக் கொண்டு நோய்க்குத்தக்கவாறு மாற்றியும், குறைத்தும் ஒன்றற்கொன்று சேர்த்து காய்ச்சிய நீரை அல்லது பொடியை உண்டு நோயைத் தீர்த்த அக்காலத்திற்குப் பிறகு அவைகளையே உணவாக அருந்தவந்த இக்காலத்தில் மருந்துகளாகிய தழை, கொடி, விதை இவைகளால் வரும் நோயைத்தீர்க்க காலம், அளவு முதலிய மருந்தை வள்ளுவர் கண்டுபிடித்து மக்கட்கு விளக்கியுள்ளார் தற்போது பல மேல் நாட்டார்களும் கையாளுவது இம்முறையேயாகும்.

நம் நாட்டில் மருத்துவநூல்கள் நிறைந்திருந்திருக்கின்றனவென்பதும் அவ்வளவையும் வள்ளுவர் ஐயமறக்கற்று இருந்திருக்கின்றாரென்பதும் நன்கு புலனாகின்றன.

## துறவற நூல்களின் முறை.

3 ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு

உலகத்தில் நிறைந்துள்ள அகப்பொருள், புறப்

பொருள்களான எல்லாவற்றினுடைய உண்மையையு
மறிந்து அப்பொருள்களுக்கெல்லாம் காரணமாய் நின்ற
மெய்ப்பொருளையுணர்ந்து அதனையடையவேண்டி இவ்வுல
கப்பொருள்களின் மேலுள்ள பற்றை நீக்கி துறவு ஒழுங்
கிலிருந்து வழுவாமல் புலன்களின் ஆசையை நீத்தார்களின்
பெருமையைத்தான் எல்லா நூல்களும் மேலானதாக
துணிந்து கூறும்.

தாமின்புறுவதென்னும் முறைப்படி மண், பெண்,
பொன் என்னும் மூவகைப் பொருளையும் அன்புடன் பெற்று
ஈகையுடன் வாழ்வதே இல்லறமென்றும், அம் மூவகை
ஆசையிலேயே தம் வாழ்நாள் முழுவதும் கழிக்காமல்
மெய்ப்பொருளையறிந்து எல்லாரும் இன்புற்றுவாழ நினைப்ப
தென்னும் முறைப்படி தனக்கெனவாழாதத்தன்மையே
பற்றை நீத்த துறவறமென்றும் நம் நாட்டு வழக்கை
உறுதிப்படுத்தி நிலைக்கச் செய்கிறார்.

தனித்தொண்டு இல்லறம் பொதுத்தொண்டுதுறவறம்
என்பதும் தனித்தொண்டுக்கு வெள்ளையுடை பொதுத்
தொண்டுக்கு செம்மை உடை (காவித்துணி) நம் நாட்டுத்
தலைவர்கள் அணிந்திருந்ததும் இதனுண்மையை விளக்கு
கின்றன. இப்படிப்பட்ட திட்டமில்லாமல் தனித்
தொண்டு புரிவோரும், பொதுத்தொண்டராக நடித்ததின்
விளைவே அறிவுகளெல்லாம் அடிமை, நியாயத்திற்கெல்லாம்
தாகு மக்கள் நன்மைத்திட்டங்களை நடத்தும் பொது
நிர்வாகமெல்லாம் ஒருதலைப்பட்சம் இப்படி சீரழிந்து
விட்டன. பொதுத்தொண்டர்கள் இதை நடத்தி இருப்

பார்களானல் 100-க்கு 100-சமமாக நாட்டை நடத்தி தனக்கென்று ஒன்றைச்செய்யாமல் எல்லாரும் இன்புற்றிருக்கவே செய்திருப்பர் என்பதை துறவறக்குறள்கள் வற்புறுத்துகின்றன.

உணவுக்குப்பஞ்சமில்லாத மடாதிபதியான துறவிகள், கற்றுணர்ந்த பேரறிஞர்களான துறவிகள் ஆத்மீக ஆற்றலைப்பெற்று ஊழி பெயரினும் தாம் பெயராத வீரத் துறவிகளெல்லாம் நாட்டு மக்களைக் காக்கும் வழிகளான அதிகாரத்தில் நின்று தம் இன்பத்தை மக்கள் அடையச் செய்யாமல் அவரவர்கள் பசியைத்தணிப்பதிலேயேகாலம் கடத்தாமல் நிர்வாகத்தை ஏற்று நடத்த முன்வர வேண்டுமென்பதற்காகவே இருமை வகை தெரிந்தார் என்றும் வான் எனும் வைப்புக்கோர் வித்தென்றும் செயற்கரிய செய்வார் என்றும் சுவைஒளியூறோசை நாற்றமென்றைந்தின் வகை தெரிவான் கட்டே உலகு என்றும் குணமென்னும் குன்றேறி நின்றார் என்றும் எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகுவார் என்றும் துறவிகள் நிலையை விளக்கியிருப்பதையறிக.

இவர்களின் செயலைத் தவமென்னும் அதிகாரத்தில் ஒன்னாத்தெறலும் உவந்தாரை யாக்கலும் வேண்டிய வேண்டியாங் கெய்தலும் கை கூடும் என்றும் துறந்தாராகிய அறிவுடையார் எல்லாமுடையாராகையால் அத்துறந்தாரிடம் தனக்கெனும் சுயநலப்பற்று சிறிதேனும் இருக்கக்கூடாதெனகண்டிக்கிறார் இவ்வளவும் நம்நாட்டுத் தலைவர்களின் திட்டமென்பதையறிவோமாக.

பனுவற்றுணிவு என்பதால் துறந்தார்களின் இட்ட முறை நூல்கள் நிறைந்திருந்ததென்றும் அவைகளை நன்கு கற்று நமக்கு அதன் தெளிவை விளக்கியிருக்கிறரென்றும் அந் நூல்களே பல நாட்டுக்குச் சென்று வேறுமொழியில் நம்மைத்திருத்த வருகிறதென்றும் நம் நாட்டு துறவு நூல்கள் எப்படி அழிந்ததென்றே தெரியவில்லை என்றும் இதனால் புலனாகின்றன.

## அறிவு நூல்களின் முறை.

4 மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை

கூர்மையான யுக்தி இயல்பாகவே அமையப்பட்டிருந்தாலும் பேரறிஞர்களின் கருத்துக்களான பண்டைய நூல்களின் அறிவும் பொருந்தியிருக்குமானால் அவரை வெல்லத் தகுதிவாய்ந்த வேறுவழி இல்லையாகும்.

இக்குறள் அறிவு நிறைந்த பொது நீதி நூல்கள் நிறைந்திருந்ததை விளக்குகின்றன.

## அரண் (கட்டட) நூல்களின் முறை

5 உயர்வகலந் திண்மை யருமையிந் நான்கின்
அமைவரண் என்றுரைக்கும் நூல்

நாட்டைப் பாதுகாக்கும் அரண்களானது தூரத்திலுள்ள எதிரிகளையும் வெல்ல, வல்ல உயரமும், நிறையப் படைக்கலன்களை நிறப்பும் அளவு அகலமும் எதிரிகள் எளிதில் துளைக்க முடியாத வலிமையும் காணும் பொழுதே அச்சப் தரத்தக்க அருமையும் அமைய அமைப்பதே அரணென்று நூல்கள் கூறுகின்றன

இக் குறளில் குறிப்பிடும் நூல் கட்டட அமைப்பு நூலென்பதில் சிறிதேனும் ஐயமில்லை நம் நாட்டில் எளிதில் யாவரும் உணரும் வண்ணம் நூல்கள் மலிந்திருந்ததால் அதையெல்லாம் விளக்க நேரமின்றி சுருக்கச் சொல்லல் என்ற முறையில் நாட்டு அரணை 10-குறளால்விளக்கி இருக்கிறார்.

அரணைச் சுற்றிலும் மணி நீரும், மண்ணும், மலையும், காடும் இருக்க வேண்டுமென்றும் உள் நுழைவு இடம் சிறு பாதுகாப்பில் அமைத்து உள்ளிடம் பேரிடத்ததாகியிருக்க வேண்டுமென்றும் எதிரிகளால் பிடித்துக் கொளற்கரியதாகவும் படைகள் எவ்வளவு நாள் உள் தங்கினாலும் உணவுகள் கொடுக்கத்தக்க பொருள்கள் நிறைந்தும். எவ்வளவு பொருள்கள், படைகள் நிறைந்திருந்தாலும், அவைகளை நடத்தும் தலைவன் வீரனாக முன்னின்றுபோரை நடத்தும் ஆற்றலுடையவனாய் இல்லையானால் ஒன்றும் பலன் படாதாகையால் அத்தலைவன் எப்போதும் அங்கு இருந்து பாதுகாக்கப்படல் வேண்டுமென்றும் குறிப்பிடுவதையறிக.

(இதனால் நம் நாட்டு பண்டைய நூல்களின் சிறப்பும் நாம் எவ்வளவு அறியாமையாக நம் நாட்டு கட்டட நூல்கள், மருத்துவ நூல்கள், சமதர்ம நீதி நூல்கள் மற்றும் பல முறைகளமைந்த ஞான நூல்களை நாம இழந்திருக்கிறோமென்பதையும் இன்று மற்ற நாட்டாரால் புதிய பாடம் கேட்க வேண்டி வந்ததையும் காண்க.)

# அகர வரிசைக் குறள்களின் உரை.

## அழியாச் செல்வம் அருட் செல்வம்.

1 அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள

பொருள் வடிவாயுள்ள செல்வங்கள் அறியாமையுடையாரிடத்தும் இருந்து மறையும். அறிவுடையாரிடத்துத் தங்கும் அருள் செல்வம் மற்றைய செல்வங்களையெல்லாம் உள்ளடக்கி இருக்கின்றதோடு நிலையுடையதுமாகும்.

## நல்லதும், கெட்டதும் சொல்லால் வரும்.

2 ஆக்க முங்கேடு மதனால் வருதலாற்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு

நாம்ஒருவரிடம் பேசும்போது சொல்லின் அளவறிந்து குற்றமான சொற்கள் கலவாமல் பேசவேண்டும் அப்படி பேசுவதில் நல்ல சொற்கள் கலந்திருந்தால் நல்லவர் என்றும் தீங்கான சொற்கள் கலந்திருந்தால் தீயவனென்றும் அதற்கான பலன்களும் கிடைக்கும்.

## நல்லோர்கள் நினைத்தால் தாழ்ந்தோனை உயர்த்துவர்.

3 இகழ்ச்சியிற் கெட்டாரை யுள்ளுக தாந்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து

உயர்ந்து வாழ்க்கை நடத்துவோர் தங்கள் உள்ளங் கழி கூர்ந்து மகிழும் நேரத்தில் உலகில் இகழ்ச்சியுடன் சீரழியும் மக்களை எண்ணிப்பார்ப்பாராக (அந் நிலையில் நினைத்தால் தாழ்ந்தசமூகம் உயரவழிஏற்படும் என்பதாம்.)

## ஈகையும், புகழும் ஈடில்லாப் பொருள்கள்.

4 ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு

பசித்த உயிர்களுக்குக் கொடுத்து உண்ணும் ஈகையும், புகழுக்குரிய நற்செயல்களை மக்களுக்குச் செய்து அதனுல் அடையும் புகழும், இவ்வுலகிலுள்ள எல்லா செல்வங்களையும் விட மேலானதாகும.

## சீறிப்பேசுதல் சாரைக்கு சமானம்.

5 உடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருட்
பாம்போ டுடனுறைந் தற்று

மனமொத்து உள்ளன்போடு வாழாததீங்குடையவர் நண்பானது சிறுகுடிசையில் பாமபுடன் வாழ்க்கைநடத்தி யதையொக்கும் (இன்பமுடன் வாழ முடியாது என்பதாம்.)

## அறியாமையுடையாருக் கடிமைப்படாதே.

6 ஊதிய மென்ப தொருவற்குப் பேதையார்
கேண்மை யொரீஇ விடல்

ஒருவருக்கு, அறியாமையாகியதாழ்ந்தகுணம்உடைய ஒருவரின் நட்பு நீங்குமானல் அதுவே அவருக்கு பெருஞ் செல்வம் கிடைத்ததையொக்கும்.

## அறிஞர்கள் எண்ணினால் அனைத்தையும் செய்வர்.

7 எண்ணிய எண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்

*ஒரு செயலைச் செய்ய எண்ணுமொருவர் அவ்வெண்ணத்தை மறக்காமல் ஆற்றலோடு செயலாற்றுவாரானால் எப்படி எப்படி செய்ய எண்ணினாரோ அதில் சிறிதும் மாறுபடாமல் செய்து முடிக்கலாம்.*

## ஊராருக்கு விருந்து தாயோ பட்டினி.

8 எதிலா ராரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வ முற்றக் கடை

*அறியாமை மிகுந்த ஒருவனுக்கு நிறைய செல்வம் கிடைத்தால் எவ்வித நன்மைக்குமுதவாதவர்கள் தான் கூடியுண்டு களிப்பர் அச்செல்வனுக்கு நெருங்கிய தோழரும், சுற்றமும் பசித்துத் தவிப்பார்கள்.*

## உண்மையை உணராமல் ஒன்றையும் செய்யாதே.

9 ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு

*சுவைத்தல், பார்த்தல், உணர்தல், கேட்டல், முகர்தல் ஆகிய ஐந்தறிவையும் பெற்றிருந்தாலும் அதனால் ஒரு நன்மையுமில்லை, இவ்வைந்தறிவிற்கும் காரணமான மெய்ப் பொருளை அறிவால் அறிவோமானால் எல்லா நலன்களும் அதனுள் அடங்கியிருப்பதையறியலாம்.*

## ஒழுக்கம் அமைந்தால் வாழ்க்கையமையும்.

10 ஒழுக்க முடைமை குடிமை யிழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்

எவ்விதத்திலும் தவறுதலில்லாத ஒழுங்குடன் வாழ்க்கை நடத்தினால் அவ் வாழ்க்கை உயர்ந்து விளங்கும் அப்படியின்றி செயல்களில் தவறுதல்களை சேர்த்துக் கொண்டேபோனால் அசுத்தமின்மை அறிவின்மை முதலியதுகள் சேர்ந்து வாழ்க்கையை தாழ்வுப்படுத்திவிடும்.

## படித்தவரிலும் பதர் உண்டு.

11 ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப்
பேதையிற் பேதையா ரில்

கற்கவேண்டிய கல்விகளையெல்லாம் கற்றிருந்தும், உணரவேண்டிய அளவு ஒவ்வொன்றையும் விளக்கமாக உணர்ந்திருந்தும் அவைகளை தெளிவுபட பிறர்க்கு சொல்லியும் அதன்படி தான் நடக்கதிறமையற்று மாறுபடுவாரானால் அக் கற்றோர் ஒன்றையும் கல்லாதவரினும் தாழ்ந்த நிலையை அடைவர்.

## கெட்டவரின்செல்வமும், நல்லவரின் வறுமையும் நிலைக்காது.

12 அவ்விய நெஞ்சத்தா னாக்கமுஞ் சேய்வியான்
கேடு நினைக்கப் படும்

அழுக்காறென்னும் பொறாமையையே நெஞ்சகத்தே கொண்டவர்களுக்கு வரும் செல்வமும், நல்ல எண்ணத்தையே உள்ளத் திருத்திய செவ்வையான மனமுடையவர்களுக்கு வரும் கெடுதல்களும் நினைத்தால் அழியும் (அதாவது திடீரென மாறும் என்பதாம்.)

### தீயச்செயல்கள் அறிவைக் கெடுக்கும்.

13 அஃகி யகன்ற வறிவென்னும் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்

நுண்ணியதாய் எந் நூலினும் விரிந்து சென்ற பேரறிவும், பிறர் பொருளை விரும்பித்தகாத செயல்களைச் செய்யத்தலைப்பட்டால் விரைந்து கெட்டு விடும்

---

# உடல் உயிர் உறுப்புகளின் செயல் விளக்க உரை.

### மானம் கெட்டவன் மயிரினும் தாழ்ந்தோன்.

1 மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்

தன்னையழகு படுத்தும் மயிர்களில் ஒரு மயிர் நீங்கினும் அம்மயிருக்காக தன் உயிரையே இழக்கும் கவரிமான் போன்ற தன்மானமுள்ளவர்கள் மானம் கெடும் தகுதியுள்ள செயல்களைச் செய்யவே மாட்டார்கள் அப்படி ஒருக்கால்பிறர்க்காகவாவதுசெய்யவேண்டிநேர்ந்தால் அதைச்செய்து மானம் கெடுவதைக்காட்டிலும் அதற்காக உயிரைக் கொடுத்தாவது மானத்தைக் காப்பார்கள்.

### காதுக் கழகு கற்றோர் சொல் கேட்டல்.

2 கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி

உலகத்திலே நிகழும் சத்தங்களைக் கேட்பதாலேயே நம் காதுகள் செவிடல்லாத நல்ல காதுகள் என்று சொல்வதற்கில்லை. பின்னை நற்காதுகள் எவையெனில் அறிஞாகளால் ஆராயப்பட்ட நற்சொற்களை கேட்பதில் தொடர்பு வைத்துள்ள காதுகள்தான் கேட்கும் காதுகள் ஆகும்.

## கண்ணுக் கழகு நுண்ணியதாய் நோக்கல்

3 குறிப்பிற் குறிப்புணரா வாயின் உறுப்பினுள்
என்ன பயத்தவோ கண்

கண்ணானது ஒன்றைப்பார்க்கும்போதே ஒரு பொருளையும், அப்பொருளின் செயல், குணம் முதலிய காரணத்தையும் குறிப்பாக உணரவில்லையானால் அக் கண் மற்றைய உறுப்புகளை விட உயர்ந்ததாக மாட்டாது. (கண்ணிலாதாரும் கையால் ஒரு பொருளைத்தொட்டு இது இன்ன பொருள் என்று பொத்தமாக சொல்லமுடியுமாகையால் கண்ணிருந்தும் அப் பொருளை மாத்திரம் காணும் கண் சிறப்புடைய கண்ணல்லவென்பதாம்.)

## நாவுக் கழகு நல்லன பேசுதல்.

4 யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு

நம் உடலிலுள்ள உறுப்புகளில் எதனைக் காக்காவிடினும் நாக்கைமட்டிலும் குற்றமான சொற்களைப் பேசவிடாமல் காக்கக்கடவர் அப்படி காப்பாற்றுவிடின் இழுக்கான சொற்களைப்பேசி அதனின் விளைவால் பலரின் துன்பங்களுக்கு ஆளாக நேரும்

## முகர்வதால் அனிச்சமும், சுளிப்பதால் விருந்தும் கெடும்.

5 மோப்பக் குழையு மனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து

அனிச்சம் என்ற பூவை முகர்ந்து பார்ப்பதனாலேயே அப் பூ வாடிவிடும் அதே போல் நம் வீட்டைத் தேடி வரும் விருந்தினர்களை உள்ளங்குளிர்ந்த முகத்தோடு பார்க்காமல் மாறுபட்ட எண்ணங்கொண்ட முகத்துடன் பார்ப்பதாலேயே வந்தவர்களின் மனங்குழைந்து வேறுபடும். (விருந்தினர் மனதை மகிழ்ச்சிப் படுத்துவதில் மிகுந்த நுட்பமான எச்சரிக்கை வேண்டுமென வற்புறுத்துகிறார்.)

## வாய்க் கழகு வணக்கமாய் இருத்தல்.

6 நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
வாயின ராதல் அரிது

நுட்பமான பேச்சுகளைக் கேட்டு அதை ஆராய்ந்து பார்க்கும் நல்லவர்கள்தான் பேசும்போது வணக்கமாக மரியாதையுடன் பேசப்படுவார்கள் பல பெரியோர்களின் நுட்பமான பேச்சைக்கேட்க்காதவர்கள் மரியாதையில்லாமல் தாறுமாறாக வணக்கமில்லாமல் பதட்டமாகக் கத்துவார்கள்.

## முகத்திற் கழகு மகிழ்வைக் காட்டல்.

7 அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்

ஒரு கண்ணாடியின் முன்னால் எது வருகிறதோ அதையே தான் அந்தக் கண்ணாடி காட்டும் அதேபோல்

ஒருவர் நெஞ்சில் எதை நினைக்கிறாரோ அந்தக்குறிப்பையே அவர் முகம் காட்டும்.

## தலைக் கழகு தாழ்ந்து பணிதல்.

8 கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை

தன் வயத்தனாதல் தூய உடம்பினனாதல் இயற்கை யுணர்வினனாதல் முற்றுமுணர்தல் இயல்பாகவே பாசங்களி னீங்குதல் பேரருளுடைமை முடிவில் ஆற்றலுடைமை வரம்பிலின்பமுடைமை என்ற எட்டு சீரிய குணங்களும் அமையப்பட்ட இறைவனின் தாள்களுக்கு வணக்கம் செய்யாதத்தலையானது அறியும் புலனற்ற பொறிகளுக்குச் சமானமாகும்.

## தோள்களுக் கழகு தூயசெயல் புரிதல்.

9 நிறைநெஞ்ச மில்லவர் தோய்வர் பிறநெஞ்சிற்
பேணிப் புணர்பவர் தோள்

ஒருவரிடத்து காதலாகப்பேசிக்கொண்டே மற்றொரு வருடைய நெஞ்சத்தை பொருளுக்காக எண்ணிக்கொண் டிருக்கும் விலை மாதர்களின் தோள்களை அறிவுடையவர் விரும்பி தங்கள் வீர புயபலத்தை இழக்கமாட்டார்கள். அறியாமையுடையோர்கள்தான் பரத்தையர் நட்பைக் கைகொண்டு நாணம் அறிவு இழந்து பழியை யடைவர்.

## கைகளுக் கழகு உதவிகள் புரிதல்.

10 உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு

தான் உடுத்துக்கொண்டுள்ள உடை அவிழ்ந்து விழப் போனால் தன் மானங்காக்க தனது கைகள் விரைந்து அவ் வாடைகளை பிடித்துக் கொள்வதுபோல ஒருவர் தீங்கான செயலால் அவதிப்பட நேர்ந்ததைக்கண்டால் உடனே அவருக்கு தங்களாலான உதவி செய்து அவ்விடுக்கண் ணிலிருந்து நீக்கி விடுவதே தான் மக்களிடம் கொண்டு ள்ள நட்புக்கு முறையாகும்

## கால்களுக் கழகு ஒழுக்கமாய் நடத்தல்.

11 கழாக்கால் பள்ளியுள் வைத்தற்றாற் சான்றோர்
குழாத்துப் பேதை புகல்

அறிஞர்கள் தங்கள் ஆராய்ச்சியைப்பற்றி பேசி இன்பப்படும் கூட்டத்திற்கு அறியாமையால் மூழ்கியுள்ள ஒருவர் வந்து சிந்திப்பதானது வீதிகளைச் சுற்றி வந்ததால் அழுக்கு முதலிய குற்றங்களை மிதித்தக்கால்களை தூய பஞ்சணை மீது வைத்ததை ஒக்கும்.

## இதுவுமது.

12 தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயா தடியுறைந் தற்று

பிறர்க்கு தீங்கான செயல் செய்து பிழைப்பவர்கள் கெட்டால் அக்கெடுதலிலிருந்து மீள முடியாமல் அடுத் தடுத்து அக் குடும்பத்தை (முன் செய்த தீங்கின் பலன்) அழிக்கும் அது எதுபோலென்றால் நமது நிழலை நமது காலே அடுத்தடுத்து மிதிப்பதை யொக்கும்.

## உடம்புக் கழகு திடமாய் வளர்தல்.

13 இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்
குற்ற மறைப்பா னுடம்பு [தைக்

ஒழுக்கத்திலும், வாய்மையிலும், நாணத்திலும் குடும்பத்திற்கு எவ்வித குற்றங்களும் நேராதவாறு பாதுகாக்கும் ஒருவருடைய உடம்பு எக்காலமும் உழைத்துக் கொண்டே இருந்து எல்லா இன்னல்களையும் ஏற்று நிற்கும்.

## உயிருக் கழகு நூறுக்குப்பின் போதல்.

14 மாறுபா டில்லாத வுண்டி மறுத்துண்ணின்
ஊறுபா டில்லை யுயிர்க்கு

நாம் உண்ணும் உணவில் உடலுக்கு நன்மைபயக்காத மாறுபடும் உணவை நீக்கி மாறுபடாத உணவை உண்டு வருவோமானால் நம் உடல் கெடாமல் இருப்பதோடு உடலில் தங்கும் உயிருக்கு எவ்வித தீங்கும் நேராமல் நெடு நாளைக்கு நிலைத்து நிற்கும்.

## மனத்துக் கழகு நல்லவை நினைத்தல்.

15 மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற

அறமெனப்படுவது நம் மனதில் பிறர்மீது கொள்ளும் காமம், வெகுளி மயக்கமென்னும் குற்றங்கள் தங்க விடாமல் காப்பதேயாம் மற்றபடி பிறர் உணரும் வண்ணம் செய்யும் தருமமென்பதெல்லாம் ஆடம்பர வேட ஆரவாரமேயாகும்

## சினத்திற் கழகு தோன்றாதிருத்தல்.

16 தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்

நம்மை நாம் குற்றங்களுக்கு ஆளாகாமல் காக்க வேண்டுமானால் நம்மிடம் சினமானது தோன்றாமல் காப்பாற்ற வேண்டும். (சினம் பிறரை வேறுபடுத்தும் தன்மையுடையதாகலின் தன்னை தனித்து நிற்கச் செய்து கெடுக்கும் என்பதாம்)

# நம் நாட்டு உலகத் திட்ட உரை.

## உலக அமைப்பின் முறை.

1 நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு

இப் மண்ணும் மண்ணாலாகிய உலகமும் நீரிலிருந்து தான்தோன்றிற்றுஎன்பது உண்மையாகையால் இவ்வுலகத்தார்களுக்கு வானிலிருந்து பொழியும் மழையில்லாமல் வாழ்க்கைக்கான ஒழுக்கம் அமையாது. (வானிலிருந்து காற்று காற்றிலிருந்து நெருப்பு நெருப்பிலிருந்து நீர் நீரிலிருந்து மண் தோன்றிற்றென்பதைத் தத்துவநூலிற்காண்க.)

## நெஞ்சாரப் பொய்தன்னை சொல்ல வேண்டாம்.

2 உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லா முளன்

நம் இருப்பிடமாகிய உள்ளமென்னும் நெஞ்சறிய பொய் கூறும் தீச்செயலை செய்யாதிருப்போமானால் நாம் உலகிலுள்ள எல்லா அறிஞராலும் புகழ நிறைந்து நிற்க முடியும்.

பொய் என்பது மற்றவர் பொருளை கவர எண்ணி நமக்கும பிறர்க்கும் இடையில் கட்டும்திரையையொத்தது.

பொய் என்பது எல்லாரும் ஒன்றே என்ற பொதுத் திட்டத்தை மாற்றி எனக்கு என்ற தனித் திட்டத்தை வகுக்க வல்லது.

பொய் என்பது நிலையுள்ள புகழ் முதலிய நன்மைகளை தடுத்து பகை முதலிய தீங்குகளை செய்விக்கச் செய்வது.

பொய்என்பதுநமமை நம்பிசேரும் இனத்தவர்களையும் கெடுத்துப் பொருள் சேர்க்கும் தன்மையுடையது.

பொய் என்பது உலகத்திலுள்ள எல்லாவுயிரிடையே யும் நிறைந்து நின்ற ஆத்மீக சக்தியை மறைதது பிரித்து தனித்து நிற்கச் செய்வது.

ஆதலால் பொய்யையொழித்தோர் உலக மக்களுடன் ஒன்றுபட்டு வாழும் இன்ப நிலையை அடைகின்றனர் எனபதாம.

## நன்றி மறப்பது நன்றன்று.

3 நாமொருவு நன்றி புரிநத பண்புடையார்
பண்பு பாராட்டு முலகு

உலக மக்கள் யாவரும ஒருவரால் செய்யப்படும் தீதியையும், பிறர்க்குச்செய்யும பேருதவியான நன்றி யையும என்றும் புகழ்நது பாராட்டியே நிற்பர். (உயர்ந்தோருடையதே உலகமாதலால் அறிவறிந்த உயர்ந்தோர் நன்றிபுரியும் நல்லோரை பிறர்பால் கூறுந்தோரு ம்உலகமே நிறைதலை காண்க.)

## வானே தான் உலகை வழங்கின.

4 வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றானமிழ்த மென்றுணரற் பாற்று

வானாகிய ஆகாயத்திலிருந்து இப் மண்ணுலகம் அமைந்து விளங்குவதால் இப் மண்ணுலக உயிர்களுக்கு ஆதியான வானிலிருந்து பொழியும் மழையே உயிர்களை வாழ்விக்கும் அமிழ்தமாகும்.

வான், உலகைப் படைத்து உலக உயிர்களுக்கு மழையையும் படைத்து காக்கின்றன என்பதாம் (விதைகள்முதிர சதையாகியபழவமிழ்துப செய்சள் வளர பாலாகிய வமிழ்தும் காப்பதேபோல் மரம், செடி முதலான உலக நிகழ்ச்சிக்கே மழைநீர் அமிழ்தாக உதவுவதைக் காண்க.)

நீரிலிருந்து உலகம் உதித்தது என்று முதன்முதற்கூறி பின் காற்றிலிருந்து உலகம் உதித்தது என்றும் கூறி பின் வானிலிருந்து உலகம் உதித்தது என்றும் கூறியுள்ளதை 11, 245. 20 குறள்களில் அறிக. அதோடு உலகம் சுழன்றும் வருகிறது என்பதை சுழன்றும் ஏர்ப்பின்ன துலகம் என்று 1031-ம் குறளில் விளக்குவதையும் நோக்குக.

## பிறர் பழிக்கஞ்சுவான் பெருநம்பியாவான்.

5 பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்
குறைபதி யென்னு முலகு

ஒருவர் தமக்கு ஏற்படும் இழிவான பழியையும், பிறருக்கு ஏற்படும் குறைவுகளான பழிச்செயலையும்,

தனக்கேற்பட்டதாகவே கருதி வெட்கி நிற்பாராயின் அவரை இவ்வுலகிலுள்ளாரெல்லாம் நாட்டு மானத்தைக் காக்கும் தகுதியுடையத தலைவராகவே மதிப்பார்கள்.

தனக்கு எவ்வளவு பழிவரினும் வரட்டுமென்று சூது பொய் கூறி பொருள் தேடும் மக்கள் நிறைந்த இவ்வுலகில் தானும் குற்றத்திற்கு பயந்து, பிறரும் குற்றம் செய்யாத வாறு வாழவேண்டுமென்று உணர்ச்சியோடு எண்ணும் ஒருவர் உளராயின் அவர் இடத்துத்தோன்றிய நாட்டுப் பற்று தேசாபிமானத்திற்காக உலக மக்களின் உள்ளம் இயல்பாகவே புகழ முயலும் என்பதாம்.

பழி என்பது என்றென்றும் தீராதபடி தம் குடும்பத தாரைப்பற்றும் தீய செயல்களின் பலன். அப்பழியே என்றும் நிலைத்து வாழும் புகழை மறைக்கும் ஆற்றல் படைத்த திரையை யொக்குமாதலால் குற்றமான திரை களுக்கு இடம் கொடுத்து மறைந்து வாழாமல் தன்னைக் குற்றத்திலிருந்து காத்து தீச்செயல்கள் தன்னைசேராமல் தவங்கிடந்து மற்றையோர் மதிக்க வாழக்கடவர்என்பதே குறளின் கருத்து.

## தூய்மையான உள்ளத்தை உலகம் ஒப்பும்.

6 எள்ளாத வெண்ணிச் செயல்வேண்டும் தம்மொடு
கொள்ளாத கொள்ளா துலகு

உலக மக்கள் வெறுக்கத்தக்கனவல்லாத செயல்களை எண்ணிச்செய்யக்கடவர், அப்படி செய்யும் செயல்கள் உலக மக்களுக்குப் பலன்கொடாதாயின் அச்செயலையும், அச்செயல்புரிவோரையும் யாவரும் வெறுத்து நிற்பர்.

உலகப்பொதுமக்கள் தம்முடையதென கொள்ளத் தகுந்தபடி நடப்பவர்களே உலகப் பொதுத் தொண்டர்களாக இருக்க முடியும். சிறிது வேறுபட்டுசுயநலப்பற்று இருக்கினும் எள்ளி நகையாடி ஓர் ஊர் கூட அறியும்படி வாழ விடாமல் தடுக்கப்படும் என்பதாம்.

## பெருநில மன்னர்களின் அரசு முறை.

7 குடிதழீஇ கோலோச்சு மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கு முலகு

தன் ஆட்சிக்கு சேர்ந்த குடிகள் அனைவர்களையும் அக்குடிகளின் எண்ணமறிந்து பாதுகாக்கும் முறையில் செங்கோலாட்சியை நடத்தும் அரசர்க்கதிபனை இவ்வுலக மக்கள் யாவரும புகழ்ந்து சேர்ந்து வாழ்வார்கள்.

அரசரின் குணம் மக்களை வாழ்விக்க நினைத்து அதறகாவன செய்து வந்தால், மக்கள் ஒற்றுமையுடன் அரசனைக் காக்க தாமாகவே முனைவர். அப்படிப்பட்ட அரசர்மீதுபிறர் படையெடுக்கவோ, சண்டைகள் வரவோ கூட சந்தர்ப்பம் நேராது. அப்படியின்றி பல அரசர்கள் தமமிடமுள்ள குடிகளையே பாதுகாக்க முடியாமல் வறுமை பட்டினிக்காளாக்கிக்கொண்டு இன்னும் பிற நாட்டைப்பிடிக்க சண்டையும், அதற்கான கருவிகளும் செய்யத்தலைப்பட்டால் உலக மக்களால் வெறுக்கத்தக்க தாழ்ந்தநிலையையடைவர் என்பதற்காகவே குடிகளைததழுவி ஆட்சி நடத்தினல் உலகமே அம்மன்னரின் அடிதொழுது நிற்கும் என்று உறுதி கூறுகிறுர். இதனல் சண்டை செய்து நாட்டை ஆள்வதைவிட குடிகளைககாத்தே நாட்டைப்பெறலாம் என்றுவதறிக.

## நற்குடி பிறந்தாரை நாடு ஒப்பும்.

8 கேடா வழிவந்த கேண்மையார் கேண்மை
வீடா விழையு முலகு

பகை, பாவம், அச்சம், பழியென்று சொல்லப்பட்ட குற்றங்களால் கெடாமல் பல தலைமுறைகளாய் வரும் குடும்பத்தார்களின் நட்பை உலக மக்கள் தொடர்ந்து விரும்புவார்கள்.

கல்வியின்மையாயிருப்பினும், நற்குடிப் பிறந்தார்க்கு தனிமதிப்பிருத்தல் உலக வழக்கமாதலால் அக்குடிப் பிறந்தார் நட்பை யாவரும் விரும்புவர் என்பதாம் குற்ற மிலனாய் குடி செய்து வாழ்வானை சுற்றமாச்சுற்றுமுலகு என்று கூறுதலினும் காண்க.

உலகில் பலநாள் புகழோடு வாழ்ந்து பின்னுமப்புகழ் அழியாமல் வாழ வேண்டுமானல் அவரும் அவர் குடும்பத்தாரும், அவரைச்சேர்ந்தோரும் கெடுதல்கள் என்று பிறர் மதிக்கும் செயல்களைச் செய்யாமல் மக்கள் வாழ்வுக்கே பணி புரிதல் வேண்டுமென்பதை விளக்குகிறார்.

## துன்பம் செய்தோர்க்குமின்பமே செய்.

9 பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்
தகைமைக்கட் டங்கிற் றுலகு

பகையென்னும் வேறுபாட்டிற்கு இடம் கொடாமல் ஒன்றுபட்டு வாழும் பண்பான குணத்தையுடையவர்களைத் தலைமையாகக்கொண்டு அவரின் கீழ் உலக மக்கள் வாழ் வதற்கு மகிழ்வோடு இசைவார்கள்.

பிரிந்து வாழும் குணமில்லாத நண்பனின் பெருந் தன்மையின்கீழ் உலகம்விளங்குகிறது-உலகம் உயர்ந்தோர் மாட்டே உள்ளது. என்றதையும் இன்னு செய்தார்க்கு மினியவே செய் என்றதையும், ஆயும்போது எல்லோரும் இன்புறக்கருதும் எண்ணமுடையோரிடத்தேதான்உலகம் இருக்கின்றதென்பதை உறுதிப்படுத்துகிறது.

## கற்றும் அறிவிலாதார் ஆதல்.

10 உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்

கல்வி என்பது புறப்பொருளை அறிவதற்கு மாத்திரம் தான் பயன் படலால் அசப்பொருளை அறியும் ஆற்றல் அறிவுப் பயிற்சியால் தான். உள்ளதால் அறிவுப்பயிற்சியை உலக இயற்கையறிவுடன் கல்லாதவர்கள் கல்வி மாத்திரம் கற்றிருப்பினும், பேரறிஞராக நிலைவதற்கு ஆற்றல் இல்லாமல் கெட்டுவிடுவர் ஆதலால் தான்உலகமக்களுடன் பிணைந்து வாழும் அறிவுக் கல்வியையும், நூற் கல்விபயிலும் போதே கற்க வேண்டும்.

எட்டளவாக உள்ள கல்விகளை நிறையக்கற்றிருந்தும், உலகப்பொது அறிவை உலக மக்களுடன் கூடி வாழும் அன்பு குணத்தோடு பழகாமல் உள்ளவர்கள் கற்றும் அறிவில்லாதாராவார்கள்.

உலகம் என்பது ஈண்டு உயர்ந்தோரை என்று கொண்டால் உயர்ந்தோரைசேர்ந்து வாழ்வதாலும் உலகப் பொது அறிவைக்கற்கலாமாகையால் கல்வியின் பயன் உயர்ந்தோரை அடுத்து கேட்டு சேர்ந்து வாழ்வதால் அடையலாம் என்பது கருத்தாகும்.

## திருக்குறள் அந்தாதி உரை முற்றிற்று.

புணற்கிரேக்க நீநூறு மைந்தர்கள் வாய்வைத்
துணைச்சுரக்குந் தாய்முலை யொண்பால்-பிணக்கிலா
வாய்மொழி வள்ளுவர் முப்பான மதிப்புலவோர்க்
காய் தொறு மூறு மறிவு.

எல்லாப் பொருளு மிதன்பா லுளவிதன்பால
இல்லாத வெப்பொருளு மில்லையால்-சொல்லால்
பரந்தபா வாலென பயன்வள ளுவனார்
சுரந்தபா வையத துணை.

## திருவள்ளுவர் அரசியலறிவு நிலவுக!

## மக்கள் இன்புற்ற நிலையை அடைந்து வாழ்க!!

# திருக்குறளின் பொருளடக்கம்.

இவ்வுலக உற்பத்தியின் ஆதி அமைப்பின் முறையாவது ஆகாயத்திலிருந்து காற்று தோன்றி காற்றின் அசைவால் தீ தோன்றி, தீயின் வெப்பத்தால் நீர் தோன்றி, நீரின் முதிர்ச்சிவடிவே மண்ணாகிய இவ்வுலகமாகி இவ்வுலகில் இயற்கையின் இயக்குதலாலும், பஞ்சபூத கலப்பினாலும், மரம், செடி, கொடி போல்வனவும், ஊர்வன, நடப்பன, பறப்பனவான உயிர்களும் தோன்றி ஆதி இறைவனின் திட்டப்படியும் தம் தம் செயல்களின் பலனுக்கேற்ற நன்மை தீமைகளின் குணத்தின் படியும் தமதாக ஏற்று நடந்து வாழ்க்கை புரியலாயிற்று.

இப்படிப்பட்ட உலகத்தில் தனக்கென்றே உணவை தேடி உண்டு காலம் கழிக்கும் உயிர்களிடையில் தனக்கெனவாழாமல் உலக உயிர்களுக்காகவும் மக்கள் வாழ்க்கைக்காகவும், பொதுத்தொண்டு புரியும் பேரறிஞர்களே இவ்வுலகத்தலைவர்கள் ஆவர், அவர்கள் பிறர் பழிக்கும், தம் பழிக்கும் நாணியும நயனொடு நன்றி புரிந்தும், எள்ளாத வெண்ணிச்செயலாற்றியும், குடியைத் தழுவிகோலாட்சிபுரிந்தும், பகையை நட்பாகக்கொண்டும், தங்களின் பொதுத்தொண்டை நடத்த வேண்டும், இவர்களுள் அவரவர்களின் உள்ளத்தின் ஆற்றலுக்கொத்த முறையில் துறந்தாராகவோ, குடும்பத்தை நீத்தாராகவோ, இல்லறத்தாராகவோ இருக்கலாம். இவர்கள் நீதி உலகத்திற்கே பொது நீதியாகும், இவர்களுக்கே உலகம் சொந்தமும் ஆகும்.

இவர்களுக்கு அறிவுப்பொருளின் ஆற்றலே எல்லா சக்திகளையும் கொடுப்பதால் அறிவுடையாருக்கு எல்லாப் பொருளும் சொந்தமாகும் அறிவுடையார் கூறும் திட்டத்திற்கு மக்கள் அடங்கி நடந்து அவர்கள் கூறும் செயலாற்றி மக்கள் இன்பமடைவதே உண்மையான மெய்ப்பொருளுணர்ந்த இல்வாழ்க்கையின் பொதுவிதியும் உலக இயற்கை வடிவின் செயலுமாகும்.

## நாடு.

நடுநிலையும் இரக்கமும் கொண்ட பேரருள் நிறைந்த அறிஞர்கள் நிறைந்து நல்ல விளைவுகளைத் தந்து வளப்பமுடன் உழவுத்தொழிலும், கைத்தொழிலும், சிறந்து ஓங்கி உறுபசியும், ஓவாப்பிணியும், செறுபகையும் சேரா பல் பெரும் பொருள்கள் நிறைந்து விளங்கி ஒருவரை கேட்டு வாங்கிப்பிழைக்கும் (இரந்துண்ணும்) வறியோர்களே இல்லாமல் சீறும் சிறப்பும் பெற்று வாழ்ந்தும, இப்பெரும வளப்பத்தை மக்கட்கு பகுத்துண்ணக்கொடுக்கும் பண்புடையரசரால் பாதுகாக்கப்பட்டு மக்களுக்குள் பகையும், பிளவும் இல்லாதவாறு இன்பந்துய்ப்பதே நாடாகும

அந்நாடு மலைகளாலும், ஊற்று நீர் மழை நீர்களால் வளப்பமான பயிர்த்தொழிலை நடத்திவரும் பண்பாலும், ஆற்றுநீரால் அழகுபடுத்தும் தோட்டம், சோலை முதலிய சிறப்பாலும் அரியதிலும் அரிதான அரண்களால் நாட்டைக்காத்துவரும் படைகளும், படைக்கலன்களின் வெற்றித்திறன் அமைந்த வீரமும் அப்படையை நடத்தும் பண்புடைத்தலைவரின் ஆற்றலும் பொருந்த நாடுகள் உலகம் புகழ இன்புடன் வாழ்ந்து வரும்.

## மன்னர்கள்.

மக்கள் வாழ்க்கையை நல்வழியில் நடத்தலும் குடிகளின் தன்மைக்கேற்ப வரிகளை ஈட்டலும் அப்பொருளைக் கொண்டு நாட்டின் பொது நிலைகளைக்காத்தலும் காப்பதற்கான வழிகளை வகுத்தலும், கல்விக்காகவும், மருத்துவத்திற்காகவும், அறிவுடைமைக்காகவும் சாலைகளை அமைத்து அதில் தேர்ச்சியாளராகிய அறிஞரைக்கொண்டு நாட்டு அதிகாரத்தை நடத்தலும், அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் இந்நான்கு குணத்தை இயல்பாகப்பெற்றும், தூங்காமை, கல்வி, துணிவுடைமை இம்மூன்று குணத்தை செயலால் நடத்தியும், கொடை அளி (இனிய கூறல்) செங்கோல் குடியோம்பல் நான்கையும் செங்கோல் நெறியில் ஆட்சிபுரிந்தும் முறை செய்து காப்பாற்றும் மன்னவனே மக்களுக்கு இறைவனென்று கூறப்படும்.

இம் மன்னர்கள் குடிகள் கூறும் செவிகைப்புச் சொற்களையும் பொறுத்து கருத்தறிந்து இன்சொலால் வதையிந்து கடுஞ்சொல்லையே கருதாமல் யாவரும் தாராளமாய் வந்து காணும் வண்ணம் இருக்கையமைத்து மானத்தோடு நீதி செலுத்துவதே மன்னர் முதலானோர்களின் செயல்களாகும்.

## அமைச்சர்கள்.

அமைச்சர்கள் உலகத்திலுள்ள இயற்கைப்பொருள்கள் செயற்கை பொருள்களின் உண்மைத்தன்மையைத் தெரிந்தும் இயற்கையாகவே பெற்ற அறிவோடு பல அறிவு நூல்களை கற்று தேர்ந்தும் அரசாங்கத்திற்கு

தேவையான கருவிகளை (தொழிற்கருவிகள், துணைக்கருவிகள், போர்க்கருவிகள்) யும் காலாகாலத்தில் செய்ய வேண்டிய செயல் முறைகளையும் அதைச்செய்து முடிக்கும் ஆற்றலையும் அடையப்பெற்றும் குடிகளை அன்போடு காக்கும் இரக்கமுள்ள நெஞ்சுடையவராயும், வாழ்க்கையை கெடுக்கும் எதிரிகளை அழிப்பதில் இரக்கமில்லாத துணிவு பொருந்தியும் நாட்டைநன்மைப்படுத்தும் முறையில்தீங்கினர்களைப்பிரித்தலும், திருந்தியபின்காததலும், பிரிந்தோரைச்சேர்த்து நடத்தவும் அரசியல் தந்திரம் தெரிந்தோர்களே (மந்திரிகள்) அமைச்சர்கள் என்று சொல்லப்படும்.

## படைகள்.

படைகளானது பலகாலம் நன்கு பழகப்பட்ட துணிவு, கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர் நிற்கும் ஆற்றல், துணையின்றி போர் செய்யும் வீரம், இவைகள் இயல்பாகவே அமையப்பயிற்றுவதும், படைக்கான அணிகலன் உறுப்புகளை நிறைய தயாரிப்பதும், எலிக் கூட்டம்போல் வீண் இரைச்சலால் நேரங்கழிக்காமல் நாகம் போல் சீறி வெல்லும் திறனும் போரில் இறந்தாரை காணுந்தோறும் பயமின்றி வீரத்தன்மை மேலிட்டெழும் பேராண்மையும் தோல்வியடையக்கூடாதென்றமானமும் பலகால் பழகியதை ஒரு நேரத்தில் உபயோகித்தலும் எதிர்க்கும் நாட்டினரின் தன்மையறிந்து காலம், இடமறிந்து அணிவகுப்பின் முறைகளில் தேர்ந்த தலைவர்கள் கண் காணிப்பில் மாற்றி மாற்றி அணிவகுத்து படைச் செருக்கின் தன்மைகளை மேற்கொண்டு வெற்றிப்போரிடும்

படைகளை நாட்டு பாதுகாப்புக்காக அளவறிந்து அரசாங்கத்தில் வைத்திருப்பது.

## அரண்கள்.

அரண்கள் அமைக்கும் இடத்தைச்சுற்றி மலைகளும், மீணற்காடுகளும், தண்ணீர் தேக்கங்களும், மரத்தோப்புகளும் நிறைந்திருக்க வேண்டும்.

அரணானது எந்ததிக்கில் கட்டப்படுகிறதோ அப்பக்கம் எந்நாட்டவர் வரக்கூடுமோ அந்நாட்டுப் படைகளின் திறமைக்கேற்ற உயரமும், அதற்குத்தக்க அகலமும், எதிரிகள் துளைக்க முடியாதபடி திண்மையும், பார்க்கும் போதே பயப்படும் தோற்றமும் அமையக் கட்டப்படுதல் வேண்டும். அதற்கு உள் நுழைவு இடம் சிறு பாதுகாப்பில் அடங்கி அவ்வரணுள் பெரும் படைகள் தங்கும்படி அறைகள் அமைந்து இருத்தல் வேண்டும்.

படைக்குததேவையான உணவு, உடை, போர்க் கருவிகள் நிறைந்திருத்தல் வேண்டும். நிறைந்த படைகள் இருப்பினும் அதனை நடத்தும் தலைவர்கள் ஆங்கே இருத்தல் வேண்டும். அவ்வரணுள் அமைந்த பொறிகள் (இயந்திரம்) தக்கோரால் ஆற்றல் குறையாமல் செயலாற்றி முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து வெற்றி முடிவு பெறும் முறையில் போரை நடத்தத்தக்க படைத் தலைவர்கள் முன்னிருந்து நடத்துவித்தல் வேண்டும். இவ்வரண்களை அரசாங்கமே பாதுகாத்து நாட்டு பாதுகாப்பிற்காக பயன் படுத்திக்கொள்ள வேண்டும். அரண் அமைப்பது படை உறுப்புகளில் ஒன்றும் நாட்டமைப்புகளில் ஒன்றும் ஆகி இரண்டு வழிகளிலும் தேவைப்பட்டதேயாகும்.

# இல்வாழ்க்கையமைப்பு.

தன்னைக்காத்து தன்னைக்கைகொண்ட கணவனையுங் காத்து பிறர் கூறும் பழிச்சொல் வாராமல் மானம் காத்து சோர்வுடையாமல் வாழ்க்கை நடத்தும் பெண்ணை வாழ்க்கைத்துணையாகக்கொண்டு குடும்பத்தில் இயல்பாக அமையும் தாய் தந்தைகள், மனையாள், மக்கள், ஆகிய மூவருக்கும் துணையாக நின்றும் துறந்தார், வறியோர், (பெலிந்தார்) இறந்தார் ஆகிய மூவரின் குறைகளை ஆன அளவு நீக்கியும், இறந்து விட்ட தம தாய் தந்தைகளின் ஞாபகநாள் விழா ஆதிபகவனை இறை வணக்கம் விருந்தோம்பல், சுற்றந்தழுவுதல், தனையறிஞராக ஆக்கி விடுதல் என்ற ஐந்து செயல்களையும், தலையாயாக நடத்தல் உலகத்தார் நடந்து கொள்ளும் முறைகளை மேற்கொண்டு அவைகளில் தவறுதல்கள் நேராவண்ணம் காத்து இயல்பாக இல்வாழ்க்கை வாழ்பவர்கள் அறிவில் உயர்ந்த மற்றைய மேலான மார்க்கத்தவர்கள் அடையும் நன்னிலையை அடைவார்கள்.

இல்வாழ்க்கை நெறிமுறைகள் ஆண், பெண் இருபாலாருக்குமே ஒரே நீதியாதலால் மற்றைய மக்களுடன் கூடி வாழும்போது அன்புடைமையுடனும் இனியவை கூறியும், செய்நன்றியறிந்தும், நடுவு நிலைமையோடும், அடக்கம் கைக்கொண்டும், ஒழுக்கத்தை உயிரினும் மேலாக அமைத்தும், பிறர் மனையாளை தாய்போல் கருதியும், பொருமை, பேராசை, வஞ்சகப், சூது, பொய் இவைகளை மனதிலும் நினைக்காமல் பெரியாரைத்துணைக் கொண்டு ஈகையிற்சிறந்து புகழ் பெறும் செயலாற்றி

**மெய்ப்பொருளுணர்ந்து அருளுடையாராகி தாமின்புறுவ துலகின்புறக்கண்டு வாழ்க்கை நடத்த வேண்டும்.**

## மெய்ஞ்ஞானமுறை.

உலகத்திற்கே சொந்தமான ஞானிகள் பஞ்சபூதமென்ற மண், தண்ணீர், நெருப்பு, காற்று ஆகாயம் ஆகிய ஐந்தின் செயலும் மண்ணில்—சத்தம்-உணர்வு-உருவம் சுவை-மணம் ஆக ஐந்து செயலும். நீரில்-சத்தம்-உணர்வு உருவம்-சுவை ஆக நான்கு செயலும். நெருப்பில்-சத்தம் உணர்வு-உருவம். ஆக மூன்று செயலும். காற்றில்-சத்தம்-உணர்வு- ஆக இரண்டு செயலும் ஆகாயத்தில் சத்தம் மாத்திரமாயுள்ள ஒரு செயலும் உள்ள உண்மையைத் தெரிந்தும் இவ்வைந்து அறிவே மக்களிடத்தும் கேட்டல், உணர்தல், பார்த்தல், சுவைத்தல் முகர்தல் ஆகி (சுவையொளியூறோசை நாற்றம்) நம்மை நடத்து விப்பதும், மனம், புத்தி, சித்தம், சினம் ஆகிய குணங்கள் அவ்வைந்து புலன்களை மகிழ்விக்க எண்ணங் கொண்டு தனது வாழ்நாளின் முடிவையுமறியாமல் கோடிக்கணக்கான எண்ணங்களை எண்ணி எண்ணி நாள் பல கழிக்காமல் இப்புலனாகிய அறிவுகளின் தன்மையும் செயலின் உண்மை முறையையும் தெரிந்து தெளிதல் வேண்டும்.

தனக்கென்று தனியாக எண்ணும் காமம், வெகுளி, மயக்கம் என்ற மூன்று குணத்தையும் கெடுத்து எப்பொருள் யார் யார் வாயில் சொல்லக்கேட்பினும் அப்பொருளில்மெய்ப்பொருளையறிந்துஎப்பொருள்எத்தன்மை ததானவடிவாயிருப்பினும்அப்பொருளில் மெய்ப்பொருளை

சார்ந்து நிலையில்லாத உடற்பொருளானவைகள் இவை இவை என்றும் நிலையுள்ள அறிவுப்பொருளாதிகள் இவை இவை யென்றும் அறிந்து அவைகளை அடைய கற்றல், கேட்டல், தெளிதல், தவம் முதலியவைகளில் ஐயமறத் தெளிந்து இயற்கையான பூதத்துவ முறைகளையும் அறிந்து அகத்தில் பற்றற்ற விடுதலையும் புறத்தில் எல்லோரும் இன்புறப்பொதுச்செயலும் புரிந்து இன்ப வடிவாக நிலைத்து நீடு வாழ்வார்கள்.

இப்படிப்பட்ட ஞானிகள் ஊழிபெயரினும் தாம் பெயராமல் உறுதியுடன் நின்று நாட்டை நடத்துவார்கள் மன்னர்களும் இவர்களுக்கடங்கி நின்றே ஆட்சி செலுத்துவார்கள் அவ்வித பொது ஆட்சியின்கீழ் வாழும் எல்லோரும் ஞானிகள் வழி நடந்து மக்களுக்கு மக்கள் அன்பு செலுத்தி நுணங்கியகேள்வியராய் வணங்கிய வேதுவாயுடையோராய் ஆற்றல்மிக்க பேரறிவோடு பிறரை வணங்கிப்போற்றி வாழ்த்தி வாழ்வார்கள்.

திருக்குறள் பொருளடக்கம் முற்றிற்று.

# திருவள்ளுவரின் திருக்குறள் அந்தாதியை நன்கு படித்துணர்வதால் அடையும் பலன்கள்.

1. பொது உணர்ச்சி கலந்த பேரறிவை அடைவது.

2. அடிமையற்ற சுதந்திர வாழ்க்கை வாழ்வது.

3. செல்வந்தேடும் வழிகளையும், செலவு செய்யும் வழிகளையும் தெரிவது.

4. இல்வாழ்க்கை நடத்தும் சீர்முறைகளை உணர்வது.

5. அரசியல் ஞானத்தின் முடிவைப்பெற்றுநடத்துவது.

6. மனிதன், கல்லாக, மரமாக, களராக, விலங்காக உள்ள குணத்தை மாற்றி மனிதத்தன்மையடைவது.

7. பிறரை எப்படி நடத்தி, நாம் எப்படி நடந்து பேச்சை எந்த அளவாகப் பேசவேண்டுமென்பதைத் தெரிவது

8. எவை எவைகள் செய்யத்தகாத தீங்கானவைகள் என்பதையறிவது.

9. அன்பின் நிலையும், அருளின் ஒளியும் பெறுவது.

10. நம நாடு நமதேயாக்கி எல்லோரும் ஒன்றுபட்டு பேதமற்ற இன்ப வாழ்வு வாழ்வதும் ஆகும்.

இக்கருத்துக்களை திருக்குறளந்தாதியுள் ஆங்காங்குள்ள குறளாலும், உரையாலும் காண்க.